
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 16.05.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



மேலவைக்கு வைரமுத்து?





ஆறு வாரப்போட்டி அதிரடி!
தங்கக்காசு பரிசு!
தவறவிடாதீங்க...

கோடைக்கால கொண்டாட்டம்!
சுறுசுறு ஸ்பெஷல்

வாட்டாத வகுப்புகள்!


சைபால் எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று
இதம் தந்து
ரணம் ஆற்றும்...
70
FOR EXTERNAL USE ONLY
SAIBOL
for Cuts, Itches, Boils, Eczema, Scabies, Pimples Etc. Etc.
சைபால்
BEST SKIN OINTMENT
எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.
★ வெட்டுக்காயம் ★ முகப்பரு ★ சேத்துப்புண் ★ தேமல் ★ வேனல்கட்டி
★ பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.
உரிமையாளர் : சைபால். S. சங்கரநாராயணன்
Mfrs. : THE SOUTH INDIAN MFG. CO., MADURAI-20. Ph : 2534108



கல்கி

16.05.2010

ஆன்மிகம்

அருள்வாக்கு 33
ஸ்ரீலலிதா 82
ராசிபலன் 42

அமரர் கல்கி பக்கம்

கொலைகார கல்விமுறை 80

அரசியல்

தலையங்கம் 14
தராசு 04
மேலவைக்கு வைரமுத்து 65
மொழியா... நீதியா? 10

சிறுகதைகள்

இரா.எட்வின் 68
முத்துவிஜி 46
சித்தன் 60

தொடர்கள்

வண்ணநிலவன் 34
இந்திராபார்த்தசாரதி 28
லதாசேகர் 66
ஜி.எஸ்.எஸ். 54

சுறுசுறு ஸ்பெஷல்

திறமையின் திருவிழா 58
லகானைப் பிடிங்க 40
பேலன்ஸ் முக்கியம் 20
சம்மர் ஐ.பி.எல். 22
கடல் பார்த்த சந்தோஷம் 26
அரசுப் பயிற்சி அதிரடி 32
சம்மருக்கு செக் 72
கோடை வகுப்பு கொள்ளை 76
பாசி, ஊசி, யோசி 02
செல்லப்பிராணி வளர்ப்பு 08

சினிமா

மிஷ்கின் பேட்டி 44
ஹாலிவுட் ஹீரோ 78
வட்டமேஜை 92
ஆறு வாரப் போட்டி 17



ஷர்மிளா

பாசி, ஊசி, யோசி!

"நகை பிடிக்காத நங்கைகள் இருப்பாங்களா? டிஸைனர் சாரீஸ் மாதிரி, டிஸைனர் நகைகள். அதுவும் தாங்களே டிஸைன் செய்த நகைகளைப் போட்டுக் கொள்ள இப்போ பெண்கள் அதிகம் விரும்பறாங்க. அதனாலதான் சம்மர் சீஸன்ல ஜுவெல்லரி மேக்கிங் க்ளாஸ் ஒரு குவீன் போல வலம் வந்துகிட்டு இருக்கு'' என்கிறார் ஷர்மிளா.

"அஞ்சு வருஷமா ஜுவெல்லரி மேக்கிங் க்ளாஸ் எடுத்துக்கிட்டு இருக்கேன். எட்டாம் வகுப்பு மாணவி தொடங்கி காலேஜ் பெண்கள் பலரின் சம்மர் கேம்ப் சாய்ஸ்ல முதலிடம் ஜுவெல்லரி மேக்கிங்தான். கத்துக் கறதும் ஈஸி, கத்திரி வெயில்ல டைம் பாஸ் பண்ணவும் சௌகரியம். ரெண்டு நாள்ல ஓர் அழகான காது தோடு செய்வது முதல், வளையல், கழுத்துக்கு அடக்கமான செயின் வகைகள், ப்ரேஸ் லெட்டுகள், நெத்திச் சுட்டி என இப்படி அடுக்கடுக்காகக் கற்றுக் கொண்டே போகலாம். ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் அளவில் ஜுவெல்லரி வகுப்பு நடத்தப்படும். ஒரு நகை செய்யத் தேவையான மணிகள் முதல் அனைத்துப் பொருட்களும் ஜுவெல்லரி மேக்கிங் வகுப்புக் கள்லேயே கொடுக்கப்பட்டுவிடும். ஒரு பொருளைத் தாங்களாகவே தங்கள் கைகளால் தயாரித்து அதை உடனேயே அணிந்து போகும் சந்தோஷம் இந்த வெயிலை மறக்கச் செய்து விடுகிறது'' என்கிறார்.

மற்ற கலைகளைப் போலவே இதைக் கற்றுக்கொள்ளவும் தேவை ஆர்வம்தான். வகுப்பில் சொல்லித் தரப்படுவதை அடிப் படையா வைச்சு, அவரவர் கற்பனையில ஆயிரக்கணக்கான டிஸைன்களை உரு வாக்கிக்கிட்டே போகலாம். கொஞ்சம் பொறுமை, கைநேர்த்தி இரண்டும் கூடுதல் தேவை. இரண்டு நாள் வகுப்புகளுக்கான கட்டணத் தொகை எண்ணூறு ரூபாயி லிருந்து சில ஆயிரங்கள் வரை இருக்கும்.

"தங்கம் விக்கற விலைல, தங்களோட ட்ரெஸுக்கு ஏத்த நிறத்துல ஆர்ட் ஜுவெல்லரிகள், ஆர்டிஃபிஷியல் ஜுவெல் லரிகள் அணிந்துகொள்ளவே பெண்கள் விரும்புகிறார்கள். சம்மர் காலத்தில் கற்றுக் கொண்டதை, அப்படியே மேலும் மேலும் டெவலப் செய்துகொண்டு, நன்றாகச் சம்பாதிக்கவும் வழி ஏற்படுத்திக் கொடுக் கிறது எங்கள் வகுப்பு'' என்கிறார் ஷர்மிளா.

– என்.எஸ்.கே.

மலரும் மொட்டுக்கள்!

சம்மர் கேம்ப் என்றவுடன் அது நார்மல் குழந்தை ளுக்குத்தான் என்று எண்ணத் தோன்றும். ஆனால், லோட்டஸ் பவுண்டேஷன் எனும் ஸ்பெஷல் நழந்தைகளுக்கான மையத்தில், சிறப்புக் நழந்தைகளுக்காக மட்டுமே சம்மர் கேம்ப் நடத்தப் படுகிறது. "நார்மல் குழந்தைகளைவிட இந்தக் நழந்தைகளுக்குத்தான் சம்மர் வகுப்புகள் முக்கியம்" ன்கிறார் இதன் இயக்குநர் நந்தினி.

பெற்றோர் இருவரும் வேலைக்குப் போகும் நடும்பத்தில், இம்மாதிரி குழந்தைகளுக்கு ஈடு கொடுப்பது சிரமம். அது மட்டுமின்றி, இதுநாள் வரை பள்ளிக்குச் சென்ற குழந்தையைத் திடீரென வீட்டில் இருக்கச் செய்தால், அந்த மாற்றத்தை ற்றுக்கொள்ளத் திணறும். அதற்காகத்தான் துபோன்ற கேம்ப்புகள்" என்கிறார் இவர்.

ப்ரேயர் மற்றும் மெசேஜ் ஆஃப் தி டேயில் தொடங்கி ஸ்டோரி டெல்லிங், ஆர்ட், ராப்ட், மியூஸிக் என்று லவித வகுப்புகள் நடத் ப்படுகின்றன.



* குழந்தையுடன் நந்தினி

"சில குழந்தை ளுக்கு ஸ்டோரி சொல் தில் ஆர்வம் இருக்கும். லருக்குக் கேட்பதில் ர்வம் இருக்கும். அதற்கு ற்ப அவர்களை ஊக்குவிப் பாம். எதையும் விளையாட் ாகக் கற்றுக் கொடுப்பதுதான் ங்கள் நோக்கம். விரல் நுனிகளைப் பயன் டுத்துவது இவர்களுக்குக் கடினம். அதனால் வற்றில் பயிற்சி கொடுக்க வெட்டுதல், ஒட்டுதல், ரவுதல் போன்ற செயல்களை ஊக்குவிப்போம்.

கலர்களின் மூலம் வேலை செய்வது இவர் ளுக்கு மிகவும் பிடித்தமான மற்றும் முக்கிய ான ஒன்றாகும். வெள்ளைத் தாளைத் தண்ணீரில் னைத்து அதில் சிவப்பு மற்றும் நீலம் ஆகிய றங்களைத் தீட்டக் குழந்தைகளுக்குப் பழக்கு தால் மனஅழுத்தம் குறையும்" என்கிறார் நந்தினி.

- லக்ஷ்மி மோகன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்கள் கேட்டவை

தராசு

● ஜி.ஜெயராமன், சுந்தலூர்

? "மூச்சு உள்ளவரைப் பேசிக்கொண்டிருப்பேன்" என்கிறாரே முதல்வர்?

! பேசிக்கொண்டிருப்பது ஒரு பெரிய விஷயமா? என்ன பேசுகிறார் என்பதல்லவா முக்கியம்? "ராஜா ஒரு தலித் என்பதால், ஆதிக்கச் சக்திகள் அவரைக் குறிவைக்கின்றன" என்பதும் ஒரு



* தீரும் வரை...

பேச்சா? 60,000 கோடி ஊழல் இம்மாதிரி வாதங்களால் மறைந்துவிடாது; குற்றச்சாட்டு வலுப்பெறும்.

● எஸ்.திஷா, ஹோசூர்

? "தெய்வீகம் இல்லாமல் நடத்தப்படும் செம்மொழி மாநாடு உயிர் இல்லாத உடல் போன்றது" என்று வி.எச்.பி. தலைவர் வேதாந்தம் கூறுகிறாரே - தராசுக்கு உடன்பாடா, இல்லையா?

! முழு உடன்பாடுதான். தமிழ் பக்தி இலக்கியங்களில் நயமும் உயிரோட்டமும் ததும்புகின்றன. கட்சியின் கொள்கையான கடவுள் மறுப்பை (அரசினுடைய தாக்கி), மக்கள் மீது திணிக்கலாகாது. மேலும், ஒரு மொழியின் அனைத்து வகை இலக்கியங்களையும் விருப்பு வெறுப்பின்றி ஏற்கும் பக்குவம், மொழி மாநாடு நடத்துவோருக்கு இருக்கவேண்டும். விவிலியத் தமிழாக்கமும் உமறுப்புலவரின் சீறாப்


காந்திஜிக்கு

புராணமும் ஏற்கப்பட வேண்டும். கடவுள் மறுப்புக் காவியம் என்று ஒன்று எழுதப்பட்டிருப்பின், அதுவும் தமிழில் உதித்த சிந்தனை என்பதால், மாநாட்டின் கருப்பொருளாக்கப்பட வேண்டும். தமிழுக்குத்தான் மாநாடே தவிர, சார்பு நிலைக்கு அல்ல!

● என்.காளிதாஸ், சிதம்பரம்

? ஒட்டுமொத்தமாக பிளாஸ்டிக்குக்குத் தடைவிதிக்க முடியாது என்று சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் சொல்கிறாரே?


! உண்மைதான்; ஆனால், தெருவெல்லாம் பறக்கும் பிளாஸ்டிக் பைகளுக்கும், மூலைக்கு மூலை எறியப்படும் பிளாஸ்



* இலட்சிய லட்சங்கள்



* படிப்படியாய்த் தடை!



* அபாய முன்னோடி!



கோயில் தேவையா?

டிக் டப்பா, பாட்டில், கோப்பைகளுக்கும் முதலில் தடைவிதிக்கலாம். இவை இல்லாமல் நாம் எத்தனையோ பல ஆண்டுகள் வாழ்ந்துதான் இருக்கிறோம். படிப்படியாக இதர பிளாஸ்டிக் பொருள்களுக்கும் தடைவிதிப்பது அவசியமே.

● **ஜி.மஹாலிங்கம், காவல்காரபாளையம்**

? "நளினிக்குத் தண்டனைக் குறைப்பு அளித்து விடுதலை செய்வதைத் தடுப்பதற்காகத்தான், செல்ஃபோன் பறிமுதல் செய்யப்பட்டதாகப் பொய் புகார் கூறப்படுகிறது" என்று அவரது வக்கீல் கூறியிருப்பது பற்றி...?

! கடந்த இரண்டு வருடங்களாக நளினி அந்த ஃபோனைப் பயன்படுத்தி வருகிறார் என்பதைப் பார்க்க, அவரது வக்கீல் சொல்வதுபோல் இது பொய் புகாராக இருக்க முடியாது. ஆனால், நளினி செல்ஃபோன் உபயோகித்து வந்ததைக் கண்டும் காணாமல் இருந்த சிறைத்துறை, அவருக்கு தண்டனைக் குறைப்பு மறுக்கப்பட்டதை ஊருக்கு நியாயப்படுத்தும் முகமாக, இப்போது திடீரென அதைப் 'பறிமுதல்' செய்துள்ளதோ என்கிற சந்தேகம் எழத்தான் செய்கிறது.

● **கு.ப.இரகுநாதன், பூவிருந்தவல்லி**

? 'திருமணத்துக்கு முன் உறவு' என்ற குஷ்புவின் பேச்சால் போடப்பட்ட 22 வழக்குகளும் 'தள்ளுபடி' என்ற செய்தி, குஷ்புவின் பேச்சை நியாயப்படுத்தி விடும் போலிருக்கிறதே?

! தீர்ப்பைக் கவனமாக முழுதும் படித்தால், நீதிமன்றம் குஷ்புவின் கருத்தை நியாயப்படுத்தவில்லை என்பது விளங்கும்; அவரது கருத்துச் சுதந்திரத்தைத்தான் அங்கீகரித்திருக்கிறது. ஆனால், தீர்ப்பின் தொனியும் மீடியா அதனை வழங்கிய தொனியும் குஷ்புவின் கருத்தைப் பிரதிபலிப்பது போல் அமைந்ததுதான் துரதிர்ஷ்டம். ஒரு பிரபலத்தின் கருத்துகள் அதிக விளம்பர வெளிச்சம் பெறுகிறபோது, சமுதாயத்தின் கருத்தே திசை மாறும் அபாயம் இருக்கத்தான் செய்கிறது.

● **எஸ்.கந்தசாமி, திருச்சி** ❑

? தமிழ்வழி ஆரம்பக் கல்வி மிகவும் மோசமாக இருக்கிறது என்று முன்னாள் துணைவேந்தர் வசந்தி தேவி வேதனைப்பட்டுள்ளாரே?

! அஸ்திவாரம் இவ்வளவு பலவீனமாக இருந்தால், செம்மொழி மாநாடு, தமிழ் மூலம் உயர் கல்வி, உயர்நீதிமன்றத்தில் தமிழ் போன்ற மாளிகைகளை எழுப்ப முடியாது. கூடாரம்தான் போடலாம்.

● **'மலை' ரத்தினசாமி, மத்தூர்**

? காந்திக்கு சர்வதேசக் கோயில் என்ற



* எண்ணிக்கை எதிர்பார்ப்பு



* கருத்துக் கசிவு



* செல் சந்தேகம்

குஜராத் முதல்வரின் அறிவிப்பு குறித்து...?

! வழிபாட்டுத் தலம் தேவையற்றது. நினைவுச் சின்னம் எனில், குஜராத்தில் உள்ள மகாத்மா தொடர்பான நினைவிடங்களைக் கவனமாக, சிறப்பாகப் போற்றிப் பாதுகாத்தாலே போதும். அதோடு, 'ஈசுவர அல்லா தேரா நாம்/ சப்கோ சன்மதி தே' பகவான்' - காந்திஜிக்கு விருப்பமான ரகுபதி ராகவ பாடலின் வரிகள். இவற்றை அன்றாட வாழ்விலும், அரசியல் கொள்கைகளிலும் ஏற்று நடப்பது எப்பேர்ப்பட்ட கோயிலை விடவும் மேலானது.

● **ஏ.எஸ்.யோகானந்தம்,**
கலிங்கியம்

? **'இளைஞன்' திரைப்படத்துக்காகத் தமக்கு வழங்கப்பட்ட 45 லட்சம் ஊதியத்தை தமிழக முதல்வர் நிவாரண நிதியில் சேர்த்து, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காகச் செலவிட முன்வந்துள்ளாரே முதல்வர்?**

! மனமார வாழ்த்தப்பட வேண்டிய செயல்.

● **அ.ராஜா ரஹ்மான், கம்பம்**

? **ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றை விரைந்து முடிக்க வேண்டுமானால் கோர்ட்டுகள், நீதிபதிகள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கேட்டுக் கொண்டிருக்கிறாரே?**

! அது மட்டும் போதாது. வழக்குகளுக் அனாவசிய வாய்தா கொடுப்பதும், ச மில்லாத வழக்குகளைப் பதிவுசெய்வது நிறுத்தப்பட வேண்டும். இப்போதுள் சூழலில், நீதிமன்றங்களில் நீதிபதிகளி அதிகாரத்தைக் காட்டிலும் வழக்கறிஞ களின் ஆளுமையே ஓங்கியிருக்கிற இந்த நிலைமை மாறும்போது, வழக்குக தாமாகவே விரைவுபடுத்தப்படும்.

● **எஸ்.சுவாமிநாதன்,**
மன்னார்குடி

? **இன்றைய சமுதாயத்தில் ஹரிகதா காலட்சேபங்களெல்லாம் அவசியந்தானா?**

! என்றைய சமுதாயத்திலும் அவசிய - அவை வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தார்மிக நெறிகளைத் திரும்பத் திரும்ப நினைவூட்டுவதால். இன்றைய சமுதாயத்துக்கு மிக மிக அவசியம் - அந் நெறிகள் மிகுந்த அச்சுறுத்தலுக்கு உ ளாகியிருக்கின்றன என்பதால்.

❑ ரூ.150 பரிசு பெறுபவர்:
எஸ்.கந்தசாமி, திருச்சி.

* ரூ. 75 பிரிசு பெறுபவர்
எஸ்.சுவாமிநாதன், மன்னார்குடி

● **உமரி பொ.கணேசன், மும்பை**

? **நல்வாழ்வுக்குத் தேவை ஒழுக்கம் அது இப்போது குறைந்து வருவதன் காரணம் என்ன?**

! முன்னோடிகளாக இருக்க வேண்டிய முக்கியஸ்தர்களும் தலைவர்களுமே துணிந்து ஒழுக்க மீறலில் ஈடுபடுவது முக்கிய காரணம் - சமீபத்திய உதாரணம், கர்நாடகா பா.ஜ.க. அமைச்சர் ஹாலப்பா.



50 சவரன் தங்கப் புதையல் உங்களுடையது... *1000-ம் ரூபாயில்!

VBC Jewellery
POT OF Gold 2010
JEWELLERY SAVING SCHEME

VBC வழங்கும் தங்கப் புதையல் 2010. 15 மாத சேமிப்பு திட்டம். இதில் சேர்ந்து உங்கள் தங்க சேமிப்பை அதிகரித்துக் கொள்ளுங்கள். **அத்துடன், 50 சவரன் தங்கத்தை வெல்லும் பொன்னான வாய்ப்பும் உங்களுடையதே.** அதுமட்டுமல்ல ... 14 மாதங்களுக்கு மட்டுமே பணம் செலுத்துங்கள். **15வது மாத தவணையை VBC செலுத்தும்.**

ரூ. 1000/-, ரூ. 2000/-, ரூ. 5000/- தொகையில் சேமிப்புத் திட்டத்தில் சேரலாம். பதிவு செய்யும் போதே உங்கள் மாதத் தவணையை பொறுத்து 1, 2 மற்றும் 5 போட்டி கூப்பன்களை நீங்கள் பெறலாம். **இதன் மூலம், 50 சவரன் வரை தங்கப் புதையலை பம்பர் பரிசாக வெல்லக் கூடிய வாய்ப்பும் உள்ளது.**

இப்போட்டியின் முதல் குலுக்கல் ஜனவரி 2011 முதல் தொடங்குகிறது. இந்த சேமிப்பு திட்டத்தில் உடனே சேருங்கள், கவர்ச்சிகரமான பரிசுகளை அள்ளுங்கள்.

VBC Jewellery

HOUSE OF VUMMIDI

Panagal Park	Opp. Vani Mahal
11-B, Nageswara Rao Road,	78, G.N. Chetty Road
T.Nagar, Chennai - 600 017	T.Nagar, Chennai - 600 017
Tel: 2434 2407 / 6297	Tel: 2834 3650 / 3655

www.vbcjewel.com

**A contest of skill



செல்லப்பிராணி வளர்க்கக் கத்துக்கலாமே!

'ஹைய்யா விட்டாச்சு லீவு' என வீட்டில் உள்ள குட்டீஸ்கள் குதூகலிக்க, 'ஹைய்யய்யோ விட்டாச்சா லீவு?' என சம்மரையும், சம்மரோடு வீட்டில் சவுண்டு விட்டபடி ரவுண்டு கட்டும் குழந்தைகளையும் சமாளிக்க, எந்த சம்மர் கேம்பில் அவர்களைச் சேர்க்கலாமெனக் குழம்பித் தவிக்கும் பெற்றோரா நீங்கள்..?

இதோ, சரியாக இருபத்திரண்டு நாட்கள் - விதவிதமான தீம்களுடன் சம்மரைக் கொண்டாட, உங்களையும் உங்கள் குழந்தைகளையும் சேர்த்தே அழைக்கிறது Storytrails என்கிற அமைப்பு.

❑ ஒருநாள் முழுக்க சாக்லேட்களுடன் இனிக்க இனிக்க, நீங்கள் செலவிடத் தயாரெனில், உங்களுக்காக ஒரு சாக்லேட் தினம் காத்திருக்கிறது. காலை 10 மணி முதல் 12.30 மணி வரை சாக்லேட் தயாரிப்பது எப்படி என குட்டீஸ்களுக்குப் பாடம் சொல்லித் தருகிறது ஸ்டோரிட்ரெய்ல்ஸ். குட்டீஸ் தயாரித்த சாக்லெட்டுகள் அவர்களுக்கே சுவைக்கவும்

வழங்கப்படுகிறது. பிறந்த நாள், பண்டிகை நாள்னு எது வந்தாலும், இனி உங்கள் வீட்டில் குழந்தைகளே சாக்லெட்டுகளைத் தயாரித்து விடுவார்கள்.

❑ 'கிராம வாழ்க்கைன்னா என்ன, அது எப்படி இருக்கும்' என உங்கள் குழந்தைகள் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டால் அவர்களை அனுப்ப வேண்டியது ஸ்டோரிட்ரெய்ல் நடத்தும் வில்லேஜ் ட்ரெயிலுக்கு. ஒருநாள் முழுதும் திருக்கழுக்குன்றம் சுற்றுவட்டாரத்திலுள்ள கிராமத்துக்குச் சென்று, வித்தியாசமான நாளைச் செலவிட அழைத்துச் செல்கிறார்கள்.

❑ பூக்களைப் பற்றியும், பூக்களோடு சேர்ந்து விளையாடும் பலவிதமான வண்டுகளோடும் உங்கள் வீட்டு, நண்டூஸ் அன்ட் சுண்டூஸ் விளையாடணுமா...? அவங்களை மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பார்க்குல, மே 15-ஆம் தேதி ஸ்டோரிட்ரெய்ல் நடக்கப் போகிற flowers & insects trailக்கு அனுப்புங்க.

❑ குட்டீஸ்களுக்குச் செல்லப் பிராணிகள் மீது அதீத அக்கறையும், செல்லமும் உண்டா? அப்போ மே 17ஆம் தேதி, Animal care trailலின் வழி உங்க குழந்தைகளுக்குச் செல்லப் பிராணிகளைப் பற்றிய சின்னச் சின்ன கதைகளைச் சொல்லி, அவற்றைப் பராமரிப்பது எப்படி எனச் சொல்லித் தர இருக்காங்க.

❑ தீயணைப்பு வீரர்கள் தீ விபத்து வந்தா எப்படிச் செயல்படறாங்கன்னு தெரிஞ்சுக்க ஆசைப்படற குழந்தைகளை எக்மோரில் உள்ள தீயணைப்பு ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று ஆசை ஈடேற்றுகிறார்கள்.

ஹாப்பி சம்மர் ஹாலிடேஸ் சுட்டீஸ்!

- என்.எஸ்.கே.



டெல்லி செய்தி

ஆ.ராஜா அமைச்சர் பதவியில் நீடிப்பாரா? அழகிரி என்ன செய்யப் போகிறார்? அன்புமணிக்கு, தி.மு.க. ராஜ்ய சபா வாய்ப்பு கொடுக்குமா? கனிமொழிக்கு மத்திய அமைச்சர் பதவி எப்போது? சட்டமன்றத் தேர்தல் முன்கூட்டியே வருமா? - இந்தக் கேள்விகளெல்லாம் கருணாநிதியின் டெல்லி விஜயத்துக்கு முன் எழுந்தவை. இதற்கான பதில்கள் தெளிவாகத் தெரியாவிட்டாலும், வதந்திகளாகக் கசியத் துவங்கிவிட்டன. துரைமுருகனும், பொன்முடியும், ஆ.ராஜாவும்... கலைஞர் கூடவே இருப்பதுபோல மீடியாவில்

'மொழி' முன்னே... 'நிதி' பின்னே...





காட்சியளித்தாலும், பிரதமர் மற்றும் சோனியா வீட்டுக்குக் கருணாநிதியோடு சென்றவர்கள் டி.ஆர். பாலு, கனிமொழி, தயாநிதி மாறன் மட்டுமே. இருவர் வீட்டிலும் பரஸ்பரம் வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்ட பின், 'ஒன் டு ஒன்' என்ற அளவில் அரசியல் பேச்சுகள் நடந்தன. அப்போது உடன் இருந்தவர் கனிமொழிதான்'' என்கிறார் டெல்லியின் மூத்த தமிழ் நிருபர் ஒருவர்.

''தி.மு.க.வின் டெல்லி முகமாக தயாநிதி மாறன் இருந்த காலம் போச்சு. என் சார்பாக இங்கே இயங்குபவர் கனிமொழி மட்டுமே'' என்ற கருணாநிதியின் மௌனச் செய்தி காங்கிரஸ் தலைமைக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார் அந்த நிருபர். டெல்லி, தமிழ்நாடு இல்லத்தில் தமிழகத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை முதல்வர் சந்தித்து முடித்தபின், அந்த அதிகாரிகள் கனிமொழியையும் ஸ்பெஷலாக நலம் விசாரித்துவிட்டுப் போனார்களாம்.

ஆனால், தயாநிதி வட்டாரம் இதை பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லையாம். எதிர்காலத்தை மனத்தில் வைத்து ஸ்டாலின் நெருக்கமே நமக்குப் போதும் என இருக்கிறாராம் தயாநிதி.

இச்சூழலில் பாராளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்தபின், ஆ.ராஜாவின் இலாகா மாற்றம் உறுதி என்கிறார்கள்.

''இம்மாற்றத்தைக் கண்டிப்பாக நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். மற்றபடி நீங்கள் யாரை வேண்டுமானாலும் அமைச்சராகப் போட்டுக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டதாம் காங்கிரஸ். அன்புமணி விவகாரத்தையும் தி.மு.க.வே முடிவு செய்யட்டும் என்று கூறிவிட்டதாம். தமிழகச் சட்டமன்றத் தேர்தல், குறித்து, செம்மொழி மாநாட்டுக்கு பிறகு பேசலாம் என்கிறதாம் காங்கிரஸ்.

கருணாநிதி டெல்லிக்குப் போவதற்கு முன் கலகலப்புடன் இருந்த தி.மு.க. வட்டாரத்தில், இப்போது ஓர் இறுக்கமான அமைதி.

- நமது சிறப்பு நிருபர்



உதவும் கரங்கள்

என்ற தொண்டு நிறுவனம் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பொது மக்களின் நன்கொடையை மட்டுமே கொண்டு, மனநலம் பாதிக்கப்பட்டோர், கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற முதியோர் என 1800க்கும் மேற்பட்டவர்களை பராமரித்து வருகிறது.

தாயுள்ளம் கொண்டு, பிள்ளைகளையும், பெண்களையும் மிகுந்த கவனத்துடன் பராமரிக்க 35-50 வ்யதுக்குட்பட்ட +2 படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

உணவு, தங்கும் வசதியோடு, மாதந்தோறும் தகுந்த ஊக்கத் தொகையும் அளிக்கப்படும்.

மேலும் ஆசிரியர்கள்,
செவிலியர்கள்,
சமையற்காரர்கள்,
தோட்டக்காரர்கள்,
பெயிண்டர்கள்,
உதவியாளர்களும்
விண்ணப்பிக்கலாம்.

புகைப்படத்துடன்
விண்ணப்பிக்க
வேண்டிய முகவரி



உதவும் கரங்கள்
460 N.S.K. நகர்
அரும்பாக்கம்
சென்னன - 600 106
தொலை பேசி எண்:
99401 88011 /
93616 59005

(உதவும் கரங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைக்கு வருமான வரி சட்டம் 80Gன் கீழ் வரி விலக்கு உண்டு.)

தடதடவென பாப்பும் ராப்புமாக சிறுசுகளா லும், கல்லூரி இளசுகளாலும் அதிர்ந்துகொண் டிருந்தது கோவை ஆர்.எஸ்.புரத்திலுள்ள ஷெரிஃபின் டாப் ட்யூன் ஸ்கூல் ஆஃப் டான்ஸ். இந்த ஷெரிஃப் விஜய் டீ.வி. நடத்திய 'யார் அடுத்த பிரபுதேவா' போட்டியில் பட்டம் வென்றவர். ஷெரிஃப்போடு பேசினோம்.

வழக்கமான நடனங்களை மட்டுமே சம்மர் கேம்பிலும் சொல்லித் தருகிறீர்களா?

''இந்த வருடம் கொஞ்சம் வித்தியாசமா ஜிம்னாசியம், யோகான்னு புதுசாப் புகுத்தியிருக் கிறோம். நடனத்தின் ஸ்டெப்ஸ் flexibleஆக இருப்பதற்கு இவை ரொம்பவும் உதவுகின்றன!''

பதினைந்து நாட்களுக்கு ஒரு பிரிவு என்று நடத்துகிறோம். நிறையப் பேர் ஆர்வத்துடன் சேர்ந்திருக்கிறார்கள்.''

டான்ஸ் எந்த விதத்தில் குழந்தைகளுக்கு உதவுகிறது?

''புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்கிறார் கள். மேலும் குழந்தையின் மனசும் உடம்பும் சுத்தி கரிக்கப்படுகிறது. சின்னத்திரை பலவித நடனப் போட்டி



♦ ஷெரிஃப்

களை நடத்துவதால், பெற்றோ கள் குழந்தைகள் இருதரப்பிலும் ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையு தூண்டி விட்டிருக்கிறது. அதனா நடனப் பயிற்சிக்கு அதி வரவேற்பு இருக்கிறது.''

பயிற்சிக்காலம் ரொம்பவு குறுகியதாக இருக்கிறதே நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க இ



கூல்


போதுமா?

''முதலில் இதுபோல சம் கேம்ப்பில் நுழைபவர்கள், அதி ஈடுபாடாகித் தனிப் பயிற் மூலம் எங்களிடமே கற்று கொள்கிறார்கள். அப்படி நிறைய பேர் இங்கு தொடர்ந்து வந் கொண்டு இருக்கிறார்கள்.

Summer camp-ல் கற்று

கொள்ளும் சின்னக் குழந்தைகள் கூட tage performanceல் பயமின்றி அசத்து றார்கள்.

தனிப்பட்ட முறையில் கற்றுக் கொண்டு வருபவர்கள், பல லெவல் ளில் வெளிப் போட்டிகளில் கூடப் பங் கேற்று வெற்றி பெறுகிறார்கள். உதா ணத்துக்கு எங்கள் மாணவர் சுகவனேஷ், ழம்பெரும் நடிகர் குண்டுக் கல்யாணம்




டுத்து வரும் சினிமாவில் நடிக்கிறார். ல மாணவ மாணவிகள் விளம்பரப் டங்களில் நடனமாடுகிறார்கள்.

இதுதவிர, கல்லூரி மாணவ மாணவிகளுக்குத் தனியாக க்ளாஸிக்கல் டான்ஸ் கேம்ப் நடத்தவும் இருக்கிறோம்'' ன்கிறார் ஷெரிஃப்.

செய்திச் சித்திரம் : **ஆர்.பாலா**



கல்கி



2010 மே 16
விக்ருதி வைகாசி 2
மலர் : 68
இதழ் : 42

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


பாகிஸ்தான் : பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்!

க஭ாப் குற்றவாளி என்று சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய அதே தினத்தில்தான், ஃபைஸல் ஷாஷத் அமெரிக்காவில் கைதாகியிருக்கிறார் - நியூயார்க் நகர இதயப் பகுதியில் கார் வெடிகுண்டை வெடிக்கச் செய்ய முயன்றதற்காக. இருவருமே பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஃபைஸல் ஷாஷத் அமெரிக்கக் குடிமகன் என்ற போதிலும், பாகிஸ்தானிலிருந்து வந்து குடியேறியவரே. சதித் திட்டத்தை நிகழ்த்த முற்படும் முன், சிலமுறை பாகிஸ்தான் சென்று திரும்பியிருக்கிறார். கஸாபோ முழுமுதல் பாக். குடிமகன். தமது சதித்திட்டம் பாகிஸ்தானில் தீட்டப்பட்டதை ஒப்புக் கொண்டிருக்கிறார். இச்சம்பவங்கள் மூலம், பயங்கரவாத நிகழ்வுகளில் பாகிஸ்தானுக்கு இருக்கிற நேரடி - மறைமுகத் தொடர்புகள் முன்னெப்போதைக் காட்டிலும் உறுதிப்பட்டுள்ளன.

அமெரிக்க உளவுத் துறையும் காவல் துறையும், பயங்கரவாதிகள் ஒவ்வொருவரும் பிடிபடுவர் என்று சபதம் செய்துள்ளன. இந்திய (மும்பை) சிறப்பு நீதிமன்ற நீதிபதி தஹிலியானி, கஸாப் இந்தியா மீது போர் தொடுத்ததாகத் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். பிற நாடுகளை அச்சுறுத்தி, அழிக்கும் திட்டங்கள் உருவாகும் பூமி பாகிஸ்தான் என்பது இவ்வளவு தூரம் வெளிச்சத்துக்கு வந்த பிறகும், அமெரிக்க அரசு பாகிஸ்தானோடு ராணுவ - பொருளாதார ஒப்பந்தத்தைத் தொடர்வதில் அர்த்தமே இல்லை.

பாக். அரசாங்கம், தான் பயங்கரவாதிகளை ஆதரிப்பதில்லை என்று எப்போதுமே கூறி வந்திருக்கிறது. ஆனால், ஜிஹாத் என்ற





பயரில் கொலையும் பயங்கரவாதமும் வளர்வதற்கு பாக். அரசு, ஆரம்பக் காலத்தில் நேரடியாகவும் பின்னர் மறைமுகமாகவும் நிறைய ஆதரவு காட்டி வந்திருக்கிறது. இது உலகறிந்த உண்மை. அந்த பயங்கரவாதம் இப்போது பாக். மீதேகூட அவ்வப்போது திரும்புகிறது என்பதால், பாக். அரசின் முந்தைய தவறுகளை, அக்கிரமங்களை நாம் மறந்து, மன்னித்துவிட முடியாது. மேலும், இன்றைய பாகிஸ்தான் அரசு, மத அடிப்படைவாதிகளுக்கு அஞ்சி, பயங்கரவாதிகள் பரில் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. பிற நாடுகளில் பாக். பயங்கரவாதிகள் நிகழ்த்தும் அட்டூழியங்களைக் கண்டிக்கவும் அதற்கு மனம் இல்லை; கௌரவம் இடங்கொடுக்கவில்லை. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல், தனக்கும் அந்நிகழ்வுகளுக்கும் தொடர்பு இல்லை என்று கை கழுவப் பார்க்கிறது. ஆனால், பாகிஸ்தானில் தீட்டப்படும் பயங்கரவாதச் திகள் இந்தியா மட்டுமின்றி பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பா என்று பல நாடுகளில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

பாகிஸ்தானுக்கு அளிக்கும் ராணுவ - பொருளாதார உதவிகளை அமெரிக்கா அடியோடு நிறுத்த இதுவே உகந்த தருணம். சர்வதேச ஆதரவுடன் இதைச் செய்வதும் இப்போது சாத்தியம்.

ஒரு நெருக்கடிக்கு உள்ளாகிறபோதுதான் வேறு வழியின்றி, உள்நாட்டில் வளரும் பயங்கரவாதத்தை ஒடுக்கவும் ஒழிக்கவும் பாக். அரசு நிர்ப்பந்திக்கப்படும். ஜிஹாதிக்குப் பயிற்சி தரும் மதரஸாக்கள், மத அமைப்பு என்ற போர்வையில் வளரும் பயங்கரவாத அமைப்புகள், ஆஃப்கானிஸ்தானிலிருந்து ஊடுருவும் கொலைவெறிக் கூட்டங்கள் என அந்நாட்டில் களையப்பட வேண்டிய கொடுமைகள் அடர்ந்துவிட்டன. அவை எவ்வளவு விரைவில், எவ்வளவு முழுமையாக அழிக்கப்படுகின்றன என்பதோ, அமெரிக்க அரசின் கையில்தான் இருக்கிறது. பாகிஸ்தானின் கையை முறுக்க அமெரிக்கா தயங்கினால், அது பயங்கரவாதத்துக்கு ஆதாயமாகவும் அமெரிக்காவுக்கு ஆபத்தாகவும் முடியும்! ●

யோகம் தரும் ஹோமம்!





"புத்திர காமேஷ்டி யாகம் செய்ததன் பயனாக ராமன் அவதரித்தான்" என்பது ராமாயணம். துருபதன் நிகழ்த்திய வேள்வித் தீயில் வெளிப்பட்டாள் திரௌபதி என்பது மகாபாரதம். வேதங்களும் அக்னி முகமாக ஆராதிப்பதைச் சிறப்பித்துச் சொல்கின்றன. திருமணம், உபநயனம், கோயிலில் கும்பாபிஷேகம் உட்பட எல்லா மங்கலச் சடங்கிலும் ஹோமங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

"ஹோமங்களில், விசேஷமானது மஹாருத்ர ஹோமம்! பரமனான சிவபிரானின் திருவுருவை - அவரது சிறப்பை விவரித்துப் போற்றுகிறது ஸ்ரீருத்ரம்! வேதத்தில் இடம்பெறும் இந்த ஸ்ரீருத்ரத்தைச் சொல்லி நடத்தப்படுவது மஹாருத்ர ஹோமம்!" என்கிறார் ஆருத்ரா சேவா சாரிடபிள் டிரஸ்ட்டின் நிர்வாகி சோமசுந்தரம்!

இந்த ஹோமம் ஐந்து முகங்களைக் கொண்ட ருத்ராட்சப் பந்தலின் கீழ் நடைபெற இருக்கிறது. பதினைந்து லட்சம் பஞ்சமுக ருத்ராட்சங்களால் ஆன இந்தப் பந்தலை, திரைப்படத்துறை கலை இயக்குனரான கிருஷ்ணமூர்த்தி அமைத்திருக்கிறார்.

* சோம சுந்தரம்

ருத்ராட்சம் என்பது சிவபிரானின் கண்ணில் இருந்து உருவானது என்று புராணங்கள் சொல்லும். அவற்றில் பல வகைகளும், அதற்கேற்ப பலன்களும் சொல்லப்படும். குறிப்பாக, 'ஐந்து முக ருத்ராட்சம்' - தெளிந்த அறிவு, வாழ்வில் மகிழ்ச்சி ஆகியவற்றை அளிக்கக் கூடியது. ஜபம் செய்பவர்களுக்கு விசேஷமான பலனளிப்பது என்று நூல்கள் கூறுகின்றன.

சென்னை, திருவான்மியூர், டாக்டர் வாசுதேவ நகர், எண்24-ல் உள்ள ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனை சிட்டி சென்டரில் நடைபெற இருக்கிறது இந்த மஹாருத்ர ஹோமம். மே மாதம் 14, 15, 16 ஆகிய மூன்று தினங்களும் நடைபெறும் இந்த ஹோமத்தில் 150 வேத விற்பன்னர்கள் பங்கேற்றுச் செய்கிறார்கள்.

"சரி; எதற்காக இந்த ஹோமம்?" என்றால், பனிச்சென்று பதில் சொல்கிறார் சோமசுந்தரம்.

"அமைதியான வாழ்வு, ஆரோக்கியம், நீண்ட ஆயுள், வறுமையின்மை... இவை அனைவருக்கும் கிடைக்க வேண்டும். அதற்காகத்தான் இந்த யாகம்! இதில் மதுரை ஆதீனம், திருவாவடுதுறை இளைய சன்னிதானம், மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீசக்ர பீடாதிபதி உட்படப் பலர் கலந்து கொள்கிறார்கள்."

அனைவரும் பங்கேற்கும் விதத்தில், அறுபதாயிரம் சதுர அடியில், வெயில் தாக்காமல் பந்தல் அமைத்திருப்பது இன்னும் விசேஷம்!

- அநிருத்

கல்கி

Sri Pavani JEWELS இணைந்து வழங்கும்

கோடைக்கால கொண்டாட்டம்


ஆறு வார அதிரடி போட்டி!

கல்கி வழங்கும் கோடைக்கால கொண்டாட்டம், அதிரடியான போட்டிகளோடும், அசத்தலான தங்கக் காசு பரிசுகளோடும் வருகிறது வாசகர்களே... அந்தந்த வாரம் ஸ்பெஷலை அடிப்படையாக வைத்தே போட்டிகள்...

இந்த வாரம் கோடைக்காலக் கொண்டாட்டத்தில் 'சம்மர் க்ளாஸ் ஸ்பெஷல்' என்பதால் கோடை வகுப்புகளை அடிப்படையாகக் கொண்ட

கோடைக்கால போட்டி-3

இதோ...



விதிமுறைகள்:

வாசகர்களே! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவைதான்.

- கல்கி வழங்கும் கோடைக்கால கொண்டாட்டம் ஆறு வாரப் போட்டி இந்த இதழோடு சேர்த்து ஆறு வாரங்கள் வெளியாகும். (போட்டி-1, மற்றும் போட்டி - 2 முறையே மே 2, மே 9 இதழ்களில் இடம்பெற்றன)
- ஒவ்வொரு வாரமும் வெளியாகும் போட்டிக்கான விடைகளை நிரப்பி, போட்டிப் பக்கங்களைக் கத்தரித்து பத்திரப்படுத்தவும். (17 - 18 பக்கம் முழுவதையும்).

- ஆறாவது வாரம் ஸ்பெஷல் போட்டியும் உண்டு.
- ஆறுவார போட்டிப் பக்கங்களை ஒன்றாக இணைத்து அனுப்ப வேண்டும்.
- ஆறு வாரப் போட்டிப் பக்கங்கள் வந்து சேரக் கடைசித் தேதி : **10.06.2010**
- சரியான விடை எழுதிய வாசகர்களுள், குலுக்கல் முறையில் தேர்வாகும் ஆறு அதிர்ஷ்ட சாலிகளுக்கு தலா கால் சவரன் தங்கக் காசு பரிசு.
- சரியான விடை எழுதி, ஸ்பெஷல் போட்டியின் அடிப்படையில் தேர்வாகும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு ஒரு சவரன் தங்கக் காசு பரிசு.
- ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

ஆறு வாரங்களுக்கு உரிய போட்டிப் பக்கங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:

கோடைக்காலப் போட்டி, கல்கி

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இடது புறம் உள்ள கோடைப் பயிற்சி வகுப்புகளுக்குப் பொருந்தும் சொற்கள், வலது புறத்தில் வரிசை மாறியுள்ளன. எண்களுடன் எழுத்துக்களைச் (கட்டத்தில்) சரியாகப் பொருத்தி எழுத வேண்டும்.

1. நீச்சல்		அ) சக்கரங்கள்
2. சமையல்		ஆ) செக்(
3. கராத்தே		இ) ஜாக்கி
4. ஸ்கேட்டிங்		ஈ) பட்டர்ஃப்ளை
5. குதிரையேற்றம்		உ) இனி கட்டார் குடிமகன்
6. கிரிக்கெட்		ஊ) சோயிப் மாலிக்குடன்
7. செஸ்		எ) வெறும் கை
8. ஓவியம்		ஏ) மார்கழியில் ஸ்பெஷலாக
9. டென்னிஸ்		ஐ) தமயந்தியின் கணவன்
10. கோலம்		ஒ) ஆஷஸ்

உருவாக்கம் : ஜி.எஸ்.எஸ்

கோடைக்காலப் போட்டி - 3

பெயர் : ....

முகவரி : ....

....

....

தொலைபேசி: ....



சோ எழுதிய

ஹிந்து மஹா சமுத்திரம்



வேதங்கள் தொடங்கி, உபநிஷத்துக்கள் வழியே வேதாந்த சிகரத்தில் ஏறி; சாத்திரம் கண்டு; புராணங்கள் வழங்கி, ஆலயங்கள் எழுப்பி; பக்தி வளர்த்து; சரித்திரம் எழுதி; நீதி பல வகுத்து; சட்டம் இயற்றி; சமூக சிந்தனையில் ஆழ்ந்து; விஞ்ஞானம்; கணிதம்; இலக்கியம்; வான சாத்திரத்தை அதன் கரையோரத்தில் நின்று பார்த்தவருக்கு ஏற்பட்ட பிரமிப்பை, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

முதல் பாகம் ரூ.200.00

யுகங்களின் காலக்கணக்கு, பெயர்க்காரணம், யாகங்கள், தெய்வங்கள், உருவங்கள், வாஹனங்கள், வேதங்கள், உபநிஷத்துக்கள், தத்துவங்கள், எமதர்மன் உபதேசங்கள், மரணத்திற்குப் பின், வருணனின் உபதேசம், நாரதர் பெற்ற உபதேசங்கள், ப்ரம்ம ஸூத்ரம் - போன்ற பல தகவல்கள்.

இரண்டாம் பாகம் ரூ.250.00

ஷடங்கங்கள், ஸ்ம்ருதிகள், தர்மம், சட்ட தத்துவங்கள், அர்த்தசாஸ்திரத்தில் கூறப்படும் அரசு நிர்வாகம், பிரம்ம புராணம், பத்ம புராணம், விஷ்ணு புராணம், சிவ புராணம், நாரத புராணம், மார்க்கண்டேய புராணம், அக்னி புராணம், பவிஷ்ய புராணம், பிரும்ம வைவர்த்த புராணம், லிங்க புராணம், வராஹ புராணம், ஸ்கந்த புராணம், மத்ஸ்ய புராணம், கருட புராணம், ப்ரும்மாண்ட வாயு புராணங்கள், ஸ்ரீமத் பாகவதம் - போன்றவை அடங்கியது.

மூன்றாம் பாகம் ரூ.200.00

ராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீமத் பகவத் கீதை, யோக வாஸிஷ்டம். போன்றவை அடங்கியது.

நான்காம் பாகம் ரூ.150.00

மூன்று ஆச்சார்யர்கள் (ஆதி சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வாச்சாரியர்) வித்யாரண்யர், ஸ்ரீ வல்லபாச்சார்யர், ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யர் - ஆகியவர்களைப் பற்றியும் தெரிவிக்கிறது

ஐந்தாம் பாகம் ரூ. 250.00

அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்களைப் பற்றியது.

(அழகிய படங்களுடன், சிறந்த தாளில், நேர்த்தியான பைண்டிங் கொண்டது.)

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(ப.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர், சென்னை-4
தொலைபேசி: 24641314 www.alliancebook.com
email: srinivasan@alliancebook.com



பேலன்ஸ் முக்கியம்!

விஜய்

சென்னை ஸ்கேட்டிங் வட்டாரத்தில் விஜய் என்ற பெயர் ரொம்ப பாப்புலர். சென்னையில் மட்டும் பத்து இடங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தி, ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியருக்கு ஸ்கேட்டிங் பயிற்சி கொடுக்கிறார் விஜய்.

''குழந்தைகளுக்குப் பிடித்த ஜாலியான விளையாட்டு ஸ்கேட்டிங்தான். சர்... சர்... சறுக்கிக் கொண்டே போகும்போது, ஏதோ சந்திராயனில் போவது போன்று என்ஜாய் பண்ணுகிறார்கள். ஜஸ்ட் பதினைந்து நாட்களில் கற்றுக்கொள்ளலாம். ஸ்கேட்டிங் காலணி எழுநூறு ரூபாய்தான் (சீனநாட்டு காலணி இன்னும் கொஞ்சம் விலை குறைவு).''

ஸ்கேட்டிங் என்பது சைக்கிள் கற்றுக் கொள்வது போலத்தான். பேலன்ஸ் பண்ணத் தெரிய வேண்டும். தொலைதூரக் கல்வி போன்று ஸ்கேட்டிங்கையும் கற்றுத் தருகிறார் இவர். மின்னஞ்சலில் படங்களுடன் உள்ள பாடங்களை அனுப்பிவிட்டு, காலணிகளையும் தனியாகக் கூரியர் செய்து விடுகிறார். ஏதாவது சந்தேகமா? மின்னஞ்சலில் கேள்வி கேட்கலாம்.

''பெரும்பாலான குழந்தைகள் கொஞ்சம் ஸ்கேட்டிங் கற்றுக் கொண்டு, சாலையில் டூ-வீலர்களுக்குப் போட்டியாக ஓடப் பார்க்கிறார்கள். இது தவறு. ஆடுகளத்தில் பிராக்டீஸ் செய்வதற்கும், சாலையில் செல்ல பிராக்டீஸ் செய்வதற்கும் வெவ்வேறு பயிற்சி முறைகள் உள்ளன'' என்கிறார் விஜய்.

''அடிப்படையாகக் கற்றுக்கொண்ட பின், ஆடுகளத்துக்கு வராமல், உங்கள் வீட்டு கார் ஷெட்டிலேயே கூட பிராக்டீஸைத் தொடரலாம்'' என்கிறார் அவர். சக்கரம் கட்டாமலேயே அன்றாடம் ஓடும் நகர வாழ்க்கையில், ஸ்கேட்டிங் ஒரு பூஸ்டர்தான்.


– ஸ்ரீநி

படங்கள் : ஸ்ரீஹரி

ஆண்டுதோறும் நூறு பேர் கொளுத்தும் கோடையைப் பொருட்படுத்தாமல் இந்த கிரிக்கெட் கோச்சிங் கேம்புக்கு வருகிறார்கள். அத்தனை பேரும் தொழில்முறை ஆட்டக்காரர்கள் ஆகிவிட முடியாது. ஆனால், ஆடுகளத்தில் இருக்கும் நேரம், தங்களை சச்சின்களாகவும் தோனிகளாகவும் கற்பித்துக் கொண்டு கலக்குகிறார்கள். முகாமை நடத்தும் ஸ்பிக் குழுமத்தின் எம்.ஏ.சி ஸ்பின் ஃபௌண்டேஷனின் கிரிக்கெட் கோச் பீட்டர் ஃபெர்னாண்டஸ் பேசுகிறார்:

"எங்களிடம் இந்த சம்மரில் சுமார் எண்பது பேர் கிரிக்கெட் கோச்சிங்குக்காகச் சேர்ந்திருக்கிறார்கள். பத்து முதல் பதிமூன்று வயதுப் பிரிவினர்; பதிமூன்று முதல் பதினைந்து வயதினர்; பதினைந்து

இது-சம்ம





* பீட்டர் ஃபெர்னாண்டஸ்


வயதுக்கு மேற்பட்டவர்கள் என மூன்று பிரிவாக மாணவர்களைப் பிரித்துப் பயிற்சி அளிக்கிறோம் தினசரி உடற்பயிற்சியுடன் துவங்கும் கிரிக்கெட் கோச்சிங்கில் பேட்டிங், பௌலிங், ஃபீல்டிங்... என்று எல்லாவிதமான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. தினமும், ஒவ்வொரு மாணவருக்கும் இருபது நிமிடங்கள் வரை, பேட்டிங் பயிற்சி செய்ய நேரம் கிடைக்கும். களப்பயிற்சி தவிர, அவர்களது ஆட்டத்தைக் கவனித்து தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு, திருத்திச் சொல்லித் தரப்படுகிறது. பல்வேறு

கிரிக்கெட் மேட்ச்களின் வீடியோப் பதிவைத் திரையிட்டுக் காட்டி, புகழ்பெற்ற ஆட்டக் காரர்களின் ஆட்டத்தை உற்று கவனித்துப் பயனடைய வாய்ப்புகள் தரப்படுகின்றன'' என்று கோச்சிங் கேம்ப்பின் சிறப்பு அம்சங்களை விவரிக்கிறார் ஃபெர்னாண்டஸ்.





ஐ.பி.எஸ்.!



சென்னை நகரத்தில் சம்மர் கிரிக்கெட் கோச்சிங் பயிற்சிக்கு மூவாயிரம் முதல் ஆறாயிரம் ரூபாய் வரை ஃபீஸ் வாங்குகிறார்கள். பயிற்சி முகாமின் இறுதிக் கட்டத்தில், டிவிஷனல் லெவலில் சில மேட்ச்கள் நடத்தி, அவற்றில் மாணவர்கள் பங்கேற்க வாய்ப்புகள் அளிக்கிறார்கள். எந்த கோச்சிங் கேம்பில் எந்த எதிர்காலக் கிரிக்கெட் ஸ்டார் உருவாகிக் கொண்டிருக்கிறாரோ?

- எஸ். சந்திரமௌலி

அதிரடி ரைனா

ச.ந.கண்ணன்

இந்தியாவின் ஆஸ்திரேலிய அணி என்கிற ஓர் கௌரவ அடையாளம் மும்பைக்கு உண்டு. 2006ம் ஆண்டு மும்பையில் நடந்த ரஞ்சி கோப்பை அரையிறுதியில், நடந்தெல்லாமே தலைகீழ். இரண்டு இன்னிங்ஸிலும் மும்பை அணியின் பந்து வீச்சைப் பொறுமையாகவும், தேவைப்பட்டபோது அதிரடியாகவும் ஒரு பாலகன் எதிர்கொண்டபோதுதான் எல்லோரும் அந்த இளைஞரை கொஞ்சம் கவனித்தனர். இறுதிப் போட்டியிலும் அந்த இளங்குருத்து தன் முத்திரையைப் பதிக்கவே, உத்தரப்பிரதேசத்தின் கையில் வந்து விழுந்தது ரஞ்சி கோப்பை. 'அணிக்குத் தேவையான எல்லா காரியங்களையும் செய்து முடித்துவிட்டு 12வது பொதுத் தேர்வு எழுத ஓடினார் ரைனா' என்று பத்திரிகைகளில் செய்தி வந்தபோதுதான், சுரேஷ் ரைனா முதல் கவனம் பெற்றார்.

இந்திய அணியின் புதிய நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கிறார் 23 வயது சுரேஷ் ரைனா. நடந்துமுடிந்த ஐபிஎல்-லில் சென்னை அணியைத் தாங்கிப் பிடித்தது ரைனாவின் ஆட்டம்தான். டி20 உலகக்கோப்பையில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக செஞ்சுரி அடித்து, தன் பலத்தை அடுத்தக் கட்டத்துக்குக் கொண்டு சென்றுவிட்டார் ரைனா.









ஆள் பார்க்கக் கல்லூரி மாணவர்போல இருந்தாலும் அவர் அடித்த சிக்ஸர் ஒவ்வொன்றும் பார்ப்பவர்களை வாயைப் பிளக்க வைக்கிறது. பீம பலமுள்ள ஹேடன், ரைனாவின் சிக்ஸர்களுக்குப் பெரிய ரசிகர். 'எப்படி இது சாத்தியமாகிறது?' என்றால் தன் அம்மாவைக் கை காட்டுகிறார் அவர். 'அம்மாதான் ஊட்டச்சத்துமிக்க உணவை எனக்குத் தயார் செய்து கொடுப்பார்' என்று எளிமையான பதில் வருகிறது.

உலகின் சிறந்த ஃபீல்டர்களில் ஒருவராக இவர் மெச்சப்படுகிறார். முகமது கைஃப்பிடம் ஃபீல்டிங் பற்றிதான் எப்போதும் பேசிக்கொண்டிருப்பேன். அவரால் முடிகிறபோது என்னால் முடியாதா என்று எண்ணித்தான் என் ஃபீல்டிங்கைப் பலப்படுத்திக்கொண்டேன்' என்று தன் ஃபீல்டிங்கின் ஆரம்ப காலப் பயிற்சிகள் பற்றிப் பேசுகிறார் ரைனா.

ஆரம்பத்திலிருந்து சுரேஷ் ரைனாமீது அதிக நம்பிக்கை வைத்தார் இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் க்ரேக் சேப்பல். 'நிச்சயம் வருங்காலச் சாதனையாளர் ரைனாதான்' என்று எல்லா போட்டிகளிலும் அவரைக் குறித்துப் பேசாமல் இருக்கமாட்டார் சேப்பல். தவிர ரைனா ஆடும் உள்ளூர் போட்டிகளையும் சேப்பல் கவனித்து வந்தார். தமிழ்நாட்டுக்கு எதிரான ரஞ்சி போட்டியில் செஞ்சுரி அடித்தபோது, 'வாழ்த்துகள். இதேபோல சிறப்பாக ஆடவும்' என்று எஸ்.எம்.எஸ் அனுப்பி ரைனாவை உற்சாகப்படுத்தினார் சேப்பல்.

உத்தரப்பிரதேசத்தில் உள்ள காஸியாபாத் என்கிற சிற்றூரைச் சேர்ந்த ரைனா, 16வது வயதில் உத்தரப்பிரதேச அணிக்காக ரஞ்சி போட்டியில் அறிமுகமானார். 2006 ரஞ்சி போட்டியில் சிறப்பாக ஆடி இந்திய அணியில் இடம்பிடித்தார். 2007 அவருக்கு மோசமான வருடம். அணியில் இருந்து நீக்கம், காயம் என்று பல பின்னடைவுகளைச் சந்தித்தார். வந்தது ஐபிஎல்.

முதல் ஐபிஎல்-லில் ரைனாதான் சென்னையின் நம்பிக்கையாக இருந்தார். 400 ரன்களுக்கும் அதிகமாகக் குவித்து மீண்டும் இந்திய அணியில் இடம்பிடித்தார். அதிலிருந்து இவருக்கு ஏறுமுகம்தான். ஆசியா கோப்பைக்குத் தேர்வானவர், அடுத்தடுத்து இரண்டு செஞ்சுரிகள் அடித்துத் தன் இருப்பைப் பத்திரப்படுத்திக்கொண்டார். இந்த வருட ஐபிஎல்-ல் ஹேடனும் தோனியும் மோசமாக ஆடிக் கொண்டிருந்தபோது, பொறுப்புடன் அணியைக் கரை சேர்த்தது ரைனாவின் அதிரடி ஆட்டம்தான். ○





கடல் பார்த்த சந்தோஷம்!

லீவு விட்டாலே ஸ்விம்மிங், பெயின்டிங், யோகா, கிரிக்கெட்... என்று வசதியான நகரத்து மாணவர்களுக்கு ஏராளமான 'சம்மர் கோர்ஸ்கள்'. ஆனால், கிராமத்து மாணவ - மாணவிகளை, சென்னைக்கு அழைத்து வந்து தங்க வைத்து, அவர்களுக்கு யோகா, சூரிய நமஸ்காரம், தன்னம்பிக்கை, தலைமைப் பண்புகள், உழைப்பின் மேன்மை, திறமை வளர்த்துக் கொள்ளுதல் என பலவற்றைச் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்றால், அவர்களுக்குத் தாராளமாக ஒரு 'ஓ!' போடலாம்தானே?

''**அ**மெரிக்காவில் இருக்கும் டாக்டர் திருஞானசம்பந்தம் கேன்சர் ஸ்பெஷலிஸ்ட். தமிழில் ஈடுபாடும், தமிழ்நாட்டின் மீது அக்கறையும் கொண்டவர். அவரது ஏற்பாட்டில்தான், கும்பகோணத்தின் சுற்று வட்டாரப் பள்ளிக்கூடங்களில் எட்டு முதல் பன்னிரண்டு வகுப்புவரை படிக்கும் மாணவ மாணவிகள் சுமார் முப்பது பேர் பங்கேற்க, உத்தண்டியில் உள்ள சுவாமி சுத்தானந்தா ஆசிரமத்தில், குருகுலம் ஸ்டைலில் ஐந்து நாட்கள் பயிற்சி முகாம் நடத்தி வருகிறார்கள். பங்கேற்றவர்களில் பலருக்கு இதுவே முதல் சென்னை விஸிட். ஒரு நாள் மாலை எல்லோரையும் சென்னை பெசன்ட் நகர் பீச்சுக்கு அழைத்துச் சென்றபோது, சில மாணவ-மாணவிகள், 'இப்போதுதான் எங்க வாழ்க்கையில் முதல் தடவையாக கடல் பார்க்கிறோம்' என்று கடற்காற்று முகத்தில் வீசிப் படபடக்கச் சந்தோஷமாகச் சொன்னார்கள்'' என்கிறார் முகாம் நடத்துவதில் முக்கிய பங்காற்றிய கிருஷ்ணமூர்த்தி.



தன்னம்பிக்கையூட்டும் குறும்படங்கள், பிர்லா கோளரங்க விஸிட், வீணாகும் பொருட்களை வைத்து உருப்படியானவற்றை உருவாக்குவது, குழு மனப்பான்மை வளர்த்தல், மாற்றி யோசித்துத் தீர்வு காணும் விளையாட்டுகள் போன்றவற்றை மாணவ மாணவிகள் ரொம்பவே ரசித்தார்கள்.

- ஷைலி

இன்று போய் நாளை

நீங்கள் உங்கள் நெருங்கிய நண்பர் வீட்டுக்குப் போகிறீர்கள். உங்கள் நண்பரோ அல்லது உங்கள் நண்பரின் மனைவியோ, சமைப்பதில் (இந்தக் காலத்தில் இளம் கணவர்களும் சமைக்கிறார்கள் அல்லவா?) பிரஸித்திப் பெற்றவர்கள் அல்லர். இருப்பினும் உங்களைச் சாப்பிடச் சொல்லுகிறார்கள். தயங்குகிறீர்கள். வற்புறுத்துகிறார்கள். வேறு வழியில்லை. சாப்பிடுகிறீர்கள்.

அரைகுறையாய் வெந்திருக்கும் கத்திரிக்காய் தொண்டையை விட்டு இறங்க மறுக்கிறது. ''நல்லா இருக்கா?'' என்று உங்கள் நண்பரின் மனைவி, நம்பிக்கையை முகத்தில் தேக்கி, புன்னகை பூக்கக் கேட்கிறார்.

இக்கேள்வியின் அதிர்வில், கத்திரிக்காய், தொண்டையை விட்டு நல்ல வேளை! இறங்கி, வயிற்றில் அடைக்கலம் புகுகிறது. என்ன பதில் சொல்வீர்கள்?

வள்ளுவர் என்ன பதில் சொல்ல வேண்டுமென்று கூறியிருக்கிறார் தெரியுமா?

பெயக்கண்டு / நஞ்சுண்டு / அமைவர் / நயத்தக்க / நாகரிகம் / வேண்டு / பவர்.



இந்திரா பார்த்தசாரதி

விரும்பத்தக்க கண்ணோட்டத்தை வேண்டுபவர்கள், அவர்களுடைய நெருங்கிய நண்பர்கள் விஷத்தைக் குடிக்கக் கொடுத்தாலும், குடித்து மகிழ்வார்கள்.

'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சுக உண்பர் நனி நாகரிகர்'

என்று நற்றிணையில் வருகிறது. 'நட்டோர்' என்றால் 'நண்பர்கள்.'

ஆகவே, நீங்கள் என்ன பதில் சொல்ல வேண்டுமென்று 'நயத்தக்க நாகரிகம்' எதிர்பார்க்கிறது? 'பிரமாதமா இருக்கு கத்திரிக்கா' என்று சொல்ல வேண்டும்.

'நஞ்சுக உண்டு அமைவர்' என்பது சாக்ரட்டீஸை ஞாபகப்படுத்துகிறது அல்லவா? கொள்கைக்காக அவர் நஞ்சுண்டு தம்மைத் தியாகம் செய்து கொள்ளவும் தயங்கவில்லை. வள்ளுவருக்கு சாக்ரட்டீஸ் கதை தெரியுமா... தெரியாதா... என்று சொல்வதற்கில்லை. ஆனால், அவருக்கு, தேவர்களுக்கு அமுதம் கிடைக்கத் தாம் நஞ்சுண்ட தியாகேஸ்வரனான சிவபிரானைத் தெரியாமலிருக்காது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிறித்துவ மதம் பரப்ப தமிழகம் வந்த பாதிரியார்கள், ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட தியாகமும், நஞ்சுண்ட சிவனின் தியாகமும் ஒன்றாக இருப்பதினால், கிறித்துவ மதத்துக்கும், சைவ சித்தாந்தத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று எழுதியிருக்கின்றனர்!

'கண்ணோட்டம்' என்ற பொருளில் வந்த 'நாகரிகம்' என்ற சொல் தான், பிறகு தன் பொருள்

இளமைப் பாலம்



வா

எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டது. மற்றவர்கள் மனம் புண்படாதபடி, இன்னா சொற்கள் தவிர்த்து இனியவை பேசுவதும், மென்மையும் கண்ணியமும் கூடிய நடத்தையும் நாகரிகத்தின் பாற்படும். இவற்றுக்கெல்லாம் அடிப்படை 'கண்ணோட்டம்' தான். இது ஒருவனுக்கு, நற்பண்பினாலும், கல்வித் தேர்ச்சியினாலும் விளைகின்ற அகக்கண் பார்வை விசாலம், மனப்பக்குவம். இந்தப் பார்வை அமைந்து விட்டால், நண்பன் மட்டுமின்றிப் பகைவனையும் கண்ணியத்துடன் நடத்த இது உதவும். பகைவனுக்கும் அருள் செய்யத் தூண்டும்.

தேரின்றி, ஆயுதமின்றி முதல் நாள் போரில் தோற்று நின்ற இராவணனிடம், 'இன்று போய் நாளை வா' என்று இராமன் கூறியது நயத்தக்க நாகரிகம்.

**'அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'**

இக்குறளில் வரும் 'அன்பும்', 'கண்ணோட்டந்தான்'. இதுவே நயத்தக்க நாகரிகத்துக்கு அருமையான விளக்கம். இராமனிடம் தோற்றது பற்றிக் கூட இராவணன் அவ்வளவு வேதனை கொண்டிருக்க மாட்டான். இராமனின் நாகரிகமான நடத்தைதான், அவனுடைய குற்ற உணர்வை அதிகரித்து, அவனுடைய வீரத்தைக் கேள்விக் குறியாக்கி, அவன் நெஞ்சைச் சுட்டது.

**'வாரணம் பொருத மார்பும் வரையினை
எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த
நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன்
கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கை
யொடு மீண்டுபோனான்.'**

என்பது கம்பன் வாக்கு.

எட்டுத்திக்குகளை வெற்றி கொண்ட இராவணனின் ஆற்றலும், கைலை யங்கிரியை எடுத்த வலிமையும், நாரத முனிவனுக்கே சாம வேதத்தை இசைப் பதற்குக் கற்றுக்கொடுத்த நாக்கின் கலைத் திண்மையும், தலைகளை அலங்கரித்த பத்து மகுடங்களும், சங்கரன் கொடுத்த வாளும், எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக யாருக்கும் தலைவணங்கா வீரமும், இராமனின் நாகரிகத்தின் முன் செய விழந்து தோற்று நின்றன!

ஆழ்ந்த தன்னம்பிக்கையும், தன்மான மும் உள்ளவர்களால்தாம் இத்தகைய நாகரிகச் செயல்பாட்டை மேற்கொள்ள முடியும். ஒருவனுக்குத் தன்மானம் இருந் தால்தான், மற்றவர்களுடைய தன்மானத் தையும் புரிந்துகொண்டு அவர்களைக் கண்ணியமாக நடத்த இயலும்.

அலெக்ஸாண்டர் - போரஸ் (புரு ஷோத்தம்) நிகழ்வு நினைவுக்கு வரு கிறதா? போரஸ் போரில் தோற்ற பிறகு, வெற்றி அடைந்த அலெக்ஸாண்டர் அவனைக் கேட்கின்றான். "நீ என்னிடம் என்ன எதிர்பார்க்கின்றாய்?" போரஸ் கூறு கின்றான். "நான் ஒரு நாட்டினுடைய அரசன் என்பதை மறக்காமல், அவ்வர சனுக்குரிய மரியாதையைக் காட்டும் விதத்தில், என்னிடம் நீ நடந்துகொள்வாய் என்று எதிர்பார்க்கிறேன்." நாகரிகமான கேள்வி, அதற்கு இணையான நாகரிகமான பதில். இந்நாகரிகத்தின் உச்சம், அலெக் ஸாண்டர், போரஸ்ஸுக்கு அவன் நாட் டைத் திருப்பி அளித்து விடுகிறான்!

தன்மானம் என்பதைத்தான், முன்பு சுயமரியாதை என்று பெரியார் கூறினார். 'சுயமரியாதை இயக்கத்'தை அவர் துவங்கு வதற்குக் காரணம், மனிதனுக்குத் தன்னு டைய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றால்' அவனுக்குத் தன்னு டைய உரிமைகளைப் பற்றியும் ஒரு விழிப்புணர்ச்சி வேண்டும் என்பதால்தான். அந்த இயக்கம் தமிழ்நாட்டில்தான் தொடங்கியது என்றாலும், இப்பொழு தைய தமிழர்கள் அனைவரும் சுயமரியா தையுடன் இருக்கின்றார்களா என்பது சுவாரஸ்யமான கேள்வி. அரசியல் உல கைப் பார்க்கும்போது சுவாரஸ்யம் இன்னும் அதிகம் கூடுகிறது.

"நான் ஒரு நாட்டின் அரசன் என்பதை மறக்காதே. அரசனுக்குரிய மரியாதையைக் காட்டும் விதத்தில் என்னிடம் நடந்துகொள்வாய் என எதிர்பார்க்கிறேன்."

ஆங்கிலத்தில் கூறுகிறார்களே, 'civic society' என்று, அதாவது, மக்கள் தம் கடமைகளையும் உரிமைகளையும் உணர்ந்து வாழும் ஒரு சமூகக் கட்ட மைப்பு. அது இப்போது நம்மிடையே இருக்கின்றதா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம். அப்படி இருந்தால் அது 'நாகரிகமான சமூகம்'.

ஆனால், இருக்கின்றதா? ஒரு சாதா ரணத் தமிழ்க் குடிமகனை எதிர்நோக்கி யிருக்கும் அன்றாடப் பிரச்னைகளைப் பார்க்கும்போது, இக்கேள்வி எழுவதில் ஆச்சர்யமில்லை. அவனால், ஆட்டோ ரிக்ஷாகாரர்களை, ஒரு 'civic society'-யில் இருப்பதுபோல், மீட்டர் போட்டு

வண்டியை ஓட்டும்படிச் சொல்ல முடியாது. இதற்கான உரிமைகள் அவனுக்கு இருந்தாலும், அரசியல் கட்சிகள் ஆதரவில் அராஜகமாக இறுகிவிட்ட, வலுமிகுந்த ஒரு ஸ்தாபனத்தை, எதிர்த்து அவனால் தனித்துப் போராட இயலாது. மற்றவர்களும் அவனுடன் கூடி, இந்த மாதிரியான பிரச்னைகளுக்குத் துணை நிற்பார்களா என்பது சந்தேகந்தான். காரணம், நம்முடைய உரிமைகளைப் பற்றியோ, இந்த உரிமைகளைப் பறிகொடுப்பதினால்



ஏற்படும் தன்மானப் பிரச்னையைப் பற்றியோ நமக்கு அக்கறையில்லை. நம் தன்மானமெல்லாம் ஜாதியைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும்தான். இதற்காக, ஒருவரையொருவர் நாம் வெட்டிக் கொள்வோமே தவிர, தனி மனிதனின் ஆதார உரிமைகளைப் பற்றித் துளியும் கவலைப் படமாட்டோம்.

நாகரிகம் இருந்தால்தான், தன்மான உணர்வும் இயல்பாக இருக்கும். பலஹீனமாக இருப்பவர்களிடம், தன் வலிமையைக் காட்ட வேண்டுமென்றோ, அவர்களை ஏமாற்ற வேண்டுமென்றோ அவ்வுணர்வு உடையவர்களுக்குத் தோன்றாது. சுயமரியாதையே தன்னம்பிக்கையின் அடிக்கல்.

'நாகரிகம்' என்ற சொல் இப்பொழுது நகர்ப்புறம் சார்ந்து, 'நவீன'த்தைக் கூறுவதாகப் பொருள் பட்டு, 'நாகரீகம்' என்று வழங்குகிறது. 'அந்த நாகரீக வேடிக்கை நான் சொல்லக் கூடுமோ?' என்று இராம நாடகத்தில் அருணாசலக் கவிராயர் கூறுகிறார். புதுமை என்ற அர்த்தத்தில் தான், 'நாகரீகமான மனிதன்' என்று சொல்வது வழக்காற்றில் வந்து, தமிழ் 'லெக்ஸிகனி'லும் இடம் பெற்றுள்ளது. காலத்துக்கேற்ப 'டிப் டாப்பாக' உடை அணிந்து காட்சி அளிக்கும் மனிதன், 'நாகரீகமான' (நவீனமான) மனிதனாக இருக்கலாம். ஆனால் அவன் 'நாகரிகமான' (கண்ணியமான) மனிதனாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

(அடுத்த வாரம் : **கடவுள்**)





அரசுப் பயிற்சி அதிரடி வளர்ச்சி!



“அரசுக் கல்லூரியா? அரசு தொழிற்பயிற்சிக்கூடமா? அங்கேயெல்லாம் படித்தால் வேலைக்கு ஆவாது தலைவா! எதுனா பிரைவேட்ல படி...'' என்பதுதான் நமது இளையதலைமுறைக்கு நாம் சொல்லிக் கொடுத்திருக்கும் பாடம்.

''ஐயா... முதலில் இந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்க! நாங்கள் குறுகிய காலத்தில் கொடுக்கும் தொழில் முனைவோர் பயிற்சி, தொழிற்பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையில் சொந்தக் காலில் உழைத்து முன்னேறியவர்கள் பலர் உண்டு. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், சக்தி மசாலா உரிமையாளர்கள் கூட இங்கே பயிற்சி எடுத்தவர்கள்தான்'' என்கிறார் சிறு, மற்றும் குறுந்தொழில்கள் அமைச்சகத்தின் ஓர் அதிகாரி. இந்த அமைச்சகம் நடத்தும் தொழிற்பயிற்சிகள் சென்னை கிண்டியில் நடக்கின்றன. இந்த அமைப்பின் முந்தைய பெயர் சிறு தொழில் சேவை கழகம் (SISI).

உணவு பதப்படுத்துதல், மின்னணு (ஆட்டோமேஷன்), தோல் பொருட்கள் செய்யப் பயிற்சி, ஆயத்த ஆடைகள், கணினி பழுதுபார்ப்பு, மல்டி மீடியா, லேத், டிரில்லிங், செல் ஃபோன் ஸர்வீஸ்... என்று பலவிதமான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. ஒரு மாதம் முதல் ஐந்து மாதம் என சப்ஜெக்ட்டுக்கு ஏற்பப் பயிற்சிக் காலம். ஆயிரம் ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய் வரை கட்டணம். கடந்த ஐம்பது வருடங்களாக இந்த அரசு நிறுவனம் தொழிற்பயிற்சி கொடுத்து வந்தாலும், பெரும்பாலோருக்குத் தெரியவில்லை.

''வாரவாரம் சனி, ஞாயிறுகளில் பயிற்சி வகுப்புகள் இருக்கின்றன. சம்மரில் ஒரு மாத, இரண்டு மாதப் பயிற்சி வகுப்புகளுக்குக் கூடுதலாகச் சேருவார்கள். 'தொழில் கட்டுப்பாடு மற்றும் ஆட்டோமேஷன்' என்ற பயிற்சிக்கு என்ஜினியரிங் முடித்தவர்கள் நிறையச் சேருகிறார்கள். நாங்கள் கொடுக்கும் சான்றிதழ் அவர்களுக்கு விரைவில் வேலை கிடைக்க உதவியாக இருக்கும்'' என்கிறார்கள் இந்நிறுவன அதிகாரிகள்.

\- ஸ்ரீநிதி

கற்றதன் பயன்!

அருள்வாக்கு



நன்றாகப் படித்தறிந்த ஒருத்தர், நாலு பேருக்காவது அதைப் படிப்பிக்காமல் போனார் என்று ஏற்படவே கூடாது. நன்றாகக் கற்று வித்வானாகிற எவனும் அப்புறம், தான் கற்றதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்து ப்ரசாரம் செய்தேயாக வேண்டுமென்பது ஆன்றோர் விதித்த விதி. தன்மட்டில் கற்றவனாயிருந்து பயனில்லை; கற்பிப்பவனாயிருந்து கல்வியின் பயன் வருங்கால ஸமுதாயத்துக்கும் போகும்படி செய்யவேண்டும்.

மனுஷ்யனுடைய வாழ்க்கையில் ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸந்ந்யாஸம் என்று நாலு ஆச்ரமம் உள்ளது என்றால், கல்வி கற்பிப்பதிலும், நாலு ஸ்டேஜ்கள் உண்டு. அதீதி, போதம், ஆசரணை, ப்ரசாரணை என்று இந்த நாலுக்குப் பேர். அதீதி என்றால் படிப்பது. முதலில் நன்றாய்ப் படிக்கவேண்டும். அப்புறம் போதம், அதாவது, படித்ததை நன்றாகப் புரிந்து கொண்டு, அதிலே மேலும் புது அறிவு பெறுவது. மூன்றாவதாக ஆசரணை. முதலிரண்டும் இப்போதுங்கூடப் பல ஸப்ஜெக்ட்களில் நடந்து விடுகின்றன. ஆனால், இந்த மூன்றாவது விஷயத்தில்தான் கோளாறாக இருக்கிறது. அது என்ன? ஆசரணை என்றால், அறிவிலே இறக்கிக் கொண்டதை நம்முடைய வாழ்க்கையிலே இழைத்து, நடைமுறையில் நடத்திக் காட்டுவது என்று அர்த்தம். கற்றபின் அதற்குத் தக நிற்பது ஆசரணை.

இந்த மூன்றோடு மட்டும் வித்வானின் லக்ஷணத்தை முடிக்காமல், முடிவாக 'ப்ரசாரணை' என்றும் ஒரு நாலாவது லக்ஷணம் சொல்லியிருக்கிறது. இதுதான், தான் கற்ற கல்வி தன்னோடு போகாமல், அதை நாலுபேருக்குக் கற்றுக் கொடுப்பது. ப்ரசாரம் செய்வது ப்ரசாரணை.

– ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

உள்ளும் புறமும்

திடீரென்று மனோகரியின் மேஜை மீது பிள்ளையார் எறும்புகள் சாரிசாரியாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தன. பிள்ளையார் எறும்புகள் வீட்டுக்கு வந்தால் நல்லது என்பாள் அம்மா. அவற்றை விரட்டவோ, கொல்லவோ கூடாது என்பது அம்மாவின் அபிப்ராயம். தேங்காய்த் துருவல் துணுக்குப் போன்று வெள்ளையாக எதையோ அவை கவ்விக் கொண்டு சென்றன. அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவை மேஜையின் காலில் இறங்கிக் காணாமல் போய்விட்டன. ஒரு கொட்டேஷன் தயார் செய்ய வேண்டும். அதற்குள் இந்த ஃபைல் காணாமல் போன குழப்பம் வந்து விட்டது.

பிள்ளைகளுடைய ஞாபகம் வந்தது. வருண் கணக்கில் ரொம்பவே 'வீக்'காக இருக்கிறான். டியூஷன் வைக்க வேண்டும். ஸ்ரீனிவாசன் ஸார் கணக்குப் பாடம் எடுத்தவரை, கணக்கில் ஓரளவு நல்ல மார்க்குகள் வாங்கினான். அவர் பள்ளிக்கூடத்தை விட்டுப் போனபிறகு கணக்கில் அசட்டை வந்து விட்டது. இப்படியே விட்டு விட்டால், அடுத்த பரீட்சையில் பெயிலானாலும் ஆகிவிடுவான். விளையாட்டுப் புத்திதான் அவனை ரொம்பவும் கெடுக்கிறது. திடீரென்று, கார்த்திகாவின் டிஃபன் பாக்ஸை சரியாக மூடினோமா, இல்லையா என்று தோன்றியது. அவள் டிஃபன் பேக்கை ஆட்டிக் கொண்டே வேறு செல்வாள். சட்னி எல்லாம் சிந்திவிடக் கூடாதே என்று நினைத்தாள்.

காலையில் எல்லாவற்றையும் அவளேதான் செய்ய வேண்டியதிருக்கிறது. குழந்தைகளைக் குளிக்க வைப்பது, சாப்பாடு பண்ணுவது, டிஃபன் கொடுத்தனுப்புவது என்று... எல்லாவற்றையும் அவள்தான் செய்ய வேண்டும். சமையல் வேறு இருக்கவே இருக்கிறது. அத்தைக்கு உடம்புக்கு நன்றாக இருந்தால் கூடமாட ஏதாவது செய்வார்கள். கிருஷ்ணபாரதிக்குப் பேப்பர் படிக்கவும், தேடி வருகிறவர்களுடன் பேசவுமே பொழுது போதாது. மாமாவும் பூஜை, தேவாரம் என்று தன் காரியத்தில்தான் ஈடுபடுவார். மல்லிகை மணம் வீசியது. புவனேஸ்வரிதான் வந்திருந்தாள்.

''என்னடி எதையோ வெறிச்சுப் பார்த்துண்டிருக்கே..?'' என்று மேஜையின் மீது கைகளை ஊன்றிக் குனிந்து மனோகரியைப் பார்த்துக் கேட்டாள். மனோகரி இலேசாக முறுவலித்தாள். புவனேஸ்வரிக்கு அவளி



டம் ஏதாவது ஆக வேண்டியதிருக்கும். வெளியே எங்காவது போக வேண்டிய திருந்தால், துணைக்கு அவளையும் அழைத்துக் கொண்டு போக வருவாள். குறைந்தபட்சம் கேண்டீனுக்காவது போக வேண்டியதிருந்தால்தான், அவள் ஸீட்டுக்கு வருவாள்.

''என்ன புவனேஸ்வரி எங்கேயாவது கௌம்பிப் போறியா?''


''எக்ஸாட்லி! எப்படிடீ கண்டு பிடிச்சே?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் புவனேஸ்வரி.

''இது என்னடி பெரிய வித்தையா? நீ வேற என்னத்துக்கு என் ஸீட்டுக்கு வரப் போறே?'' என்று சர்வசாதாரணமாகச் சொன்னாள் மனோகரி.

''நீ ரொம்பப் புத்திசாலிடீ... கொஞ்சம் ஷாப்பிங் பண்ணனும்டீ.. வாயேன்.''

''ஆஃபீஸ் டைம்லேதான் ஷாப்பிங் பண்ணனுமா? உங்க பாஸ் உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டார். என்னோட பாஸ் அப்படியில்லே.. திடீர்னு கூப்பிட்டு விடுவார். சீட்லே இல்லேன்னா சத்தம் போடுவார். ஏற்கெனவே காலையிலேயே வாங்கிக் கட்டியாச்சு.''

''ரொம்பத்தான் அவருக்குப் பயப்படறே... ஒரு அரை



வண்ணநிலவன்

மணியிலே போயிட்டு வந்துடலாம்டீ...''

''அம்மா... ஆளை விடு... இப்ப முடியவே முடியாது.''

புவனேஸ்வரி செல்லமாக மனோகரியின் கன்னத்தில் தட்டினாள். புவனேஸ்வரியின் தலையிலிருந்து ஒன்றிரண்டு மல்லிகைப் பூக்கள் மேஜை மீது உதிர்ந்தன. ஒரு பூவை எடுத்து நாசியினருகே வைத்து முகர்ந்து பார்த்தாள் மனோகரி. தாண்டவன் கேன்டீனிலிருந்து யாருக்கோ காஃபி வாங்கிக் கொண்டு போனான்.

''தாண்டவா...'' என்று அவனைக் கூப்பிட்டாள் மனோகரி.

''என்னம்மா...'' என்று காஃபி தம்ளருடன் அவன் மேஜையினருகே வந்தான்.

''யாருக்கு காஃபி தாண்டவா?'' என்று புவனேஸ்வரி கேட்டாள்.



''சரவணக்குமார் சாருக்கும்மா...''

''இந்தா இந்த ஃபைலை சூப்பிரன்டென்ட் கிட்டே குடுத்திடு...'' என்று மீனாட்சி டிரேடர்ஸ் ஃபைலைக் கொடுத்தாள் மனோகரி. தாண்டவன் மெதுவாக அதை வாங்கிக் கொண்டு போனான். புவனேஸ்வரி புறப்படுவதற்காக நகர்ந்தாள். புவனேஸ்வரிக்கு நிறைய ஜோசியர்கள், குறிசொல்கிறவர்களைத் தெரியும். தன் குடும்பக் குழப்பங்களைப் பற்றிக் குறி கேட்டால் என்ன என்று தோன்றியது.

''புவனேஸ்வரி.. நில்லு... சேலையூர் பக்கம் ஏதோ ஒரு கோவில்லே ஒரு அம்மா குறி சொல்றான்னு சொல்லுவியே...''

''யாரு அந்த ராஜலெட்சுமி அம்மாவா?''

''அவங்கதான். அந்த அம்மா கிட்டே என்னை ஒருநாள் அழைச் சுக்கிட்டுப் போறியா? அப் பாயின்ட்மென்ட் ஏதாவது வாங்கணுமா...?''

''ஏது திடீர்னு குறி கேக்கணும்கிறே? என்னடீ ஏதாவது பிரச்னையா?'' என்று அக்கறையாகக் கேட்டுக்கொண்டே, பக்கத்து டேபிளருகே கிடந்த ஸ்டூலை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள் புவனேஸ்வரி.

''ஆமாம்டீ... வருண் சரியாவே படிக்க மாட்டேங்கிறான். இவருக்கும் ஏதோ போறாத காலம் மாதிரி இருக்கு. மாமி யாருக்கு வேறே உடம்புக்கு அடிக்கடி முடியாமே போயிடறது... யாருக்கும் நிம்மதியே இல்லை...அதான் ஏதாவது கேட்டுப் பார்ப்போமேன்னு தோணிச்சு...''

''குறி சொல்ற ராஜலெக்ஷ்மி அம்மா ஞாயிற்றுக்கிழமை அப்பாயிண்ட்மென்ட் கொடுத்திருக்கா.''



''அப்பாயின்ட்மென்ட் வாங்கறது ஒன்னும் சிரமம் இல்லே. என்கிட்டே அந்த அம்மாவோட ஃபோன் நம்பர் கூட இருக்கு... உன் வீட்டுக்காரருக்கு இதெல்லாம் பிடிக்குமா? அவர் ஏதாவது சொல்லப் போறார்டீ...''

''அவர் என்ன சொல்றதுக்கு இருக்கு? குடும்பத்துக்குன்னா வருவார்.''

''அவர் ரொம்பப் புரொக்ரஸீவ் ஆச்சேன்னு கேட்டேன்...''

''ஒரு புரொக்ரஸீவுமில்லே... குடும்பம்னா இதெல்லாம் பண்ணித்தானே ஆகணும்?''

''அதுக்குச் சொல்லலே... இந்த மாதிரி

விஷயங்கள்லே நம்மை மாதிரி பொம்ம னாட்டிகளோட அப்ரோச் ஒரு மாதிரி இருக்கும். ஆண்களோட அப்ரோச் வேற மாதிரி இருக்கும். அதும் அவர் பத்திரிகை யிலே வேற இருக்கார். அதனாலேதான் கேட்டேன்...''

''அப்படியே அவர் வந்தா வர்றார்... வரலைன்னா போறார்... நான் மட்டும் கேக்கலாம் இல்லியா?''

''யார்ன்னாலும் கேக்கலாம்.''

''பின்னே என்னமா... ஒரு அப்பாயின்ட் மெண்ட் வாங்கிக் குடேன்...''

''இது உன்னோட செல்தானே?'' என்று மேஜை மீது இருந்த மொபைலை எடுத்தாள் புவனேஸ்வரி. மெதுவாக எண் களை அழுத்தினாள். எதிர்முனையில் இணைப்பு கிடைத்தது. புவனேஸ்வரி மொபைலில் பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்தாள் மனோகரி. பேசி முடித்த தும் மொபைலை ஆஃப் செய்து மேஜை மீது வைத்தாள்.

''ஸண்டே அன்னிக்கு இருந்தாத்தானே வசதி? அதான் ஸண்டே அன்னைக்குக் கேட்டேன். இந்த ஸண்டேயே அப்பாயின்ட்மெண்ட் தந்துட்டா'' என்றாள் புவனேஸ்வரி. அவள் முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது.

''பீஸ் எவ்வளவு?'' என்று கேட்டாள் மனோகரி.

''ஒரு ஆளுக்கு இருநூறு ரூபா... இரு நூத்தி ஒண்ணா குடேன்...''

''எவ்வளவு நேரம்னாலும் சொல்லு வாளா?''

''அதெல்லாம் நடக்காது. அவ மாடர்ன் சாமி. கையிலே வாட்ச் எல்லாம் கட்டி யிருக்கா. மூணு கேள்விக்கு மேலே போனா, அவளோட அஸிஸ்டென்ட்ஸ் எந்திரிங்கோன்னு கௌப்பி விட்டுடுவா...''

''கூடுதலா கேள்வி கேக்கணும்னா?''

''அதுக்கு தனி ஃபீஸ் வாங்கிடுவா... நீ என்ன ரெண்டு மூணு விஷயத்துக்கு



மேலேவா கேக்கப் போறே?''

''இல்லே.. கேட்டேன்...''

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் புவனேஸ்வரி புறப்பட்டாள்.

சுசிலாவும் அவள் ஸ்நேகிதியும் பத் திரிகை அலுவலகத்திலிருந்து சென்ற பிறகு, கிருஷ்ணபாரதி தன் கேபினுக்கு வந்து, அவசர அவசரமாக எல்லா புரூஃப் களையும் பார்த்து முடித்தான். மணி இரண்டே கால் ஆகியிருந்தது. பாண் டுவை அழைத்து புரூஃப்களைக் கொடுத் தனுப்பினான். மனம் உல்லாசமாக இருந் தது. பாட்டை முணுமுணுக்கத் தொடங்கி னான். சுசிலாவின் ஸ்நேகிதி கொடுத்து விட்டுப் போயிருந்த கட்டுரையை எடுத்து நிதானமாகப் படிக்க ஆரம்பித்தான். மணி இரண்டே கால் ஆகியும் பசியே எடுக் காதது ஆச்சரியமாக இருந்தது.

கட்டுரையின் முதல் பாராவே நன்றாக இருந்தது. பிரேமாவுடைய கையெழுத்து அச்செழுத்து போல் அவ்வளவு அழகாக இருந்தது. வரிக்கு வரி இடம் விட்டும் அடித்தலே இல்லாமல் தெளிவாகவும் எழுதியிருந்தாள். பெண்ணுரிமை பற்றிய

கட்டுரைகள் அவ்வப்போது போடுகிறது தான்.

பெண்ணுரிமை ஆதரவாளர்களை இரண்டுவிதமாகப் பிரித்து விடலாம். ஜீன்ஸ் அணிவது, 'பப்'புக்குச் செல்வது என்று வெளிநாட்டுக் கலாசாரத்தை அப்படியே இங்கே இறக்குமதி செய்யும் அதிதீவிர பெண்ணுரிமைக்காரர்கள் ஒரு ரகம். இவர்கள் பெண்களுக்கு செக்ஸ் எஜுகேஷன் எல்லாம் வேண்டும் என்பார்கள். திருமணத்துக்கு முன் பாலுறவு கொள்வது தவறில்லை என்பவர்களும் இவர்கள் தான்.

இன்னொரு ரகத்தினர் இப்போது இருப்பதை விடப் பெண் இன்னும் சுதந்திர மனோபாவத்



துடன் வாழச் சமூகம் அனுமதிக்க வேண்டும். குடும்பங்களில் பெண்கள் அடிமைகள் போல் நடத்தப்படக்கூடாது. தங்களுடைய விஷயங்களைத் தாங்களே தீர்மானிக்கும் உரிமை பெண்களுக்கு இருக்க வேண்டும். நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கு இடஒதுக்கீடு தேவை என்றெல்லாம் கருதுபவர்கள் இவர்கள். திருமணத்தை ஏற்றுக் கொள்பவர்கள். பிரேமா இரண்டாவது ரகத்தவள் என்று தோன்றியது. சுசீலா ஒரு இரண்டும்கெட்டான் பெண் உரிமையாளி. 'பப்'புக்குப் போவதில் என்ன தவறு இருக்கிறது என்று சில நேரம் பேசுவாள். ஆனால், திருமணத்துக்கு முன்னால் பாலுறவு கொள்ளக் கூடாது என்பாள். பிரேமாவின் கட்டுரையை 'செலக்டட்' என்று எழுதி ட்ரேயில் போட்டான்.

பெர்க்மன் படத்துக்குப் போகும்போது உடுப்பியில் டிஃபன் சாப்பிட்டு விட்டுப் போகலாம் என்று தோன்றியது. அன்று செவன்த் ஸீல். அந்தப் படத்தை இரண்டு மூன்று முறை பார்த்து விட்டான். என்றாலும், ஏனோ அந்தப் படத்தின் மீது அவனுக்கு மாளாத தாகம் இருந்தது. சுசீலாவிடம் அன்று ஷோ இருப்பதைப் பற்றி வேண்டுமென்றேதான் அவன் சொல்லவில்லை. அவளுக்கும் பெர்க்மனைப் பிடிக்கும். அவளுடன் படம் பார்த்தால், சுசீலாவுடன்தான் நங்கநல்லூருக்குத் திரும்ப வேண்டியதிருக்கும். அவள் தன் ஸ்கூட்டியில் அவன் பின்னால் வருவாள். அவனுக்கு, வண்டியை எடுத்தால் வேகமாக ஓட்டிக் கொண்டு, சேருகிற இடத்துக்

சுசீலாவின் சிநேகிதி கொடுத்துவிட்டுப் போயிருந்த கட்டுரையை எடுத்து நிதானமாகப் படிக்க ஆரம்பித்தான் கிருஷ்ணபாரதி.

குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். சுசீலா, தன் வண்டியை மெதுவாகத்தான் ஓட்டுவாள். அவளுக்காக அளவுக்கு மீறிய நிதானத்தோடு பைக்கை ஓட்டுவது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அவளுக்கும் தகவல் தெரிந்து ஃபிலிம்சேம்பருக்கு படம் பார்க்க வந்து விடுவாளோ! - மனோகரியின் முகம் தோன்றி மறைந்தது.

ஆஃபீஸில் வேலையை முடித்து விட்டு, உடுப்பியில் போய் டிஃபன் சாப்பிட்டான். படம் துவங்குவதற்கு முன்பே ஃபிலிம் சேம்பருக்குச் சென்று விட்டான். வராந்தாவில் நுழைந்தான். வரிசையாகக் கிடந்த இருக்கைகளில் சுசீலாவும், பிரேமாவும் உட்கார்ந்திருந்தனர். கவிஞர் ராஜன் மங்களூருடன் சுசீலா பேசுவதை பிரேமா கேட்டுக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)


'K' மாதிரிதான் நானும்!
''Knife' என்றதுல 'K'சைலன்ட்டுன்னு சொல்றீங்களே... எப்படிப்பா அது?''
''இந்த வீட்ல நான் இல்லியா, அது மாதிரித்தான்!''
''வேலைக்குச் சேர்ந்த நாள்ல இருந்து எனக்கு தூக்கத்தில 'தூக்கித் தூக்கி' போடுது டாக்டர்!''
''என்ன வேலை செய்யறீங்க?''
''லிஃப்ட் ஆபரேட்டரா இருக்கேன்!''
''டேய், நேத்து நாம பாத்துட்டு வந்த பெண்ணுக்கு 'பாட்டு' நல்லா வருமாம்!''
''எதுக்கு, கல்யாணத்துக்கு அப்புறம் நீயும் நானும் சேர்ந்து அவகிட்ட பாட்டுவாங்கவா?''
வெ.சீதாராமன்



லகானைப் பிடிக்க கத்துக்கணும்!

எடை குறைவதற்கான உடற்பயிற்சியாக குதிரை ஏற்றம் பழகினார் குப்புசாமி. சில வாரங்கள் சென்று கணிசமாக எடை குறைந்தது - குதிரைக்கு!

- இது நல்ல ஜோக்தான் என்றாலும் குதிரையேற்றம் சிறந்த உடற்பயிற்சி. கம்ப்யூட்டர் காலத்துல குதிரை ஏற்றங்கறது என்னவாச்சு? அதுக்குன்னு தனிப் பயிற்சி வகுப்புகள் இருக்கா... கோவை வீதிகளில் விசாரிக்கத் துவங்கினோம்...

"இந்தப் பயிற்சியைத் தனிப்பட்ட டீம் எதுவும் எடுத்து நடத்த முன்வரவில்லை. என்றாலும், ஆர்வமுள்ள பல பெற்றோர்கள், கோவை ஆடிஸ் வீதியில், குதிரைகளை வளர்த்து வருபவர்களிடம் தங்கள் குழந்தைகளைப் பயிற்சி பெற வைக்கிறார்கள்.

மாலை நாலு மணி முதல், இரவு ஒன்பது வரை கூட, இவர்கள் தங்கள் குதிரைகளுடன் நேரு பூங்கா மைதானத்தில் இருக்கிறார்கள்.

குதிரையின் மீது தைரியமாக ஏறுவது, லகானைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சவாரி செய்வது என்று எல்லாவற்றையும் கற்றுத் தருகிறார்கள்.

பயிற்சியாளர்களில் வயது முதிர்ந்த பெரியவரான காஜா ஷெரீப் சொல்கிறார்...

''ஐம்பது வருடங்களாகக் குதிரைகளை வைத்துத்தான் என்





வாழ்க்கை ஓட்டம். பத்து வருடம் முன்வரை சாயந்திர வேளைகளில் பூங்காவுக்கு வருபவர்கள் தங்கள் குழந்தைகளை, குதிரைகளின் மேல் ஏற்றி, பொழுதுபோக்காகச் சவாரி செய்ய வைப்பார்கள்.

ஆனால், சமீபகாலங்களில் குறிப்பாக இந்தக் கோடை விடுமுறைக் காலங்களில், தினமும் நூறு குழந்தைகள் ரெகுலராக குதிரை



ஏற்றம், குதிரைச் சவாரி என ஆர்வத்துடன் கற்றுக்கொள்கிறார்கள். எங்களுக்கும் நல்ல வருமானம்'' என்றார்.

''குதிரை ஏற்றம் கத்துக்கறதுனால என்ன பயன்?'' என்று கேட்டால், பட்டென்று பதில் வருகிறது. ''குதிரையைப் போலத்தாங்க வாழ்க்கையும்! எவ்வளவு வேகமாக ஓடினாலும், லகான் நம்ம கையில இருந்தா எந்தக் கவலையுமில்லை. லகானைப் புடிக்கக் கத்துக்கிட்டவன் குதிரையை மட்டுமல்ல, வாழ்க்கையையும் ஜெயிச்சுடலாம்'' என்ற அப்பெரியவரின் வார்த்தைகள் காதுக்குள் குதிரையின் குளம்பொலியாக எதிரொலிக்கின்றன!

- ஆர். பாலா

தஞ்சை பரத்வாஜ்

மேஷம் :

தொட்ட காரியம் அனைத்திலும் வெற்றி. குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் கைகூடும். கடல் கடந்த மனிதர்களால் நற்பலன் கிட்டும். மனச் சஞ்சலம் தீரும். தீர்க்க முடியாத வழக்கு வெற்றி அளிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.

ரிஷபம்:

மனதுக்குப் புத்துணர்வு தரும் வாரம். கணவன்-மனைவிக்குள் இருந்த மனக் கசப்பு தீரும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. எங்கு சென்றாலும், கை, கால்கள் மீது கவனம் தேவை.

மிதுனம்:

வேலையில் இடமாற்றம் ஏற்படும். புதிய பொருள் வசதி உண்டாகும். சிலருக்குப் புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. திடீர் பணவரவு காத்திருக்கிறது. வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். கடன் சுமைகளிலிருந்து விடுதலை கிடைக்கும்.

கடகம்:

உல்லாசப் பயணம் தேடி வரும். திடீர் தனயோகம் கிட்டும். சுபகாரியங்கள் நிறைவேறும். உற்றார், உறவினர் வருகை நற்பலன் அளிக்கும். சிலருக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும். பணம் பலவழிகளில் வரும் வாய்ப்பு உண்டு.

சிம்மம்:

மனச்சஞ்சலம் தீரும். கடன் தொல்லைகளிலிருந்து நிவாரணம் பெறலாம். சிலருக்குப் பொறுப்பான பதவிகள் கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வரவேண்டிய நிதி ஆதாரம் கிட்டும்.

கன்னி:

புதிய திட்டங்களில் வெற்றி. சுபச் செலவுகள் தேடி வரும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். பணவரவுகள் உண்டு. சிலருக்குப் பதவி உயர்வுகள் கிடைக்கலாம். வியாபார விஷயங்களில் அதிக வருமானம் கிட்டும்.

துலாம்:

மனநிறைவான பலன்களை அளிக்கும் வாரம் இது. திடீர் பணவசதி வரும். புதிய தொழில் துவங்க வாய்ப்பு வருகிற வேளை இது. குலதெய்வ வழிபாடு குறை போக்கும். வாரக் கடன்கள் வசூலாகும். திருமணப் பேச்சு வார்த்தைகள் பலன் அளிக்கும்.



விருச்சிகம்:

உற்சாகம் தரும் வாரம். நீண்ட தூரப் பயணம் செல்ல நேரிடும். மனக்குழப்பம் தீரும். புதிய நண்பர்களின் வரவைத் தவிர்க்க இயலாது. கடன்பட்டாவது வீடு, வாசல் வாங்குவீர்கள். வியாபார வரவு நன்றாக இருக்கும்.

தனுசு:

வீடு மாற்றம் உண்டாகும். தொழில் இடப்பெயர்ச்சி காத்திருக்கிறது. உடல் நிலை சீராகும். பணவருவாய் பெருகும். குலதெய்வ வழிபாடு நிறைவேறும். சிலருக்குச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். பணக்கஷ்டம் இருக்காது.



நடக்குமென்பார்; நடக்கும்

மகரம்:

மகிழ்ச்சிகரமான வாரம். சிலருக்குப் புதிய வீடு/மனை வாங்குகிற வாய்ப்புள்ளது. கடன்கள் தீரும். புதிய தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். உற்றார், உறவினரால் நற்பலன்கள் கிடைக்கும். புதிய நவநாகரிகப் பொருள் வந்து சேரும்.

கும்பம்: மேன்மையான வாரம். பண வசதி பெருகும். புதிய முதலீடுகள் நற்பலன் தரும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். வியா பாரத்தில் வெற்றி கிடைக்கும்.

மீனம்: சிலருக்கு வீடு/மனை வாங்கும் வாய்ப் புண்டு. பூர்விகச் சொத்தை நல்ல விலைக்கு வாங்கும் யோகமுண்டு. நீண்ட நாள் நிலு வையில் உள்ள பணம் வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல வருவாய் உண்டு. மனச்சஞ்சலம் தீரும். மகிழ்ச்சி பொங்கும்.

மைல்கல்லை நோக்கி...

''என் படங்கள் ஒவ்வொன்றும், பார்வையாளன் கையில் ஒரு மாயக் கண்ணாடியைக் கொடுத்து, 'பார் நீ எவ்வளவு நல்லவனாக இருக்கிறாய். உனக்குள் பொதிந்திருக்கும் நல்ல விஷயங்களின் விகிதாசாரம் அதிகம்' என்று தட்டிக் கொடுக்கும்'' என்கிறார் இயக்குநர் மிஷ்கின். 'நந்தலாலா' ரிலீஸுக்காகக் காத்திருக்கும் மிஷ்கின், இயக்குநர் சேரனை ஹீரோவாக்கி 'யுத்தம் செய்'ய வருகிறார். டிஸ்கஷனில் பிஸியாக இருந்தவர் இடைவேளையில் நம்மிடம் பேசினார்


''இரண்டு குழந்தைகள் தங்கள் தாயைத் தேடிச் செல்லும் பயணம்தான் நந்தலாலா கதை. நமது வாழ்க்கைப் பயணத்தில் குழந்தைகளின் அன்பு எவ்வளவு முக்கியம் என்பதைச் சொல்லியிருக்கிறேன். திரைக்கதையை அமைக்கும்போது, மனத்தில் நல்ல மனிதர்களை மட்டுமே நினைத்துக் கொண்டேன். நந்தலாலாவில் மனநிலை பாதிக்கப்பட்ட கேரக்டரில் நடித்திருக்கிறேன். நான் நடிக்க வந்ததே எதிர்பாராதது. சினிமாப் பயணத்தில் நடிப்பு ஒரு மைல்கல். நானோ அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்'' என்கிறார் இயக்குநர் மிஷ்கின்.

நந்தலாலா படம், 'லேண்ட்ஸ்கேப் இன் தி மிஸ்ட்', 'தி சென்ட்ரல் ஸ்டேஷன்' ஆகிய படங்களின் தழுவலாமே?

''படம் வந்தபின்பு பேசுங்கள். எனது படைப்பு ஒரிஜினலா, காப்பியா என்று தெரியும்.''

நந்தலாலா என்று தாலாட்டிவிட்டு 'யுத்தம் செய்'ய அழைக்கிறீர்களே ஏன் இந்த முரண்பாடு?

''இது முரண்பாடு இல்லை. வீரம் என்பது, நாம் மிகவும் தவறாகப் புரிந்துகொண்டு விட்ட சொல். கோழிக்குஞ்சைக் கவர்ந்து செல்லும் பருந்திடமிருந்து, தனது குஞ்சினைக் காப்பாற்றப் போராடும் கோழியின் போராட்டம் போன்றதுதான், எனது யுத்தம் செய் வன்முறையும். வீரம் என்பது ஆக்கப்பூர்வமான செயலின்



பலனாகத்தான் இருக்க முடியும். அறிவின் விளைவல்ல!''

'யுத்தம் செய்' இலங்கைப் பிரச்னையா?

''இல்லை... வன்முறையைப் பற்றிய படம். எனது நண்பர் இயக்குநர் சேரன் இந்த கேரக்டருக்குப் பொருந்துவார் என்ற நம்பிக்கையில்தான் கதாநாயகனாகத் தேர்வு செய்திருக்கிறேன்.''

உங்களிடம் இளையராஜா ஒரு மேடையில் கோபப்பட்டாரே... சமாதானம் ஆயாச்சா?

''சில மாதங்களுக்கு முன்பு ஒரு விழாவில், ஒவ்வோர் உதவி இயக்குநரும் கண்டிப்பாக இளையராஜாவின் படத்தில் பணியாற்ற வேண்டும் என்று கூறினேன். எனக்குப் பிறகு பேசிய இளையராஜா, 'நான் யாருக்கு இசையமைக்க வேண்டும் என்று, எனக்கு யாரும் சிபாரிசு செய்ய வேண்டாம்' என்று கோபமாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். மறுநாள் பத்திரிகைகளும் எனக்கும் இளையராஜாவுக்கும் பெரிய பிரச்னை போல எழுதிவிட்டன. உண்மையில் இளையராஜாவின் கோபத்துக்கு இன்றுவரை காரணம் தெரியாது. அவரிடம் நான் சண்டை போடவும் இல்லை. பிறகு எதற்கு சமாதானம்?

அதுபோல, கிருத்திகா உதயநிதி இயக்கிய எய்ட்ஸ் தொடர்பான குறும்படத்தை மேடையில் நான் விமர்சித்ததாகவும், அதற்காக கிருத்திகா வருந்தியதாகவும், கமல், 'இதுபோன்று புதிய படைப்பாளிகளை விமர்சிக்கக் கூடாது' என்று கேட்டுக் கொண்டதாகவும் மீடியாவில் முற்றிலும் பொய்யான செய்தி வெளியானது. உண்மையில், அந்தக் குறும்படத்துக்காக கிருத்திகா உதயநிதிக்கு ஸ்கிரிப்ட்டில் பல்வேறு ஐடியாக்களைக் கொடுத்து, நானே அஸிஸ்டென்டாகவும் பணியாற்றினேன். இப்படியிருக்க, நானே எப்படித் தவறாகச் சொல்வேன்? ஒரு சதவிகிதம் கூட உண்மையில்லாத இதுபோன்ற தகவல்களைப் பரப்புவதால் மீடியாவுக்கு என்ன ஆதாயம்?

இந்தச் சம்பவத்தால்தான், கமலை வைத்து நான் இயக்குவதாக இருந்த புராஜெக்ட் டிராப் ஆனதைப் போன்று, தவறான பரப்புரைகள் செய்யப்படுகின்றன. உண்மையில் கமலின் படம் கைவிடப்பட்டது பெரிய பட்ஜெட் என்ற காரணமேயன்றி வேறொன்றில்லை. இதைப் போன்ற தேவையற்ற சிக்கல்களில் சிக்காமல் இருக்கத்தான், சமீபகாலமாக மேடையில் பேசுவதைத் தவிர்த்து நான் உண்டு என் படங்கள் உண்டு என இருக்கிறேன்''- என்றவர் சற்று உஷ்ணம் தணிந்து சிரிக்கிறார்.

"கோழிக்குஞ்சை பருந்திடமிருந்து காப்பாற்றப் போராடும் கோழியின் தாக்குதல் போலத்தான் 'யுத்தம்செய்' படத்தின் வன்முறையும்!"



- ராகவ்குமார்

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு - ரூ. 10,000/-
இரண்டாம் பரிசு - ரூ. 7,500/-
மூன்றாம் பரிசு - ரூ. 5,000/-



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-2010

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். யார் வேண்டுமானாலும், எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும், எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.

விதிமுறைகள்:

* கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.

* சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.

* அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.

* படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பள்ளியிறுதிச் சான்றிதழ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

* முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

* தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால்தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணைய தளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.

* பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

* முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.

* 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ்,
47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

* **கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15.**
* **போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 (01.08.2010) ஆண்டு மலரில் வெளியாகும்.**

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்

முத்துலிஜி

கதை வந்திருச்சா... கங்க்ராட்ஸ்!



"எழுத்தாளர் ஸார், உங்களுக்கு தபால்."

முதன்முறையாக, போஸ்ட்மேன் அழகேசனின் குரலில் கேலி இல்லை. அவன் கையில் என் பெயருக்கு வந்திருந்த 'குருவி' இதழ் இருந்தது. சந்தோஷத்தில் வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். எப்போதும் திரும்ப வரும் கதைகளுக்குப் பதில், இம்முறை என் கதையைச் சுமந்து கொண்டு 'குருவி'யே வந்திருக்கிறது!

அடுத்த பதினைந்து நிமிடங்களுக்கு, சந்தோஷத்துக்கும், நம்பிக்கையின்மைக்கும் நடுவில் ஊசலாடிக் கொண்டு, 'குருவி' இதழைப் பிரிக்காமல் உட்கார்ந்திருந்தேன். இதற்குள் அழகேசன் ஒலிபெருக்கி, பாதித் தெருவை என் வீட்டுத் திண்ணையில் கூட்டி விட்டது!

"பாராட்டுகள் ஸார்!"

"குருவி இதழில் கதை வருவதென்றால் சும்மாவா?"

"எனக்கு அப்போதே தெரியும், ஸார் பெரிய எழுத்தாளர் ஆவார் என்று"

நேற்று வரை கிண்டல் செய்த குரல்கள், என்னை உடனடியாக எழுத்தாளனாய் அங்கீகரித்தன!

"கதையைக் காட்டுங்கள், பார்ப்போம்"

ஆவல் பொங்கும் கண்களுக்கு நடுவே, ஒவ்வொரு பக்கமாய்ப் பிரித்தேன். இதழ் முழுதும் தேடினேன். என் கதை இல்லை. பின் எப்படி வந்தது குருவி இதழ்? குழப்பத்துக்கு நடுவே, கோடி வீட்டுச் சுப்புணி கத்தினான்:

"உங்கள் கதை அடுத்த இதழில் வருமாயிருக்கும் ஸார்! தவறாக முந்தின இதழை அனுப்பி விட்டார்கள்!" ஓ, அப்படித்தான் இருக்கும். இன்னும் ஒரு வாரம் வரை காத்திருக்க வேண்டும்!

மூன்றாம் நாள் நண்பன் கோபுவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

'திடீரென நினைவு வந்தது, இந்த மாதம் உன் பிறந்த நாள் வருகிறதென்று. உன் படிக்கும் ஆர்வத்தைக் கருத்தில் கொண்டு, என் பிறந்த நாள் பரிசாக, உன் பெயரில் 'குருவி' இதழுக்கு ஒரு வருட சந்தா அனுப்பியிருக்கிறேன். அனேகமாய், முதல் இதழ் இந்நேரம் வந்திருக்கும். மற்றபடி...

மேற்கொண்டு என்னால் கடிதத்தைப் படிக்க முடியவில்லை! ●

கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

தர்மபுரி-கிருஷ்ணகிரி மாவட்டங்களின் கற்கண்டு வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...



- உடனடித் தேவை?
- உங்க ஊர்ப் பெருமை?
- வாட்டம் தரும் வேதனை?
- அமைதி தரும் ஆலயங்கள்?
- பெருமைப்பட வைக்கும் தலைவர்கள்?
- மனசைச் சுத்திகரிக்கும் டூரிஸ்ட் ஸ்பாட்?
- கலை இலக்கியத்தில் உங்க மாவட்டங்களின் பங்களிப்பு?
- அடிப்படைத் தேவைகள் நிறைவேறிடுச்சா... இல்லையா?

வாசகர்களே...

உங்க மாவட்டங்களைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான்
கல்கி தர்மபுரி-கிருஷ்ணகிரி மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கு!



ஆமாம்! உங்கள் தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களின்.. பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி : 22.05.2010

கலக்க வருதுப்பா கல்கி
தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்கள்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

அதென்னமோ தெரியவில்லை. தமிழ் நாட்டில் யாருக்குமே வாழ்த்த மட்டும் வயதில்லாமல் போய்விடுகிறது. பளபளக்கும் பிரம்மாண்ட டிஜிட்டல் பேனர்கள், சுவரொட்டிகள், பத்திரிகையில் ஒரு பக்க விளம்பரங்கள் என, நாலாபக்கங்களிலும் வாழ்த்த வயதில்லாமல், பலரும் ஏங்குவதாகத் தெரியவருகிறது.

'ஆண்டவனுக்கே ஆண்டவனே...! அகில உலக அதிபதியே' என்று இவர்கள் அநியாயத்துக்குப் புகழ்ந்து தள்ளும் தலைவரிடமே, வாழ்த்தத் தகுதியான வயதை இவர்கள் ஏனோ வரமாகக் கேட்டுத் தொலைக்காமல் இப்படிப் புலம்புகிறார்களே?

டிஜிட்டல் விரிப்பைத் தயாரிக்கும்போது, கிட்டத்தட்ட கட்சித் தொண்டர்கள் அனைவரின் தலைகளும் அரை அடி சதுர அளவில் இடம்பெறுகின்றன. புன்னகை, இளிப்பு, முறைப்பு, அசடுவழிதல் இத்யாதி அனைத்து முகபாவங்களுடன், பேனரின் கீழே கொட்டை எழுத்தில் 'வாழ்த்த வயதில்லையே' என்ற சோக பாவமும் சேர்ந்திருக்கும்.



ஒரு பஸ் நிலையத்தில், பஸ் புறப்பாட்டிற்காக உட்கார்ந்திருந்தபோது, மேற்படி லட்சணங்களோடு பேருந்து நிலையச் சுவரை ஒரு பேனர் அடைத்து ஒட்டப்பட்டிருந்தது.

''அதோ, அது வரதனோட தாத்தா தானே?'' என்று என் மனைவி அதிசயமாகக் கேட்டாள்.

அகிலா கார்த்திகேயன்

''அந்தத் தொண்டு கிழம் இங்கே எப்படி வரும்... போன மாதமே போய்ச் சேருமான்னு கிடந்தது'' என்றேன்.

''அட! அந்தப் பேனரைப் பாருங்க... மேலிருந்து நாலாவது வரிசையில், வடமிருந்து இடமாக ஐந்தாவதா போட்டிருக்கே... அதே முகம்'' என்று குறுக்கெழுத்துப் போட்டியாக, போட்டோவில் இருந்தவரைக் கண்டுபிடிக்கச் சொன்னாள். அது வரதனின் தாத்தாவேதான்!

அந்தக் கிழம் எனக்குத் தெரிந்து, வயதுக்கு வந்த நாற்பது பிளஸ் ஒரு அரசியல் தலைவரை வாழ்த்த வயதில்லாமல், வணங்குவதாக அந்த பேனரில் கண்டிருப்பதுதான் வருத்தம்.

இப்படி ஒட்டுமொத்தமாக அத்தனை ஏஜ் குரூப் ஆசாமிகளும், தலைவர்களை விடத் தங்கள் வயது குறைவு என்று பறைசாற்றிக் கொள்வதில், சம்பந்தப்பட்ட

தலைவருக்குக் கோபம் வராமல் போவதும் எனக்குப் புதிராகத்தான் உள்ளது. அது ஆண் வர்க்கத் தலைவராக இருந்தாலும் ஒப்புக் கொள்ளலாம். ஆனால், பெண் தலைவிகளுக்கும், இப்படிக் கிழங்கள், தங்களை விடத் தலைவி வயதில் மூத்தவள் என்பதாகக் காட்டிக் கொள்ளும் வயது விவகாரத்தில் அக்கறை காட்டாமல்... மூதாட்டி இமேஜை சகித்துக் கொள்வது ஏனென்று தெரியவில்லை.

இந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளலாமென்று, எனக்குப் பரிச்சயமான அரசியல்வாதி தென்மதியைத் தேடிப் போனேன். நான் போனபோது, அவரும் ஒரு டிஜிட்டல் பேனரைத் தயாரிக்க ஆர்டர் கொடுக்கக் கிளம்பிக் கொண்டிருந்தார். அவருடனேயே பிரிண்டிங் கடைக்கு போனேன்.

''போன முறை தலைவரோட தொண்ணூறு வயது நிறைவு விழாவுக்குப் போட்டோமே, அதே சைஸிலே போடணும்'' என்று பிரிண்ட்டரிடம் அவர் பேனருக்கான விளக்கத்தை ஆரம்பித்தார்.

அப்போதே எனக்கு 'சப்'பென்றாகி விட்டது. தொண்ணூறு வயது தாண்டிய தலைவருக்கு ஏதாவது பாராட்டு நடத்தப் போகிறார்களோ என்னவோ? அதில் 'வாழ்த்த வயதில்லை' என்று போடுவது ஒப்புக்கொள்ள வேண்டியதே என்பதால், இந்தச் சந்தர்ப்பத்தில் என் கேள்விக்கு பதில் கிடைக்காதே என்று எண்ணிக் கொண்டேன்.

''அந்த 'பேனர்'லே, தலைவர் ஃபோட்டோவைக் கொஞ்சம் சின்னதா போட்டு... தொண்டர்கள்லே இன்னைக்கு பதினைஞ்சு

ஜாலி ஸ்டோர்ஸ்

பேர் ஃபோட்டோவை சேர்க்கணும். அப்புறம், முக்கியமா இவரோட ஃபோட்டோ தூக்கலாத் தெரியணும்'' என்று தென்மதி பத்திரமாக வைத்திருந்த அந்தப் பாலகனின் ஃபோட்டோவை அவரிடம் கொடுத்தார்.

''தலைவரோட கொள்ளுப்பேரன் ஃபோட்டோ... வர்ற மாசம் ஏழாம் தேதி ஒரு வயசு முடியுது. 'முதலாம் ஆண்டு விழா காணும் எதிர்காலத் தலைவரே'ன்னு பளிச்சினு தெரியறா மாதிரி போடணும்'' தென்மதி விவரித்து விட்டு நகர ஆரம்பித்தார். அப்போதுதான் என்னிடம்,

''என்ன ஸார்? ஏதோ சந்தேகம்னு கேட்க வந்துட்டு ஒண்ணும் கேட்காமலே இருக்கீங்க?'' என்றார்.

"ஆண்டவனுக்கே ஆண்டவனே... அகில உலக அதிபதியே..."

''அது வந்து... ஏன் எல்லா வாழ்த்து பேனர்லேயும் 'வாழ்த்த வயதில்லை...' என்று, நான் என் கேள்வியை ஆரம்பித்தவுடன், சடாலென்று திரும்பவும் விழுந்தடித்துக் கொண்டு கடைக்கு ஓடினார். நானும் பின்னால் சென்றேன்.

''யோவ் விக்டரு! மறந்தே பூட்டேன். ஸார்தான் ஞாபகப்படுத்தினாரு... பேனர்லே எப்பவும் போடறது போல 'வாழ்த்த வயதில்லை வணங்குகிறோம்'னு போடணும். மறந்து தொலைச்சிடாதே'' என்று கூறி நடந்தார்.

என் இந்தக் கேள்விக்குப் பதில் தெரிந்து கொள்ளும் வயது எனக்கில்லை என்று மட்டும் புரிந்ததில், வாயைப் பொத்திக் கொண்டேன். ●


பொற்கிழி
8

இழைகிற இசையில் நுழைகிற ராகம்



வசந்தபாரதி

சுடுகிற வெயிலைச் சுண்டி எறிகிற
நிழல்வெளி நீதான் எனக்கு; என்றும்
தொடுகிற கணங்களைத் தேனெத் தருகிற
அமுதெனும் மனசு உனக்கு; அறிவேன்!

மின்னல் வளைவில் மிதக்கும் நிலவே!
எந்தன் நெஞ்சில் துளிர்க்கிற கனவே!
ஜன்னல் வழியே வருகிற சாரலே!
கொஞ்சம் என்னை நினைத்திடு எழிலே!

இழைகிற இசையில் நுழைகிற ராகம்
இளமையின் சிகரம் விதைத்திடும் மோகம்
மழையினில் நனையும் மலரினில் ஊறும்
மதுவதைச் சுவைக்கும் மன்மதக் காலம்

பட்டுத் தெறிக்கு முன்பார்வை ஒளியில்
விட்டுப் போகுதென் உயிரின் திசையும்
சொட்டும் பனித்துளி ஊட்டி மலரே!
தொட்டுக் கொள்ளென் மனதின் பிசைவை!

நாளும் நீயென் செல்போன் திரையில்
நகைமுகம் வைப்பாய் எனக்கென விருந்தாய்
தாளில் எழுதிய ஐக்கூ மழையே!
தனிமை ஒழிந்திட வருகநீ விரைந்தே!

பிடிபடும் காவியப் புன்னகை வார்த்தைகள்
அடிபட அடிபட உனக்கென ஆசையோ? நான்
துடித்திடும் வேளைகள் வெடித்திடும் சோகங்கள்
தனிப்படத் தனிப்பட ரசிப்பதும் தேவையோ?

காற்றில் மலர்ந்த மின்மினிப் பூவே!
காதல் கதைகளின் நெடுவழித் தாளே!
நேற்றை மறந்து இன்றினில் பிறப்பாய்!
நொடியும் தொடர்ந்தே இன்பம் சுரப்பாய்!

எதுயெது வெனவே புதியதைத் தேடும்
இணையே யில்லாச் சுகமும் நாடும்
நிதியாய் நெஞ்சில் நினைவுகள் சேரும்
நெடுநாள் வாழ்வும் காவியம் பாடும்!


நீங்கள் தீவிர கிரிக்கெட் ரசிகரா? அப்படியானால் உலகக்கோப்பை போட்டி குறித்த விவரங்களை விரல் நுனியில் வைத்திருப்பீர்கள். ஆக க்ரினெய்டா நீங்கள் கேள்விப்பட்ட நாடு தான். மேற்கிந்தியத் தீவு. 2007 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் (வேறு சில கரீபியன் நாடுகளுடன் சேர்ந்து) க்ரினெய்டாவில் நடைபெற்றது.

இதற்காக ஒரு விதத்தில் சீனாவுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது க்ரினெய்டா. க்ரினெய்டாவில் ஒரு மாபெரும் தேசிய விளையாட்டு அரங்கு உருவாக சீனா நான்கு கோடி டாலர் அளித்துள்ளது. பணம் மட்டுமல்ல, முந்நூறு சீனத் தொழிலாளிகளின் உழைப்பும் சேர்ந்துதான் இந்த அரங்கம் உருவானது.


ஆனால், பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் வகையில் ஒரு சம்பவம் அந்த அரங்கின் துவக்க விழா அன்று நடைபெற்றது. தனது நன்றிக்கு அடையாளமாக, சீனாவின் தேசிய கீதத்தை அன்று ஒலிபரப்ப முடிவெடுத்தது க்ரினெய்டா. ஆனால், ஒலித்ததோ தைவானின் தேசிய கீதம். அதாவது எந்தப் பகுதி ஒரு போதும் சுதந்திரமானது அல்ல, தன்னைச் சேர்ந்ததுதான் என்று சீனா கருதுகிறதோ அந்தக் குடியரசின் தேசிய கீதம். அவசர அவசரமாக சீன தேசிய கீதம் இசைக்கப் பட்டதும், நடந்த தவறுக்காகப் பல மேலதிகாரிகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டதும் வேறு கதை.

கரீபியன் கடலுக்குத் தென்கிழக்கே உள்ளது க்ரினெய்டா. டிரினிடாட் மற்றும் டொபாகோவுக்குத் வடமேற்கே, வெனிகலாவுக்கு வடகிழக்கே உள்ளது மேற்கிந்தியத் தீவு.

உள்ளூர்வாசிகளிடமிருந்து இப் பகுதியைப் போரிட்டு அடைந்தார்கள் ஃபிரெஞ்சுக்காரர்கள். இதைத் தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையே ரத்த ஆறு தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தது. காமஹோக் என்று அப்போது பெயர் கொண்டிருந்த இப்பகுதிக்கு லா க்ரினெய்டா என்று பெயரிட்டது







பொறுப்பு. இதைத் தொடர்ந்து 1974ல் விடுதலை பெற்றது.

1976. க்ரினெய்டாவின் சரித்திரத்தில் ஒரு திருப்புமுனை. அங்கு வளர்ந்து வந்த 'நியூ ஜுவல் இயக்கம்' என்ற புரட்சி அமைப்பு வலுப்பெற்றது. அதன் தலைவர் மௌரிஸ் பிஷப் ஆட்சியைக் கைப்பற்றினார். அவ்வளவுதான், நாட்டின் அரசியலமைப்பு சட்டம் கிடப்பில் போடப்பட்டது. பிஷப் அரசு அமைத்தார். வெளிநாட்டு சக்திகள் ஊக்குவிக்கப்பட்டன. முக்கியமாக கியூபாவின் அறிவுத்திறன் அதிகமாகவே பயன்படுத்தப்பட்டது. டாக்டர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், ஆசிரியர்கள் என்று பல தரப்பட்டவர்கள் கியூபாவிலிருந்து



பிரெஞ்சுக்காரர்கள்தான். இப்பகுதியின் முக்கிய ஏற்றுமதி, சர்க்கரையாக இருந்தது. அற்புதமான இயற்கைத் துறைமுகம். உலகின் பல பகுதிகளைத் தன் பிடிக்குள் வைத்திருந்தாலும், ஃப்ரான்சுக்கு இந்த அளவு அற்புதமான துறை முகம் இதற்குமுன் கிடைத்ததில்லை.

1763ல் உண்டான பாரிஸ் உடன்படிக்கையைத் தொடர்ந்து இந்தப் பகுதி பிரிட்டனிடம் போய்ச் சேர்ந்தது.

1967ல்தான் 'ஐக்கிய ராஜ்ஜியத்தின் கூட்டு நாடு' என்ற தகுதி பெற்றது. அதாவது வெளியுறவு மற்றும் ராணுவத்துக்கு பிரிட்டன் பொறுப்பு. ஆனால், உள் விவகாரங்களுக்கு க்ரினெய்டாதான்

க்ரினெய்டாவுக்குக் குடிபெயர்ந்தனர். விவசாயமும் முன்னேற்றம் அடைந்ததைக் குறிப்பிட வேண்டும்.

ஆனால், நாளடைவில் பிஷப்புக்கும் அவரது இயக்கத்தைச் சேர்ந்த வேறு சில தலைவர்களுக்கும் கருத்து மோதல் உண்டானது. கியூபா மற்றும் சோவியத் யூனியனுடன் நட்புடன் பழகினார் பிஷப். இரு தரப்பிலிருந்தும் மக்கள் போக்குவரத்துத் தடையின்றி விளங்கியது.

இறைவன் அரசியைக் காக்கட்டும்!

✱ 'மசாலாத் தீவு' என்றும் க்ரினெய்டா அழைக்கப்படுவது உண்டு. ஏலக்காயிலிருந்து தொடங்கி லவங்கப் பட்டை வரை பலவித மசாலாப் பொருள்கள் எக்கச்சக்கமாக விளைகின்றன. உலக மசாலாவில் இருபது சதவிகிதம் இங்கு தான் விளைச்சல். கொடியில் கூட மசாலாவைக் கொண்ட நாடு இது.

✱ மக்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களால் வாங்கப்பட்ட அடிமைகளின் வாரிசுகள். இளைஞர்களில் பலரும் வெளிநாடு செல்ல விரும்புகிறார்கள்.

✱ பாராளுமன்ற ஜனநாயகம் - ஆனால் அரசியலமைப்பு சட்டப்படி மன்னராட்சி.

என்றாலும் அரசியலைப் பொருத்தவரை க்ரினெய்டா ஓர் அணி சேராத நாடு என்கிற அளவில்தான் அதை வழிநடத்தினார். தீவிர இடதுசாரிகளுக்கு இது பிடிக்கவில்லை. 'பதவியிலிருந்து இறங்கு' என்று கோஷமிட்டார்கள். பிஷப் அசரவில்லை. அவ்வப்போது அரசியல் நிலைமை கவலைக்கிடமாவதும், சரியாவதுமாக மாறிமாறி காட்சிகள் அரங்கேறின.

1983 அக்டோபர் 19அன்று பிஷப் ஆட்சி முடிவுக்கு வந்தது. தானாக அல்ல. எதிரணியைச் சேர்ந்த பெர்னார் கோர்ட் மற்றும் அவர் மனைவி ஃபிலிஸ் ஆகியோர் ராணுவ உதவியுடன் இந்தக் காரியத்தைச் செய்தனர். எனினும் மக்கள் ஆதரவு பிஷப்புக்கு எக்கச்சக்கமாக இருந்தது. 'மீண்டும் நானே பதவி ஏற்பேன்' என்று பிஷப் முழங்க, அவர் கொல்லப்பட்டார்.

'மக்கள் புரட்சி ராணுவத்தின் ஆட்சி. தொடர்ந்தது. இதைத் தொடர்ந்து, இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மக்களில் கணிசமானவர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர். 'எங்கள் அனுமதியின்றி நாட்டைவிட்டு வெளியேறினால் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாவீர்கள்' என்றது ராணுவம்.

அமைதியான ஓர் அரசை ராணுவம் கைப்பற்றுவதா? கவலை தெரிவித்தார் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன். இந்தக் கேள்வியில் சுயநலமும் கலந்திருந்தது. போதக்குறைக்குத் தங்களது கடும் எதிரியான கியூபா, க்ரினெய்டா நாட்டில் விமானப்பாதை ஒன்றை அமைப்பதைச் சந்தேகத்துடன் நோக்கியது அமெரிக்கா.

'800 அமெரிக்க மாணவர்கள் க்ரினெய்டாவின் மருத்துவக் கல்லூரிகளில் படிக்கிறார்கள். அவர்களின் நலனில் நாங்கள் அக்கறை காட்டாமல் இருக்க முடியுமா?



எனவே, அவர்களைப் பத்திரமாக எங்கள் நாட்டுக்கே கொண்டு வந்துவிடுகிறோம்' என்றபடி க்ரினெய்டாவை ஆக்கிரமித்தது அமெரிக்கா.

'ஆபரேஷன் அர்ஜென்ட் ஃப்யூரி' என்ற பெயரில் நடைபெற்ற இந்த ஆக்கிர

✱ தேசிய வாசகம் - 'இறைவனை உணரும் நாங்கள் ஒருமித்த எண்ணத்துடன் |Motto: ""Ever Conscious of God We Aspire, Build and Advance as One ✱ ராஜாங்க கீதம் - இறைவன் அரசியைக் காக்கட்டும் ✱ தலைநகரம் - செயின்ட் ஜார்ஜெஸ் ✱ ஆட்சி மொழிகள் - ஆங்கிலம் மற்றும் படோயிஸ் ✱ எண்பத்திரண்டு சதவிகிதம் கறுப்பர்கள், பதிமூன்று சதவிகிதம் கறுப்பர்- ஐரோப்பியர் கலப்பு மக்கள் ✱ பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்ற நாள் - பிப்ரவரி 7, 1974

✱ மிகச் சிறிய நாடுகள் பட்டியலில் இடம் - 30. மிகக் குறைவான மக்கள் தொகை கொண்ட நாடுகளில் இடம் - 88 ✱ தேசியப் பறவை க்ரினெய்டா புறா. இது வேகமாக அழிந்து வரும் இனம்.

மிப்பை சர்வதேச விதிகளின்படி தப்பு என்றது ஐ.நா. என்றாலும் வீட்டோவைப் பயன்படுத்தித் தப்பித்தது அமெரிக்கா. பின்னர் அமெரிக்க ராணுவம் பின் வாங்கியது என்றாலும் அதற்குள் அது நினைத்ததைச் சாதித்திருந்தது.



அரசியலமைப்பு சட்டம் மீண்டும் அமலுக்கு வந்தது. பிஷப் கொலைக்குக் காரணமானவர்கள் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றம் அவர்களில் பதினான்கு பேருக்கு தூக்குதண்டனை விதித்தது. ஒருவர் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டார். மூன்று பேருக்கு நாற்பத்தைந்து வருட சிறை வாசம் என்று முடிவானது. பின்னர் தூக்கு தண்டனை வழங்கப்பட்டவர்களுக்கும் ஆயுள் தண்டனையே போதுமானது என்று முடிவெடுக்கப்பட்டது.

அரசியல், ராணுவப் புயல்கள் போதாதென்று 2004ஆம் ஆண்டு க்ரினெய்டாவை நிலைகுலைய வைத்தது இயற்கைப் புயல். ஐவான் என்று அழைக்கப்பட்ட இந்தப் புயலால் நாட்டில் இருந்த தொண்ணூறு சதவிகித வீடுகள் அடையாளம் இன்றி சிதைக்கப்பட்டன. போதாக்குறைக்கு அதற்கு அடுத்த ஆண்டே எமிலி வேறு (அடுத்த புயலின் பெயர்!) வீசி பாதிப்பை அதிகப்படுத்தியது. ஐவான் அளவுக்கு எமிலியால் பாதிப்பு இல்லை என்றாலும், எமிலியால் உண்டான நஷ்டம் முப்பது கோடி டாலர்.

ஃபீனிக்ஸ் என்பது இலக்கியத்தில் மட்டுமே உள்ள கற்பனைப் பறவைதான். ஆனால், அதற்கு ஒரு நடைமுறை உதாரணமாக க்ரினெய்டாவைச் சொல்லலாம். புயல்கள் வீசிய அடுத்த ஆண்டே தன்னை முழுவதுமாகச் சுதாரித்துக்கொண்டு மீண்டும் சுற்றுலாப் பயணிகள் படை எடுத்து வருமளவுக்குத் தன்னைச் சரிசெய்து கொண்டது. டிசம்பர் 2005, அதன் எல்லா ஓட்டல் அறைகளும் சுற்றுலா பயணிகளால் நிரம்பி வழிந்தன.

(அடுத்து - தாடிக்குப் பெயர் பெற்ற நாடு)

கிரிக்கெட் மோகத்தில் சிக்கி மற்ற விளையாட்டுகளைப் புறக் கணிக்கிறோம். உலகத் தரத்தில் தடகள வீரர்கள் நம் நாட்டில் இல்லை; உருவாகக் கூடிய வீரர்களுக்குப் பயிற்சியும் ஊக் கமும் இல்லை என்ற குறை களைப் போக்க, கோவையில் இதோ ஒரு அத்லெட் அரும்பு களின் முகாம்:



சீனிவாசன்



நேரு விளையாட்டு அரங் கத்தில் நுழைந்தபோது, ஐந்து வயதுக் குழந்தைகளில் இருந்து - பதினேழு, பதி னெட்டு வயது வரையானவர் கள், கோடை காலத் தடகளப் பயிற்சி முகாம்களில் பங் கெடுத்து கொண்டிருந்தார்கள்.

இதன் சிறப்புப் பயிற்சியா ளர், மாநிலத்தின் தடகளப் போட்டிகளின் தனிப் பயிற்சி யாளர் சீனிவாசனிடம் பேசி னோம்!

''கடந்த பத்து வருடங் களாக இந்தப் பயிற்சி முகாம் நடக்குது. கோவை அத்லெட்டிக் (Athletic) சங்கத்தின் சார்பில், கட்டணம் எதுவும் வாங்காம லேயே நாங்கள் இந்தப் பயிற்சி முகாமை நடத்துகிறோம்'' என்ற சீனிவாசனிடம், ''கோடை முடிந் தவுடன் இவர்கள் பயிற்சியை நிறுத்தி விடுகிறார்களா?'' என்று கேட்டால்,

''இல்லை, ஒவ்வொரு வரு டமும் இந்த முகாம் முடிந்தவுடன், குழந்தைகளுக்கு ஒரு sports meet நடத்துகிறோம். அதில் திற மையானவர்களைத் தேர்ந் தெடுத்து, தொடர்ந்து சிறப்புப் பயிற்சி தருகிறோம். பல வீரர் கள், வீராங்கனைகள் தேசிய அளவு சாதனையாளர்களாக உருவாக்கப்பட்டு இருக்





திறமையின் திருவிழா!



கிறார்கள்.

விளையாட்டில் ஆர்வமுள்ள ஏழைக் குழந்தைகள் தங்கள் ஆவல்களைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்!

வசதியானவர்கள் இந்தக் குழந்தைகளுக்குப் பால் மற்றும் சத்தான உணவு வகைகளைத் தருகின்றனர். பெற்றோர்களின் பங்களிப்பு இதில் ரொம்பவும் அதிகம்'' என்கிறார். ''ஸ்போர்ட் மட்டும்தானா?'' என்று கேட்டால், ''யோகா, தியானம் செய்ய வைத்து பங்கேற்பைச் செம்மையாக்குகிறோம். மலை மீது ஏற வைத்து கால்கள், உடம்பு இவற்றை வலிமையாக்குகிறோம்'' என்கிற சீனிவாசன், இது ''திறமைக்கான திருவிழா'' என்று புன்னகை செய்கிறார்.

செய்தி, சித்திரம் :
ஆர்.பாலா

குழந்தை அழுதுகிட்டிருந்தது கேட்டுச்சு. பூறிகுலாக் உறக்கம் கலைஞ்சு எழுந்தப்போ, கண்களைப் பொத்தியபடியே அவன் மனைவியைக் கூப்பிட்டான்.


''கோல்டா! சனியன் கத்துது பாரு!''

கோல்டாவிடமிருந்து பதிலில்லை. கத்திப் பார்த்தா, அவள் வீட்டிலிருக்கிறதாவே தோணல்லை. ஆச்சரியம்! குளிக்கப் போயிருப்பாளோ...

ஒரு துண்டுத் துணியைக் குழந்தையின் வாயில் திணித்து, அதன் அழுகுரலைக் குறைத்தவன், உடை அணியத் தொடங்கினான். அதில் அனிச்சையாக ஈடுபட்டாலும், மனம் என்னமோ, ஜோப்லினர் வீட்டிலிருந்து, தான் 'லவுட்டிய' வெள்ளி மெழுகுத்திரி ஸ்டாண்ட்களினால் தனக்கு என்ன கிடைக்கும் என்று கணக்குப் போடலாயிற்று. ஏதோ திடுமென உறுத்த, அவன் பரணில் ஏறி 'சரக்கு' வைத்த... வைத்த...

காணோம்! அவன் வெச்ச இடத்துல சரக்கைக் காணோம். கத்திக் கிடந்ததையெல்லாம் தள்ளித் துழாவித் தேட.... காணோம்! இல்லை!

அ வ ர ம ா க க் கீழே குதித்து,



திருடனின் அழுத குழந்தை!



மனைவியின் உடைகள் தொங்கும் திரையைத் தள்ளி விலக்க.

காணோம்! ஒன்றுமே இல்லை!

புரிதலின் கிரணங்கள் மெதுவாக அவன் மூளையில் பரவ, அவள் ஓடிப்போனது தெளிவாகியது.

ஆங்கிலவழி தமிழில் : சித்தன்



''போகட்டும்... ஒழிஞ்சு நாசமா போகட்டும். யாருக்கு இங்க கவலை?'' எந்தவிதத்திலும் தனக்கு அது பொருட்டில்லை என்பதாக வலிய வருத்திக் கொண்டு, சுவற்றில் காறித் துப்பினான்.

''நல்லதாப் போச்சு. ஹஹஹஹ்ஹஹ்...''

குழந்தை பார்வையில் பட்டது!

''ஓ! இந்தக் கேடுகெட்ட குழந்தையை என்ன செய்யறதாம்? அவ மட்டும் எங்க தொலைஞ்சான்னு தெரிஞ்சா.. இதையும் விட்டு வாசற்படியில விட்டுடலாம்... இந்தா! இதையும் எடுத்துக்கோன்னு...''

இருட்டுல மின்னலடிச்சாப்ல, ஒரு மோசமான யோசனை மனசுல தோண, கை நடுங்கிச்சு! மூஞ்சியே வெளிறிப் போச்சுது! மேலுதட்டைக் கடிச்சுக்கிட்டே குழந்தைகிட்டப் போனான். அழுக்குப் போர்வை மூலையில கிடக்கக் கையை வாய்ல வெச்சுக்கிட்டு, உத்தரத்துல எதையோ பார்த்துச் சிரிச்சுக்கிட்டே இருந்திச்சு குழந்தை. அதோட வாயைப் பார்த்தா, இவனுக்குத் தெரிஞ்ச யாரையோ போல... பழைய கூட்டாளி யாராவதோ... சரியா ஞாபகம் வரலை!

அவசரமாகக் குழந்தையிடமிருந்து விலகி, தொப்பி அணிந்து, வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியேறினான். அமைதியிழந்த மனத்துடன் இலக்கற்ற நடை. கூப்பிடுவதைப் போல குழந்தையின் அழுகுரல் அவன் காதுகளுக்கு நெருக்கமாக, மிக நெருக்கமாக, கைகால்களை ஆட்டிக்கொண்டு அழுது ஆர்ப்பாட்டம் செய்தவாறு அவன் முன்னால்...

முடியாது!

அவன் திரும்பியே ஆக வேண்டும்!

''இப்ப மட்டும் அவ என் கையில கிடைச்சா, கழுத்தைப் புடிச்சு, நெறிச்சு, நாக்கு வெளில தள்ளணும். நாசமாப் போறவ!''

பேக்கரியொன்றில் ஒரு ரொட்டியை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினான் அவன். குழந்தை முன்பு போலவே பிறந்த மேனிக்குச் சிரித்துக்கொண்டிருந்தது.

''எந்தப் பிசாசாவது இதைக் கொண்டு போவாதா? சிரிக்கிறதைப் பார்... வசதி தான் போல!''

மீண்டும் வெளியேறினான். ஆனால் அவனால் தொடர்ந்து நடக்க இயலவில்லை. மனத்தைப் பிடுங்கி அரிப்பெடுப்பதைப் போல குழந்தையின் குரல் அவனை விடாது துரத்திக் கொண்டே வந்து வாட்டியது.

கைகளை முறுக்கிக்கொண்டு வீடு திரும்ப, இப்போது குழந்தை, ''மா...ம்...மா அ...மா..ம்... மாம்அ'' என்று பெருங்குரலெடுத்து அழுது கொண்டிருந்தது.

''உங்க அம்மா! ஆங்? பிசாசே... போ... போய்த் தேடு. உங்கம்மாவ... அவளை .... கொண்டு போவ...''

குழந்தையைக் கைகளில் எடுத்துக் கொண்டான். தன்னுடைய சிறிய உதடு

களால் ஆர்வத்தோடு தேடியவாறு, குழந்தை அவனுடன் ஒட்டிக்கொண்டது.

''நாத்தம் பிடிச்சச் சிறுக்கி! வெடிச்சே போவா...'' மேலும் திட்டினான். ''அழாதே... யப்பா! அழுவாதப்பா... வேணாம்... சும்மாயிருடா... சும்மா யிருடா...'' என்று குழந்தையின் கன்னங் களையும் உடலையும் தட்டிக்கொடுத் தான். குழந்தையோ எதையோ பேச விரும்புவதைப் போல கைகளை அசைத்த வாறு தலையை அசைத்துக் கொண்டு உதடுகளால் தேடியது.

எங்க கிடக்குது பாலு? ஸ்டவ்வுல கொஞ்சம் பால் இருக்கு அப்பாடா!

ரொட்டியை அதில் நனைத்து குழந் தைக்கு ஊட்டியவாறு... சாப்பிடுடா... மகனே.. உங்கம்மா உன்னை விட்டுட்டுப் போயிட்டா, நாசமாப் போவா. ஒரு நாய் கூட அதோட குட்டியை விட்டுடாது பாரு. அவ மோசக்காரி, அழாதே! நான் உன்னைக் கைவிட மாட்டேன். சத்தியமா! நான் வாக்குக் கொடுத்தா கொடுத்தது தான்!''

அமைதியான குழந்தை யைத் துணியில் சுருட்டி எடுத்துக் கொண்டு தெரு வில் இறங்கினான். சந்தைக் கடையில் அத்தனை பேரும் திரும்பிப் பார்த்தார்கள். பூறிகுலாக் ஒரு குழந்தை யோடு!

கிராட்னிக் அவனோட தட்டுக்கடையிலேர்ந்து கூப்பாடு போட்டான். ''ஏ... குலாக்! எங்கிருந்துடா இதைப் புடிச்ச...?'' அவன் பொண்டாட்டி எந்திருச்சு ஓடி வந்தா... ரெண்டு கையையும் அகலமா விரிச்சு கிட்டு.

துண்டால முகத்தைத் தொடைச்சி கிட்டு, சிரிச்சகிட்டே குழந்தையைத் தட் டிக் கொடுத்தா.

''உன் குழந்தையா? குலாக்.. பாரேன்.. அப்படியே உன் மனைவி மரீனாதான். அதுவும் அந்த மூக்கு, அழகாயிருக்குப்பா. எங்கிட்டக் கொடு...'' குழந்தையை வாங் கிக்கிட்டு, கொஞ்சிக்கிட்டு, குதிச்சுக் கிட்டே போனாள். ''சிரிக்கிறாயா படவா ராஸ்கல்...''

எங்க திருட்டுக் கும்பலோட மாஸ்டர் பெரிசு கிராட்னிக். மெதுவா எந்திருச்சு வந்து, நின்னு குழந்தையைப் பாத்திட்டு,

''ஒல்லியா ஸ்ட்ராங்கா இருக்கான். எந்தப் பைப்புலயும் அட்டகாசமா ஏறிப் புடுவான்ல. சரி, யாரு அம்மா?'' என்றான்.

''அத்தையேன் கேக்குற. நெருப்புல வெந்து போவா. ஓடிப்போயிட்டா. வெள்ளி மெழுகுத்திரி ஸ்டாண் டோட!''

''குழந்தையை உங்கிட்ட விட்டுட்டு?''

''ஆமாம்.''

''சரியில்லை... சரியில் லையே!'' பெரிசு தலையைச் சொறிஞ்சிக்கிட்டே சொல் லிச்சு. சின்ன கிராட்னிக் அப்போதான் அங்க வந்தவன், ''அப்ப சரி! தொழிலை விட்டுற வேண்டியதுதான்னு நெனைக் கறேன். இதை வேற யாரு



குழந்தை பலமாக அழுதுகொண்டிருந்தது. கைகளில் வாரிக்கொண்டு, தூரத்துக் குடிசைகளை நோக்கி நடந்தான்.

பார்ப்பாங்க? உம் பொண்டாட்டி சரியா உன்னை மாட்டிவிட்டுட்டா இல்ல...''

''என்னை நெனச்சு உன் தலையைப் பிச்சுக்காத... ஆண்டவன் பார்த்துப்பான். குலாக், குழந்தையைக் கைகளில் வாங்கிக் கொண்டு, நகரத்தினூடே நடக்க ஆரம்பித்தான். எல்லோருமே அவனைப் பார்த்துக் கைகாட்டி, சிரிப்பதாகத் தோன்றியது. நகரத்துக்கு வெளியே, காட்டுப் பகுதியில், ஒரு கல்லின் மீது உட்கார்ந்தான்.



''மார்கழியும் என் மனைவியும் ஒண்ணு.''
''அதெப்படி...?''
''ரெண்டுக்கும் நடுங்கறேன்ல''
- ஜே.தனலட்சுமி

சுற்றி ஒருவரும் இல்லை. பாறைகளில் மோதி, சுழன்று செல்லும் தூரத்து நீரோடையின் சலசலப்பு மெதுவாகக் கேட்டது. குலாக் குழந்தையை அருகில் கீழே வைத்துவிட்டு, கசப்புணர்வு மேலிடப் பார்த்தான்.

குழந்தை ஏதோ தியானத்துல இருக்குற மாதிரி, விரலைச் சூப்பிக்கிட்டு, இவனையே பார்த்துச்சு! இதை வெச்சுக்கிட்டு என்னா பண்றதுன்னே தெரியலியே... இப்படியே இங்கேயே விட்டுட்டுப் போயிரலாமா? சே! பாவம்ல... என்னோட ரத்தமும் சதையும்ல!

குழந்தையைக் கைகளில் எடுத்து அதனுடைய எல்லா உறுப்புகளையும் சோதனையிட்டான். குழந்தையில் தன்னுடைய அடையாளங்களைக் கண்டதும், உடலில் மகிழ்ச்சி ஏறிக்கொண்டு பச்சைக் குதிரை தாண்ட ஆரம்பித்தது.

''குட்டிகுலாக்... ஆமாம். நீ குலாக் தான்! நல்லாவும் இருக்குறதானே! பைப்புல மட்டுமா ஏறுவ? வெண்டிலேட்டரு, ஜன்னலு, பூட்டை உடைப்ப! அதுக்கு அப்புறம் உனக்கும் குழந்தை பொறக்கும். அதோட அம்மாவும் வுட்டுட்டுப் போயிடுவா.. அதனால என்ன? நீ உங் குழந்தைகளைக் கூட்டிக்கிட்டு வீடு வீடாப் போய் பிச்சையா எடுப்ப?''

ஆத்தங்கரையில ஓரமா இதை வெச்சுட்டுப் போய், மரத்துப் பின்னால நின்னு எட்டிப் பார்த்தா விரல் சூப்பிக்கிட்டு காலை ஆட்டிக்கிட்டு, ''மாம...ம்...மா...ம்மா''ன்னு சொல்லிச்சு. இன்னும் தூரமாப் போய் வேற மரத்துப் பின்னால நின்னு கேட்டப்பவும், அதோட முணுமுணுப்பு கேட்டிச்சு. பார்க்க முடியலதான். ஒரே ஓட்டம்தான். ஆனாக்கா ஓடறப்பவும்... அத்தோட அழுகைக் கேக்குதே! ஒரு வேளை ஆத்துல உருண்டு விழுந்திருச்சுன்னா... ஓடிக்கொண்டிருந்தவன், நின்று, வந்த வழியே, திரும்பினான்.

குழந்தை பலமாக அழுதுகொண்டிருந்தது. கைகளில் வாரிக்கொண்டு, தூரத்துக் குடிசைகளை நோக்கி நடந்தான். ஒவ்வொரு வாசலிலும் நின்று, உடைந்த குரலில் சொல்ல ஆரம்பித்தான்.

''அம்மா... இந்த அனாதைக்குக் கொஞ்சம் பால் கொடுங்கம்மா...'' ●



மேலவைக்கு வைரமுத்து?

■ வைரமுத்து, வாலி, வி.சி.குகநாதன், பொன்னம்பல அடிகளார், சிலம்பொலி செல்லப்பன், வா.செ.குழந்தைசாமி, சிவந்தி ஆதித்தன், ஐராவதம் மகாதேவன், அவ்வை நடராஜன், நாகநாதன், நீதிபதி மோகன், இராம வீரப்பன் - இது என்ன பட்டியல் என்கிறீர்களா? கருணாநிதி அமைக்கப் போகிற சட்ட மேலவையில், இவர்களெல்லாம் இடம் பெறக் கூடும் என்று, ஆளும் கட்சி வட்டாரத்தில் பேசப்படும் பட்டியல்தான் இது. சுமார் எண்பது பேர் இடம் பெறும் வகையில் அமையப்போகும் மேலவையில், செஞ்சி ராமச்சந்திரன், எல்.கணேசன், கண்ணப்பன் போன்ற முன்னாள் ம.தி.மு.க.வினரும் இருப்பார்களாம். தவிர, அ.தி.மு.க.விலிருந்து தி.மு.க.வுக்கு வந்த ராமநாதபுரம் சத்தியமூர்த்தி போன்றவர்களுக்கும் இடம் கிடைக்குமாம். மாவட்ட அளவில் கட்சிப் பொறுப்பும், நிர்வாகப் பொறுப்பும் ஏதுமில்லாத முக்கிய உடன் பிறப்புகளின் பட்டியலும் தயாராகிறது. அவர்களும் நுழைக்கப்படுவார்கள். இதற்கிடையில் நீதிமன்றம் மூலமாக மேலவை அமைக்கத் தடை வாங்க முடியுமா என்று அ.தி.மு.க. யோசித்து வருகிறதாம்.

■ மருத்துவமனையில் சிகிச்சை பெறும் தொண்டர்களைச் சென்று பார்ப்பது, அடிக்கடி இரண்டாம் கட்டத் தலைவர்களைச் சந்தித்து விவாதிப்பது, கட்சி சார்பில் அமைக்கப்பட்டு திறக்கப்படாமல் இருந்த அண்ணா, எம்.ஜி.ஆர். சிலைகளைத் திறந்துவைப்பது என்று சுறுசுறுப்பாக அம்மா செயல்படத் துவங்கிவிட்டதாகச் சொல்லி மகிழ்கிறது அ.தி.மு.க.வட்டாரம். 'அதே சமயம் உடல் உபாதைகள் அவரது வேகத்துக்குத் தடைபோடும் வகையில் அமைந்து விடுகின்றன' என்று சொல்லியும் வருத்தப்படுகிறார்கள். எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் ஜெ.தலைமையில், தமிழக அரசை எதிர்த்துக் கண்டன ஆர்ப்பாட்டம் நடக்கப் போகிறதாம். நிலக்கரி இறக்குமதி தொடர்பாக ஜெ.விடுத்த அறிக்கை, தனக்குக் களங்கம் விளைவிப்பதாகச் சொல்லி கனிமொழி அவருக்கு விட்ட வக்கீல் நோட்டீஸ் குறித்தும், குஷியில் இருக்கிறார்கள் அ.தி.மு.க. மேல்மட்டத் தலைவர்கள். 'எங்கள் அம்மா பார்க்காத நோட்டீஸா, நீதிமன்றமா?' என்று அலட்சியமாகச் சொல்கிறார் ஒரு முக்கியப் பிரமுகர்.

- சஞ்சயன்

காதில் விழுந்தவை

உத்தரப்பிரதேசத்தின் கொடை

மும்பையில் வட்டமாக நின்று, பானிபூரியைச் சும்மா 30-40 என்று ஸ்வாஹா பண்ணும் பெண்கள் ஏராளம். ''பானிபூரி சாப்பிடும்போது கூச்சம், வெட்கம் எல்லாம் படக்கூடாது'' என்று எல்.கே.ஜி. மும்பை கர்ள் கூடச் சொல்லுமே! நாலைந்து பெண்கள் சேர்ந்தாலே போதும். (பசங்களும்தான்) 'ரிங்கா ரிங்கா ரோஸஸ்' கணக்கா வட்டமா நின்னுண்டு கலாட்டாவாகப் பேசி, ஹைடோனில் சிரித்து, பானிபூரி சம்ஹாரம் பண்ணிக்கொண்டிருப்பார்கள்.

'பையா பையா' (அண்ணா) என்று பானிபூரி பாவ்பாஜி விற்பவனுடன் ஒரு உறவு முறை! ''பையா இம்லி சட்னி (புளிப்பு சட்னி) 'பையா தீக்கா' (காரம்), 'பையா மீட்டா (இனிப்பு) சட்னி...' என்று ஏகப்பட்ட நேயர் விருப்பம் வேறு.

''நான் என் ஹஸ்பெண்டை செலக்ட் பண்ணியதே பானிபூரி திங்கறச்சேதான். நான் முப்பது முடிக்கறதுக்குள்ளே 'அவன்' (அவுரு இவுரு இதெல்லாம் பாட்டிங்க காலத்துப் பளக்கம். கொடுத்து வச்ச தாத்தாங்க) நாப்பது தின்னுட்டான். அப்பவே டிஸைட் பண்ணிட்டேன். இவன்தான் நமக்குச் செட்டாவான்னு...'' கர்வமாக ப்ரீத்தி சொல்லுகிறாள்.

பெயரைப் போடக் கூடாது என்ற கண்டிஷனுடன், ஒரு தாதர் பகுதித் தமிழர் நம்மிடம் பகிர்ந்துகொண்ட சீக்ரெட், ''எங்க ஃபஸ்ட் நைட்டில் பால் பழம் இதெல்லாம் கிடையாது. பானிபூரி, வடாபாவ் கண்டிப்பா இருக்கணும்னு வொய்ஃப் சொல்லிட்டா...'' பயங்கரச் சிரிப்புடன் சொல்கிறார்.

மும்பையின் நாடித் துடிப்பே பானிபூரி, பேல்பூரி, பாவ்பாஜி, வடாபாவ்தான்! பத்து ரூபாய்க்குள் முடிந்துவிடும். டிஃபனாகவும் சாப்பிடலாம். இன்னிக்கு டின்னர் இதுதான் என்றும் சாப்பிடலாம். சுடச்சுட கண்ணெதிரே பரிமாறப்படும் ஈஸி, க்விக் அண்ட் பெஸ்ட் + எக்கனாமிக்கல் வெரைட்டி.

சில மும்பை பிரத்யேக உணவு வகைகளின் சரித்திரத்தைப் பார்ப்போமா...

பானிபூரி: ஒவ்வொரு மாநிலத்திலும் இதற்கு ஒரு பெயர். கல்கத்தாவில் 'ஃபுச்கா',



தில்லி பக்கம் 'கோல்கப்பா', பீஹாரில் 'குப்கப்' என்று பல பெயர்கள். க்ரிஸ்பான குட்டிக் குட்டி மினிபூரியில் உருளை பட்டாணி வைத்து, புளித் தண்ணியில் முக்கி டைரக்டாக நம்

லதாசேகர்

வாயில் போய் விடும் ஐட்டம்.
டு டேஸ்ட்! உத்தரப்பிரதேசம்
தான் பானிபூரியை உலகிற்கு
அறிமுகப்படுத்திய மாநிலம்.
காரம், புளிப்பு, இலேசா
இனிப்பு என அவரவர் சாய்
ஸுக்கு ஏற்றாற்போல் பானிபூரி
உண்டு. இளம்பெண்களுக்கு
மிக மிகப் பிடித்த டிஷ்.
அல்', 'உஸ்', 'ஹாய்', 'வாட்
ஹாப்பண்றா'... என்று ஏதோ
பேசிக் கொண்டே, பானிபூரி
களை டஜன் கணக்கில்



உள்ளே தள்ளு
வார்கள். பானிபூரிக்கு பல
சகோதர சகோதரிகள்!
(ஹிஹி...) தஹிபூரி, ஸேவ்பூரி,
பேல்பூரி, பட்டாடாபூரி...
என்று ஏகப்பட்ட சாட்
வெரைட்டி. மினி பூரிகளை


ப்ளேட்டில் பரத்தி ஆலு, புளிச்சட்னி, புதினா சட்னி, தயிர், மிக சன்னமான ஓமப்பொடி (இதுதான் ஸேவ்) தூவி நிமிஷமாகக் கொடுத்து விடுவார்கள். ஜுஹு மற்றும் சௌப்பாத்தி பீச்சில் சாட் சாப்பிடவென்றே பெண்கள் க்யூவில் நிற்பார்கள்.

பேல்பூரி: முட்டைப் பொரியல், வேகவைத்த உருளை, புதினா மல்லி சட்னி, துருவிய வெள்ளரி தூவி கொடுக்கப்படும் பேல்பூரிக்கு, மயங்காத இளம் பெண்ணும் உண்டோ? ஆர்டர் பண்ண வேண்டியது தான், முகமே சுளிக்காமல் பூமியில் வந்த காரணமே பெண்களுக்கு பேல்பூரி + சாட் ஐட்டம் கொடுப் பதற்குத்தான் என்றளவிற்கு கடமையுணர்ச்சி பையாக் களுக்கு! பாசக்காரப் பசங்க.

பாவ்பாஜி: மும்பையின் சிக்னேச்சர் டிஷ் பாவ் பாஜி. மும்பைவாசிகள் மூன்று 'ஜி'யின் மேல் உயிரே வைத்திருக்கிறார்கள். சிவாஜி, சம்பாஜி, பாவ்பாஜி! சிவாஜி, சம்பாஜி வீர மராத்தியர்கள். சத்ருக்களை அழித்தவர்கள். ஆனால், பாவ் பாஜியை அன்பர்களே மென்று தின்று அழிப் பார்கள். மென்மையான பன்னுடன், நன்றாக மாஷ் செய்யப்பட்ட உருளை, குடைமிளகாய் டொமேட்டோ கறியுடன், ஏகப்பட்ட வெண்ணெ யுடன் சுடச்சுடப் பரிமாறப்படும் எக்ஸலெண்ட் மும்பை ஐட்டம் பாவ்பாஜி. பாவ் என்றால் ப்ரெட், பாஜி என்றால் கறி. (நான்வெஜ் அல்ல) என்ன, லேட் நைட்டாக இருந்தாலும் பாவ்பாஜி வியாபாரம் படுக்கவே படுக்காது.

நெசவாலையில் வேலை பார்க்கும் தொழி லாளர்களுக்கெனவே, பல வருடங்களுக்கு முன் னால் கண்டுபிடிக்கப்பட்ட உணவுதான் பாவ்பாஜி. பாவ்பாஜியில் தற்போது ஏக வெரைட்டி. சீஸ் பாவ்பாஜி, பனீர் பாவ் பாஜி, ஜெயின் பாவ்பாஜி (இதில் வெங் காயம் பூண்டு நோ) மஷ்ரூம், ட்ரை ஃப்ரூட்... என லிஸ்ட் வெகு நீளம்.

ஃபாஸ்ட் ஃபுட் மற்றும் சாட் வெரைட்டி களில் பாவ்பாஜி முன்னணியில் நிற்கிறது. மாலை நேரத்து மயக்கம்... என ஈவ்னிங் வந்தாலே பாவ் பாஜிதான். ரோட்டில்தான் என்றில்லை, பெரிய பெரிய ஹோட்டல்களிலும் இன்று பாவ்பாஜி மெனுகார்டில் கண்டிப்பாக உண்டு. ●



உயிர்த்தெழுகை

இரா.எட்வின்

இப்போதெல்லாம் அலைபேசியின் அழைப் பொலியினை ரசிக்க முடிவதில்லை. எந்தக் கடன்காரனோ, எப்படித் திட்டப் போகிறானோ, என்ன சொல்லி சமாளிக் கப் போகிறோமோ என்று மனது கிடந்து பதை பதைக்கிறது.

அழைப்பொலி கேட்டவுடன் எண்ணைப் பார்க்காமல் அலை பேசியை எடுத்து யாராவது பேசினால், ஒன்று அவன் கடனற்றவனாக இருக்க வேண்டும் அல்லது எதற்கும் பயப்படாதவனாக இருக்க வேண்டும்.

'அப்பா குளிக்கிறாங்க', 'அப்பா செல்லை வச்சிட்டுப் போய்ட்டாங்க' இப்படி ஏதாவது சொல்லிக் கடன்காரர்களை சமாளிக்கப் பழக்கியிருக்கிறேன் பிள்ளைகளை.

'அம்மா, கடங்காரங்களுக்கு பயந்துகிட்டு அப்பா இருபத்தி நாலு மணி நேரமும் குளிச்சுகிட்டே இருக்கப் போறார், வேணாப் பாரேன்.' பையனின் எள்ளல் இப்போதெல்லாம் எல்லையைத் தாண்டினாலும் இனிக்கவே செய்கிறது. ரசிக்கக் கற்றுக் கொண்டு விட்டேன். கடன், ரசனையை மெருகு செய்திருக்கிறது.

பேப்பர்காரனுக்கு நான்கு மாத பாக்கி. காலையில் அவன் வரும் நேரம் பார்த்து டாய்லெட்டில் நுழைந்து கொள்வேன். இன்னும் மூன்று தெருக்களாவது போக வேண்டும் அவன். எனவே, எனக்காக அவனால் காத்திருக்க இயலாது. 'சாரெ... கொஞ்சம் கவனிக்கச் சொல்லுங்க' என்றபடி ஓடி விடுவான். இன்றுகாலை வரை இதுதான் வாடிக்கை.

சனிக் கிழமைகளில் நான் வீட்டில்தான் இருப்பேன் என்பதைத் தெரிந்துகொண்டு, அன்று மதியம் வீட்டுக்கு வந்து விட்டான். ஏறத்தாழ விடாக் கண்டனாய் மாறியிருந்தான். என்ன சொல்லியும் நகர மறுத்தான். 'அக்காட்ட இருக்கும்; கொஞ்சம் வாங்கிக் கொடுங்க சார். இல்லாட்டி, மேல் வீட்டிலாச்சும் கொஞ்சம் கேட்டு வாங்கிக் கொடுங்க சார்' என்று நச்சிக் கொண்டே நகர மறுத்தான்.

இந்த நேரம் பார்த்து, உதவுகிறோம் என்று தெரியாமலேயே சரியாய் உதவிக்கு வந்தான் பையன். 'அப்பா அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வுன்னு 'ப்ளாஷ். ஓடுது, வந்து பாரேன்.'

''அடுத்த புதன் வந்து வாங்கிக்கப்பா' பட படவென்று சொல்லிவிட்டு 'ப்ளாஷ்' பார்க்கிற சாக்கில் உள்ளே ஓடினேன். போனானோ, இல்லை அங்கேயே நின்று முனகிக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை.

'டிஏ போட்டாச்சு. வந்து பாரேன் 'விட்டு' உற்சாகத்தில் கத்தினேன்.

'என்ன வந்து என்னத்துக்கு ஆகப் போகுது. வானத்தையே வளைச்சுக் கொடுத்தாலும், அடகு வச்ச தாலிக் கொடிய மட்டும் திருப்பித் தரப் போறதில்ல. கட்டைல போற வரைக்கும் இந்தக் கவரிங் செயினதான் கட்டிக்கிட்டு மாரடிக்கணும்னு ஆயிடுச்சு. பாசிப் படர்ந்த மாதிரி

செயின்பட்ட இடமெல்லாம் பச்சப் பச்சையா, வெயில் நாளைல ஒரே எரிச் சலும் அரிப்பும்தான்... எல்லாம் என் தலை எழுத்து'

கூப்பிடக் கூடாத நேரத்தில், 'விட்டு'வைக் கூப்பிட்டால் இப்படிவாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான். ஆனாலும், இது ஒன்றும் புதிதல்ல. இது மாதிரி வாங்கி கட்டிக் கொள்ளாத மத்திய தர புருஷன்மார்கள் இருப்பார்கள் எனில், ஒன்று அவர்களுக்கு வேறு வருமானம் இருக்கும் அல்லது 'தன் பெண்டு தன் பிள்ளை, சோறு வீடு' என்று சுருங்கிப் போன ரகமாக இருக்க வேண்டும். விடுங்கள், என்ன சொல்லி என்ன, வாங்க வேண்டியதை வாங்கியாகி விட்டது.

அப்போது பார்த்துதான் அலைபேசியில் கேம்ஸ் விளையாடிக் கொண்டிருந்த மகள், 'செல்வ பாண்டியன் மாமா லைன்ல இருக்காங்க. எங்க போயிருக்கீங்கன்னு சொல்லட்டும்?' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தாள் .

''வர வர குட்டிப் பிசாசுக்கு குசும்பு ஜாஸ்தியாயிடுச்சு!'' மகளின் நக்கலை ரசித்தபடியே அவளிடமிருந்து அலைபேசியைப் பிடுங்கினேன்.

அவரது அழைப்புக்காகத்தான் காத்திருந்தேன். அப்பாவை ஒரு நல்ல மனநல மருத்துவரிடம் அழைத்துப் போக வேண்டி இருந்தது. ஒரு மாத காலமாகவே கொஞ்சம் கூடுதலான மன அழுத்தத்தோடு இருக்கிறார். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் செத்துப் போன எனது அம்மா உயிரோடு வந்திருப்பதாகவும், அப்பாவை தேடிக் கொண்டிருப்பதாகவும் சொல்லி அவரை ஒரு ஜோசியக் கும்பல் உசுப்பி விட்டு, அப்பாவின் ஓய்வூதியத்தில் பெரும் பகுதியைக் காலி செய்திருந்தனர்.

அந்தக் கும்பலை விரட்டி விட்டு அப்பாவை மீட்டெடுத்து வருவதற்குள் அவரின் மனநிலை, மருத்துவர் தேவை படுமளவிற்குப் பழுது பட்டிருந்தது.

அம்மா படத்திலிருந்த மாலையை கழற்றினார். ஏனென்று கேட்டால் 'அவ உயிரோட வந்துட்டாடா' என்றார். சரியாகி விடும் என்றெண்ணி கவனிக்காமல் விட்ட தன் விளைவை அனுபவிக்கத் தொடங்கியிருந்தோம்.

சாலையில் ஏதேனும் ஆட்டோ சத்தம் கேட்டு விட்டால் கூடப் போதும். அம்மாவாக இருக்குமோ என்ற எதிர்பார்ப்போடு எட்டிப் பார்க்க ஆரம்பித்தவர், நாளாக நாளாக பேரனை அழைத்து 'தம்பி, அப்பாயிதானான்னு பாரு. அவளாயிருந்தா பையக் கொஞ்சம் தூக்கிட்டு வாடா பாவம்' என்று பிதற்றவே ஆரம்பித்து விட்டார்.

''அப்பாயி, எங்க தாத்தா வெளிய போக்க ஆட்டோல வருதுக்கு. அது பாட்டுக்குதோளை கட்டுட்டு இருக்கு. பொலம்பாம தூங்கு' சலித்துக் கொள்கிறான் பையன்.

''இவன சொல்லலடா. ஒங்க பெரிய அப்பாயிய சொன்னேன்''

''அப்பாயி, தாத்தாவ வந்து என்னன்னு கேளு. செத்துப் போன அப்பாயி கல்லறையிலிருந்து எழுந்து வருதாம். நீ கட்டிக்கிட்டதும் ஓரக! பெத்துப் போட்டதும் ஓரக அப்பாயி''

''எம் மவன இன்னொருதரம் ஓரகன்னு



சொன்ன, அப்படியே கொமட்லயே குத்திப் புடுவேன் ஆமா''

''மகன சொன்னதும் அப்படியே பொத்துக்கிட்டு வருது பார்டா ஒங்க அப்பாயிக்கு. தங்கமாமே, அப்படி கிப்படி தங்கமா இருந்தாதான் பரவாயில்லையே! அப்படியே தூக்கிட்டுப் போய், அந்த அறுபது கிலோவையும் அடகு வச்சுட்டு அந்த அருமத் தங்கம் வாங்கிவச்சிருக்க கடனையெல்லாம் அடச்சிருக்கலாமே.'

''ஏம்மா அடகெல்லாம் வச்சுகிட்டு. பேசாம வித்துட்டே செட்டிலாயிருக்கலாமே.'' பையன் முடிக்கவும் அம்மா உட்பட எல்லோரும் சத்தமாய்ச் சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இப்படித்தான் அப்பாவை வார ஆரம்பித்து, என்னில் வந்து முடியும் ஒவ்வொரு முறையும்.

செல்வ பாண்டியன் மருத்துவத் துறையில் இருப்பதால், அவரிடம் ஆலோசனை கேட்டிருந்தேன். அவருக்குத் தெரிந்த மருத்துவரிடம் நேரம் வாங்கிக் கொண்டு தெரிவிப்பதாக சொல்லியிருந்தார். அநேகமாக அதற்காகத் தானிருக்கும்.

ஒரு சன்னமான புன்னகையோடு அப்பாவை வரவேற்றார் மருத்துவர்.

'உங்க பிறந்த நாள் என்னங்க சார்?' என்ற எளிய கேள்வியோடுதான் மருத்துவர் தொடங்கினார். அப்பாவின் தெளிவும் தமிழ்த் தேசிய அரசியலும் மருத்துவரோடு ஒத்திசைந்து போகவே, இருவரும் நண்பர்களாய் மாறி நிறையப் பேசினார்கள். நானும் செல்வபாண்டியனும் பார்வையாளர்களாய் மாறிப் போனோம்.


இறுதியாய் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

'மரித்தவர்கள் உயிரோடு வர இயலும் என நம்புகிறீர்களா?'

'நிச்சயமாய் இல்லை' என்ற அப்பா 'ஆனா, என்னோட வொய்ப்பை மீண்டும் உயிரோடு பார்த்ததாய்ச் சொல்கிறார்கள்' என்றார்.

மருத்துவர் எதுவுமே பேசவில்லை. 'பாண்டியன், சாரை பக்கத்து ரூமுக்கு கூட்டிட்டு போய் பி.பி செக் பண்ணுங்க'' என்றவர், ஒரு புன்னகையோடு அப்பாவை வழி அனுப்பி வைத்தார்.

"அப்பா... நீயும் சித்தப்பாவும் தாத்தாவுக்கு என்ன தருவீங்க?"



எழுந்த என்னை அமரச் செய்தார்.

'ஒன்னும் பயப்பட வேண்டாம். ஆறு மாசத்துல எல்லாம் சரி ஆகிவிடும். தொடர்ந்து மாத்திரைகளைக் கொடுங்கள். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கூட்டிட்டு வாங்க. அதிகமா தூங்கினாலோ, அல்லது சரியா தூங்கலைன்னாலோ உடனே கூட்டிட்டு வந்துடுங்க'

ஏராளமான நம்பிக்கையோடு அப்பாவை அழைத்துக் கொண்டு வீடு வந்தேன்.

அம்மாவிடமும் விட்டு விடமும் விவரங்களைச் சொல்லிவிட்டு, வாங்கி வந்த வண்ண வண்ண மாத்திரைகளை டப்பாக்களில் கொட்டிக் கொண்டிருந்தேன். ஓடி வந்த மகள் கேட்டாள்:

'இந்த மாத்திரை எதுக்குப்பா?'

'இது தாத்தாவுக்கு நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்?'

'இது?' அடுத்த மாத்திரையைக் காட்டினாள்.

'இது தாத்தாவுக்கு மன அமைதியையும் நிம்மதியையும் கொடுக்கும்.'

'அப்படின்னா நீயும் சித்தப்பாவும் தாத்தாவுக்கு என்னத்தான் கொடுப்பீங்க?'

கோடம்பாக்கத்தின் நெருக்கடியான கங்கையம்மன் தெருவில், ஒரு நீச்சல் குளம் அமைக்க முடியும் என்பதை, நம்மால் கற்பனை செய்ய முடியவில்லை. ஆனால், செய்திருக்கிறார் மாலதி. இருக்கும் சின்ன இடத்தில் கச்சிதமான நீச்சல் குளம். வாண்டுகள் தண்ணியில் குதியாட்டம் போடுகின்றன. அம்மாக்கள் கரையில் அமர்ந்து பெருமிதத்துடன் (பயம்?)



சம்மருக்கு



பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பயிற்சி கொடுக்க, தேர்ந்த நபர்கள்.

இதே போன்ற நீச்சல் குளத்தை மாலதி மற்றும் அவர் கணவர் இளங்கோவும் எட்டு வருடங்களுக்கு முன்பு தொடங்கினார்களாம். தொடர்ந்து கிடைத்த ஆதரவு காரணமாக கோடம்பாக்கம் பகுதியிலும் தொடங்கி விட்டார்கள். 1700 ரூபாய் கொடுத்தால் பதினைந்து வகுப்புகளில், நீச்சல் கற்றுக்கொடுத்து விடுகிறார்கள். ''அதன்பின், நான்கு ஸ்ட்ரோக் உட்பட, போட்டிகளுக்குத் தயார் செய்யும் அளவுக்குக் கற்றுக் கொடுக்கிறோம். அதற்குத் தொடர் உறுப்பினராக வேண்டும்'' என்கிறார் மாலதி.

ஜூஸ், நொறுக்குத் தீனி என்று வயிற்றுக்கு வஞ்சனையில்லாமல் போட்டு கன்னாபின்னாவென்று வளரும் குழந்தைகளை, இங்கே அனுப்பினால் நீச்சல் மூலம் டிங்கரிங் வேலை செய்து ஷேப் செய்து விடுகிறார்கள். தண்ணீரைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். ''மறுசுழற்சி முறையில் தினசரி சுத்தப்படுத்துகிறோம். ஏனென்றால், குழந்தைகள் தொற்றுகளால் (இன்ஃபெக்ஷன்) எளிதில் பாதிக்கப்படுவார்கள். நீச்சலடிக்கும் குழந்தைகள் பயிற்சி நேரம் முடிந்ததும், கரைக்கு வந்து அம்மா பசிக்குது என்று அழும்போது, எண்ணெய்ப் பலகாரங்களைக் கொடுக்காமல், 'பிஸ்கட், பழங்கள்' என்று கொடுக்கப்பட வேண்டும்'' என்கிறார் மாலதி.

பெரியவர்களை சர்க்கரை, இரத்த அழுத்தம் என்று கலங்கடித்து வரும் இந்தக் காலகட்டத்தில், உடற்பயிற்சிக்காக குட்டீஸ்களுக்குப் போட்டியாக பெரிசுகளும் கு(க)ளத்தில் குதித்து விடுகின்றன! சம்மரில் சிறப்புச் சேர்க்கை என்றாலும், வருடம் முழுவதும் பயிற்சி வகுப்புகள் உண்டு.

...செக்!



● எஸ்.ஏ.கிருஷ்ணா



குட்டீஸ்களின் லூட்டி தாங்காமல்தான் ஏதாவது சம்மர் கோச்சிங் கிளாஸில் சேர்த்து விடுகிறார்கள் பெற்றோர்கள். இது மிகவும் தவறு. குழந்தைகளுக்கு என்ன பிடிக்கிறதோ அதில்தான் சேர்த்து விட வேண்டும்'' என்கிறார் செஸ் பயிற்சியாளர் எஸ்.ஏ.கிருஷ்ணா. வேளச்சேரி மற்றும் அசோக்நகர் ஒய்.எம்.சி.ஏ.வில் ஏப்ரல் மே மாதங்களில் செஸ் சம்மர் கேம்ப் நடத்துகிறார் இவர்.

கிருஷ்ணா நடத்தும் செஸ் வகுப்பில் நான்கு வயதிலிருந்து பதினைந்து வயது வரை உள்ள சிறுவர், சிறுமிகள் பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ''பதினைந்து நாள் வகுப்பில், அடிப்படை அம்சங்களைக் கற்றுக் கொண்டுவிட முடியுமாம். ஜவஹர் வித்யாலயாவில் யு.கே.ஜி. போகும் கிருத்திகா, மழலை மாறாமல், ''செஸ் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் பெரிய சேம்பியன் ஆவேன்'' என்று சொல்கிறாள். சம்மரின் போது கொஞ்சம் அதிகப்படியான குழந்தைகள் சேருகிறார்கள் என்றாலும், வருடம் முழுவதும் செஸ் வகுப்புகள் உண்டு. ஒரே வித்தியாசம், சம்மரில் தினமும் வகுப்பு. மற்ற நேரங்களில் வாரத்துக்கு மூன்று நாள்தான். 1998-ம் ஆண்டிலிருந்தே கிருஷ்ணா சதுரங்க சாம்ராஜ்யத்தில் இருக்கிறார்.

''செஸ் என்பது மூளைக்குப் பயிற்சி கொடுக்கும் சிறந்த ஆட்டம். இதை ஆடுபவர்களுக்குப் பொறுமை, சமயோசிதம், ஞாபகசக்தி... என்று நிறையப் பயன் உண்டு. கம்ப்யூட்டரில் கூட செஸ் கற்றுக்கொள்ளும் வசதி வந்து விட்டது. இருந்தும் அதை நாங்கள் ஊக்கப்படுத்தவில்லை'' என்கிறார் கிருஷ்ணா. செஸ் பயிற்சிகளுக்கு, அச்சடிக்கப்பட்ட மாதிரி ஆட்டங்கள் உண்டு. பயிற்சியில் குழந்தைகளுக்கு அதைக் கொடுத்து விடுகிறார்கள். சம்மரிலும் ஹோம்-வொர்க் (இது நியாயமா ஸார்?)

- ஸ்ரீநி

படங்கள்: ஸ்ரீஹரி



என்ன தருது சென்னைப் பள்ளி?





சம்மர் லீவிலேயே பத்தாவது மற்றும் ப்ளஸ்டு போகும் மாணவர்களுக்கு கோச்சிங் துவங்கி விடுகிறார்கள். முதல் மூன்று இடங்கள் வருபவர்களுக்குப் பரிசு, ஊக்கத் தொகை. இப்படி வருடம் ஒன்றுக்கு சுமார் இருபது லட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. சப்ஜெட்டுகளில் அதிக மார்க்குகள் பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகை, மருத்துவம், பொறியியல், பட்டப் படிப்பு படிக்க நிதியுதவி, அடிக்கடி மெடிக்கல் செக்-அப் என்று நன்றாகவே கவனித்துக் கொள்கிறது மாநகராட்சி. ஆனாலும் மாநகராட்சிப் பள்ளிகள் இரண்டாம்பட்சம் என்றே கருதுகிறார்கள் பெரும்பாலானோர்.

"இன்றையச் சூழலில் கான்வென்ட் கலாசாரம் நமது பெற்றோர்களைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டிருக்கிறது. மாநகராட்சிப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் கார்ப்பரேஷன் பள்ளிகளில் படிக்கிறார்கள் என்று சொல்வதற்கு வெட்கப்பட்டுத் தயங்குகிறார்கள். எனவேதான் பெயரில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருகிறோம். இனி 'சென்னைப் பள்ளி' எனப் பெயரைச் சொல்லக் கௌரவமாக இருக்கும்'' என்கிறார் மேயர் மா.சுப்பிரமணியம்.

வெறும் பெயர் மாற்றம் மட்டும்



"தனியார் பள்ளி மாணவர்களைவிட சென்னை ஸ்கூல் மாணவர்களை அதிக மதிப்பெண்கள் வாங்க வைக்க கடின உழைப்பு தேவை!"



தானா? தரமும் உயருமா?

"என்ன அப்படிக் கேட்டுட்டீங்க. துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் மேயராகப் பதவியேற்ற காலத்திலிருந்தே கல்விக்கு அதிக ஒதுக்கீடு; சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறோம். பத்தாம் வகுப்பு மற்றும் ப்ளஸ் டூவில் இப்போது எங்கள் தேர்ச்சி விகிதம் என்பது சதவிகிதத்தைத் தாண்டி விட்டது. கோடை விடுமுறையில் கூட ஸ்பெஷல் வகுப்புகள் நடத்த மாணவ மாணவிகளை முதலிலிருந்தே தயார் செய்கிறோம். மாநகராட்சியின் 282 பள்ளிகளில் சுமார் முப்பத்தியாறு லட்சம் பேர் படிக்கிறார்கள். சீருடை, புத்தகம், எல்லாம் இலவசம்தான்" என்கிறார் மேயர்.

"மாநகராட்சிக் கல்வித் துறையில் தர மேம்பாடு என்பது தொடரும் ஒரு முயற்சி. சில மாணவ, மாணவிகளின் சமூகப் பின்னணி மற்றும் குடும்பச் சூழல் காரணமாகவும், சம்மர் வகுப்புகளுக்கு அதிகளவில் வருவதில்லை. ஆனால், தனியார் பள்ளிகளில் சேரும் தரமான மாணவர் நல்ல மார்க் பெறுவதைவிட, எங்கள் மாணவ, மாணவிகளைத் தயார் செய்து அதிக மார்க் பெற வைப்பதற்குக் கடின உழைப்பு தேவை. அதைத்தான் சென்னை ஸ்கூல் ஆசிரியர்கள் செய்து வருகிறார்கள்" என்கிறார் மாநகராட்சிக் கல்வி அதிகாரி. மாணவ, மாணவிகளைத் தயார் செய்யும் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் வகுப்புக்கு நான்கு லட்சம் ஊக்கத்தொகையாக அளிக்கிறார்கள்.

- ப்ரியன்

படங்கள் : ஸ்ரீஹரி

"இருபது வருடங்களுக்கு முன் - நான் கல்யாணமாகி சென்னைக்கு வந்த புதுசு. அப்போது மேற்கு மாம்பலத்தில் ஒரு வயதான மாமி, கோடைக் காலத்தில் வத்தல், வடாம், ஊறுகாய், சர்பத் ஆகியவற்றைச் செய்வதற்குச் சொல்லித் தருவார். பயிற்சி இலவசம். ஆனால், இப்போது என் மருமகள் குக்கரி கிளாஸுக்குப் போகிறாள். ஒரு மாதத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் பிடுங்கி விடுகிறார்கள்'' என்கிறார் தி.நகரைச் சேர்ந்த ரங்கநாயகி. குக்கரி மட்டுமல்ல; ஜுவல்லரி, கைவினைப் பொருட்கள் தயாரிப்புகளுக்குப் பயிற்சி. கோலம் போடுவதே குறைந்து விட்ட இந்தக் காலத்தில் நூறு கோலங்கள் போடப் பயிற்சி தருகிறோம் என்றும் கிளம்பியிருக்கிறார்கள். எந்தப் பயிற்சிக்கும் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் அழவேண்டும்.





''எனக்குத் தெரிந்து 1970-களில் சாந்தோம் செயின்ட் பீட்ஸ் பள்ளியில் கோடைக்கால இலவச கிரிக்கெட் பயிற்சி முகாம் நடந்தது. அதன் பிறகு, பத்து வருடங்களுக்கு முன்பு வரை கூடப் பெரிய அளவில் இயக்கமாக, வர்த்தக ரீதியிலான கோடை வகுப்புகளாக நடந்ததில்லை. ஆனால், பத்தாயிரம் வருடத்துக்குப்(2000) பின்னர்தான் இந்தக் 'கோடை அலை' உருவானது'' என்றும் சொல்கிறார் மைலாப்பூர் சந்திரசேகரன்.



கூட்டுக் குடும்பங்கள் சிதைந்ததே, புற்றீசல் போல முளைத்திருக்கும் கோடை வகுப்புகளுக்கு ஒரு காரணம் என்கிறார்கள். ''முன்பெல்லாம் வீட்டில் தாத்தா, பாட்டி, அத்தை, மாமா என்று இருப்பார்கள். கோடை விடுமுறையில் 'ஆட்டம், பாட்டம்' என்று குழந்தைகள் அவர்களுடன் பொழுதைக் கழிப்பார்கள். இப்போது குடும்பத்தில் அவர்களும் இல்லை. அப்படியே விருந்தினர்கள் குழந்தைகளுடன் வந்தால், அவர்களை மகிழ்விக்க நம்மிடம்

கோடை வகுப்புகள் கொள்ளையா?



மனதும் இல்லை. முன்பெல்லாம் எல்லோரையும் அரவணைக்கும் விசாலமான மனம் இருந்தது. பணம் தான் அப்போது பிரச்னை'' இப்படிச் சொல்பவர் திருவல்லிக்கேணி சீனிவாசன்.

''போட்டி நிறைந்த இன்றையக் காலத்தில் 'கல்வி' ஒரு முக்கியமான காரணி. பள்ளி, கல்லூரி அட்மிஷன், நுழைவுத் தேர்வு, பயிற்சி வகுபபுகள் என்று கோடைக் காலத்திலும், பெற்றோர்களும், சிறுவர், சிறுமிகளும் பிஸியாக இருக்க வேண்டியதாக இருக்கிறது. எங்கும் நகர முடிவதில்லை. அதே சமயம், ஒரு நாளில் பெரும்பகுதி நேரம் ஃப்ரீயாக இருப்பதால், பலர் கோடை வகுப்புகளில் சேர்ந்து பொழுதைக் கழிக்கிறார்கள். இப்போது நடுத்தரக் குடும்பங்களுக்கு பணம் ஒரு பிரச்னையாக இல்லையே'' என்று சொல்கிறார் சந்திரசேகரன்.


கோடையில் குழந்தைகளின் லொள்ளு தாங்க முடியாமலும் வகுப்புகளில் சேர்த்து விடுகிறார்கள் தாய்மார்கள்.

''அரை நாளிலோ, ஒரு நாளிலோ, அல்லது பதினைந்து நாளிலோ குழந்தைகள் எதை முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியும்?'' என்று ப்ளே ஸ்கூல் நடத்தும் பாலுவிடம் கேட்டோம். ''இந்தப் பயிற்சிகளை ஓர் அறிமுகம் என்ற அளவில்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்குள்ள ஆர்வத்தின் அடிப்படையில் பெற்றோர்கள் மகன், மகள்களுக்கு விருப்பப்பட்ட பயிற்சியைத் தொடர்ந்து கொடுக்கலாம். அதேசமயம், எந்த வித வரைமுறையும் இல்லாமல் கட்டணம் வாங்குவதும் சரியல்ல'' என்கிறார் அவர்.


சென்னையை மட்டும் ஆக்கிரமித்து வந்த இந்த வகுப்புகள், இப்போது தமிழகத்தின் நகராட்சிப் பகுதிகளிலும் காளான்களாகப் பரவி வருகின்றன. பல நன்றாக சம்பாதிக்கின்றன; சில கொள்ளையடிக்கின்றன!

- ஸ்ரீநி

உலகம் முழுவதும் தனது சாம்ராஜ்ய எல்லைளை விரிக்கும் அமெரிக்கத் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்கள், ஸ்டூடியோக்கள், வாப்கள் எல்லாம் நிறைந்த ஹாலிவுட் பகுதி லாஸ் ஏஞ்சல் நகரின் வெளியே **மவுண்ட் லீ** என்ற சிறிய மலைப்பகுதியின் பின்புறமிருக்கிறது. பேசும் சினிமாக்கள் பிரபலமாகத் தொடங்கிய 1923-ல் இந்த மலைச் சரிவில் பிரமாண்டமான தனித் தனி எழுத்துகளாக Holy Wood Lands என்ற போர்டு நிறுவப் பட்டது. சில ஆண்டுகளில் Land வாசகம் நீக்கப்பட்டது. ஒவொரு எழுத்தும் 45 அடி உயரத்தில் ஒரு வார்த்தையாக 450 அடி நீளத்திற்கு நிற்கும் இது, லாஸ் ஏஞ்சல் நகரின் அடையாளங்களில் ஒன்றாகி, சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டியவைகளின் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறது. பயணிகளுக்கு இதை எங்கிருந்து நன்றாகப் பார்க்கலாம், எந்த இடத்திலிருந்து குடும்பத்தோடு படமெடுத்துக் கொண்டால் பின்னணியில் இது நன்றாகவரும், போன்ற விஷயங்களோடு, இது நிறுவப் பட்ட கதை, அடிக்கடி உடைந்த எழுத்துகளை மாற்ற உதவியவர்கள், இந்த எழுத்துகள் இடம்பெற்ற பயங்கர ஹாலிவுட் படங்கள், 'ஹெரச்' என்ற எழுத்திலிருந்து தற்கொலை செய்துகொண்ட ஒரு



'ஹாலிவுட்டை காப்பாற்றிய ஹீரோ !



நடிகை என இதன் நீண்ட சரித்திரத்தை ஒரு சின்ன சினிமாவாகவே காட்டுகிறார்கள்.

சுற்றுலா வருபவர்களிடையே வளர்ந்து வரும் ஆர்வத்தால், இப்போது இதைச் சீரமைத்து மின்சார வேலியிட்டுப் பாது காக்கிறார்கள். எழுத்துகள் இருக்கும் மலைப் பகுதி தனியாருக்குச் சொந்தமானது. இத் தனை ஆண்டுகளுக்குப் பின் அதை வாங்கிய ஒரு கட்டட நிறுவனம், அங்கே ஆடம்பர பங்களாக்களைக் கட்டப் போவதாக அறிவித் தது. இந்த எழுத்துக்களைப் பராமரித்து நிர்வகித்துவரும் அறக்கட்டளை அந்தப் பகுதியை மட்டும் வாங்க முயற்சித்தது. விலை 12.5 மில்லியன் டாலர்கள்; முழுப் பணமும் ஏப்ரல் 14 க்குள் செலுத்தவேண்டும் என்பது நிபந்தனை. செலுத்தவேண்டிய பணத்திற்காக அறக்கட்டளை விடுத்த நன் கொடை வேண்டுகோளை ஏற்று, அமெரிக்கா வின் ஐம்பது மாநிலங்களிலிருந்தும், பத்து நாடுகளிலிருந்தும் பணம் வந்தது. ஹாலிவுட் பிரபலங்கள் ஸ்டீவன் ஸ்பில்பெர்க், டாம் ஹாங்க்கஸ் போன்றவர்கள் உதவினார்கள். இந்த எழுத்துக்களைப்போல பிரம்மாண்ட வாசகங்களை அதே மலையில் நிறுவி, லாஸ் ஏஞ்சல் நகரில் நுழையும் கார்களில் எல்லாம் தொண்டர்களின் வசூல், விசேஷ விற்பனை ஸ்டால்கள் என்று எல்லா வகை யிலும் திரட்டியும் பணம் போதவில்லை. 1.5 மில்லியன் டாலர்கள் குவிந்தது. விற்கும் நிறுவனம் கெடுவை நீட்டிக்கத் தயாராக இல்லை. 87 வருடமாகப் புகழ்பெற்றிருந்த ஒரு அடையாளத்தை, லாஸ் ஏஞ்சல் நகர் இழக்கப்போகும் நிலை.

எதிர்பாராத ஆச்சரியமாக, கெடுவிற்கு இரண்டு நாள் முன்னதாக பிளேபாய் பத் திரிகை அதிபர் ஹூஃ ஹெஃப்னர் அந்தப் பணத்தைத் தருவதாக அறிவித்தார். 'ஹாலி வுட்' அழிக்கப்படாமல் காப்பாற்றப் பட்டு விட்ட மகிழ்ச்சியை, டுவிட்டர்களிலும், பிளாக்களிலும் எழுதித் தள்ளுகிறார்கள் அதன் விசிறிகள்.

தன் சொந்த நன்கொடையைத் தவிர, இதற்கான முயற்சி எடுத்து கடைசி நேரத்தில் காப்பாற்றியவர் முன்னாள் ஹாலிவுட் ஹீரோவும், இந்நாள் கவர்னருமான ஆர்னால்ட் ஸ்குவார்ஜ்நிக்கர்.

நிஜத்திலும் ஹீரோக்கள் கடைசி நேரத் தில்தான் வருவார்களோ?

- ரமணன்



கல்வெட்டுகள்

கொலைகாரக் கல்வி முறை!

நமது சின்னஞ் சிறு பள்ளிப் பிள்ளைகளிடையில் தற்கொலை 'ஸீஸன்' வழக்கம்போல் வந்து போய் விட்டது. (போய்விட்டது; அடியோடு தொலைந்து போய் விட்டது என்று நம்புவோமாக!) எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறவில்லை என்பதற்காகப் பூனாவில் ஒரு பையன் விஷம் தின்று இறந்தான்; பம்பாயில் ஒருவன் மச்சு மீதிருந்து விழுந்து இறந்தான். இறந்தவர்கள் எல்லாரும் பரீட்சையில் தேறாததைக் காரணமாகக் காட்டிக் கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்தார்கள். ஒருவன் பம்பாய் மந்திரிக்கு ''இரண்டு வருஷத்துக்கு மேல் எந்தப் பையனையும் 'பெயில்' ஆக்கவேண்டாம்'' என்று வேண்டுகோள் விடுத்துவிட்டு இறந்தான். இன்னொருவன்; ''நான் என் கடமையில் தவறிவிட்டேன். குடும்பத்துக்குப் பயன்படாமற் போய்விட்டேன். நீங்களாவது குடும்பத்துக்கு உங்கள் கடமையைச் செய்யுங்கள்! இல்லாவிட்டால், உங்களை ஆவி ரூபத்தில் வந்து சுற்றுவேன்!'' என்று எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனான்.

சின்னஞ்சிறு பிள்ளைகளின் இளம் உள்ளத்தில், இத்தகைய ஏக்கத்தை உண்டாக்கக் கூடிய கல்வி முறையை, 'நாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள்' என்று எண்ணச் செய்யும் கல்வி முறையை, 'கொலைகாரக் கல்விமுறை' என்று சொல்லுவதில் தவறு ஒன்றுமில்லை அல்லவா? இல்லாவிடில், இந்தப் பிள்ளைகள் தற்கொலை செய்து கொண்டதற்குப் பொறுப்பாளிகள் யார்?

மூன்று பேர் தற்கொலை செய்து கொண்டு இறந்தவர்கள் என்றால், முப்பதினாயிரம் பேர், அதற்குரிய மனோநிலையை அடைந்திருக்க வேண்டும். அவ்வளவு மனச் சோர்வையும் ஏக்கத்தையும் ''ஒன்றுக்கும் உதவாதவர்களாகிவிட்டோம்'' என்ற தாழ்வு மனப்பான்மையையும் அடைந்திருக்க வேண்டும். அந்த ஏக்கமும் மனச் சோர்வுந்தான் பிற்காலத்தில் மனக்கசப்பாக மாறுகின்றன.

கைத்திறமைகொண்டு உழைத்து ஒரு பொருளை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்த பிள்ளை எவனும், ''நான் ஒன்றுக்கும் உதவாமற்போய்விட்டேன்'' என்று எண்ண மாட்டான். மனச்சோர்வு அடைய மாட்டான். தற்கொலை மனப்பான்மை கொள்ள மாட்டான்.

(கல்கி - 14.6.1953)

அமரர் கல்கி ●



புத்தக விமர்சனம்

தீர்க்க தரிசனம்

அய்யா வைகுண்டசாமி அருளிய அகிலத்திரட்டு அம்மானை. பதிப்பாசிரியர்: அ.கா.பெருமாள். வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி. சாலை, நாகர்கோயில் - 629 001. விலை ரூ.350/-

முத்துக்குட்டி ஸ்வாமிகள் என்றும் குறிப்பிடப்படும் அய்யா வைகுண்டர் 1809 முதல் 1851 வரை வாழ்ந்தவர். வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவிய அருட்பிரகாச வள்ளலார் (1823-1874) இவரின் சமகாலத்தவர். பொதுவான வழிபாட்டு முறைகளை உடைத்து, புதிய வழிபாட்டு முறையை ஏற்படுத்தியவர்கள் என்ற விதத்தில் இருவருக்கும் ஒற்றுமையுண்டு.

'கோயில்களில் காணிக்கை வேண்டாம்; பலி வேண்டாம்; காவடி வேண்டாம்; தீபதூபம் வேண்டாம்; அடுக்கு தீபம் ஏற்றுதல், பொய் கொண்ட தேரோட்டம், வேண்டாம்' என்று அகிலத்திரட்டில் வலியுறுத்துகிறார் அய்யா வைகுண்டர். அதே சமயம், சிவன் விஷ்ணு இருவரையும் ஒன்றாகக் காணும் சமநோக்கமும் இதில் விசேஷமானது.

'அய்யாவழி' என்று சொல்லப்படும் வைகுண்டர் வழிபாட்டின் சிறப்பம்சமே, இந்த சமத்துவம்தான். விக்கிரகமோ, ஆடம்பரமோ, நேர்த்திக்கடன் உள்ளிட்ட விஷயங்களோ வேண்டாம் என்பது இவரது அழுத்தமான கருத்து. 'என் வழிபாட்டை பின்பற்றுபவர் பரஸ்வரம் அன்புக்குரியவர்' என்பதுதான் இவர் உணர்த்துகிற வழி! மதமாற்றத்தை இவர் ஏற்காமல் விமர்சிக்கவும் செய்திருக்கிறார்.

அப்படிச் செய்வதால், 'ஒருத்த
ருக்கு ஒருத்தர் உனக்கு எனக்கு
என்றேதான்
உறுதி அழிந்து ஒன்றிலும்
கை காணாமல்
குறுகி வழிமுட்டி குறை
நோவு கொண்டு உடைந்து
மறுகித் தவித்து மாள்வார்..'

என்கிறார் வைகுண்டர் இந்த நூலில்!

தம்முடைய சீடரான சகாதேவனுக்கு, அய்யா வைகுண்டர் அருளிச் செய்த செய்தித் தொகுப்பே, இப்போது ஏட்டிலிருந்து நூல் வடிவம் பெற்றுள்ளது. கடந்த யுகங்கள், எதிர்காலம் என்று எல்லாத் தளத்தையும் விவரிக்கிறது இந்நூல். முழுவதுமாகப் பாடல் வடிவில் இருக்கிறது. 1800களில் வாழ்ந்த இவர், "கோவில் பூசாரிகள் பொய்யர் ஆவர். காம ஆசையால் பழிபாவம் பெருகும். சேர்க்கையின்றி பெண்களுக்குப் பிள்ளை பிறக்கும்" என்று அன்றே தீர்க்க தரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். தெளிந்த அச்சில் வெளியிட்டுள்ள பதிப்பகத்தின் பணி பாராட்டுக்குரியது.

- ராகவன்



ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

29

மனம் ஆளும் மகராசி!

அடுத்து காணும் திருநாமங்கள் **கௌலினி, கேவலா** - கௌலாசார மார்க்கத்தில் வழிபடக்கூடியவர்களுக்குத் தலைவி **கௌலினி**. கேவல ஞானத்துக்கு அதிபதி **கேவலா**.

கைவல்யபததாயினி-மிகச் சுலபமாகக் கைவல்ய பதத்தைத் தரக்கூடியவள். கைவல்ய பதம் என்பது நான்கு நிலைகளைத் தாண்டி - அம்பாளுடைய ஸாயுஜ்ய பதத்தையும் தாண்டி - இருக்கக்கூடிய மோக்ஷ பதம்.

ஸ்தோத்திரப்ரியா- அவளைத் துதிப்பதால் ப்ரீதி அடைகிறாள்.

ஸ்துதிமதி - எப்போதும் இனிமையாக இருக்கக்கூடியவள். ஸ்துதிப்பதனால் ப்ரீதி அடையக்கூடியவள் என்றும் கொள்ளலாம்.

ஸ்ருதி ஸம்ஸ்துத வைபவா - ஸ்ருதிகள்- வேதங்கள் - நிறைவாக போற்றக்கூடிய பராக்கிரமம் படைத்தவள்.

மனஸ்வினி மனஸ் தத்துவத்தை ஆட்சி செய்யக்கூடியவள். இந்தத் திருநாமத்துடன், இதற்கு அடுத்து வருகின்ற **மானவதி** என்கிற திருநாமத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, மானம் என்றால் பெருந்தன்மை என்றும் ஓர் அர்த்தம் உண்டு. மனத்திலிருந்து எழும் பெருந்தன்மைக்கு மானம் என்று பெயர். மன்னிக்கும் தன்மைக்கும் மானம் என்று பெயர். **மானவதி** என்றால், ஆதரவு தரக்கூடியவள்; அரவணைக்கக்கூடியவள்; பெருந்தன்மையோடு நமக்குப் பிரசாதங்களை அருளக்கூடியவள். ஏதாவது தப்பு பண்ணினால், மன்னித்து நம்மை ஏற்கக் கூடியவள். ஆகவே **மனஸ்வினி**, **மானவதி**. நமது மனத்தின் நிலையமாகவும் அதன் பெருந்தன்மையாகவும் இருப்பவள்.

மஹேசி - மஹேசுவரருடைய தர்மபத்னி மஹேசி. எல்லாவற்றுக்கும் தலைவி.

மங்களாக்ருதி - எல்லாவற்றுக்கும் மங்களம் தருபவள்.

விச்வமாதா ஜகதாத்ரி - விச்வமாதாவாக, ஜகத்துக்கு உத்கிருஷ்டமான தலைவியாக இருப்பவள்.

விசாலாக்ஷி - விசாலமான கண்களை உடையவள். அப்படி இருந்தால்தானே எல்லா பக்தர்களையும் பார்க்க முடியும்!

விராகினீ - வைராக்கியம் நிறைந்தவள்.

பிரகல்பா - துணிவும் தைரியமும் நிறைந்தவர்களுக்கு பிரகல்பா என்று பெயர்.

பரமோதாரா - பரம உதாரா என்று பிரிக்க வேண்டும். அனைவருக்கும் முன்னோடியான உதார குணம் படைத்தவள்.

பராமோதா - நிறையப் புகழும் கீர்த்தியும் படைத்தவள்.

தத்துவமும் நடைமுறையும்

மனோமயி - மனஸ் ரூபத்தில் இருப்பவள். அதே சமயத்தில் மனோன்மணியாக திரிகோணத்தின் நடுவேயும் வாஸம் செய்கிறாள் என்று கணக்கு.

வாம மார்க்கத்தின்படி திரிகோணத்தின் நடுவே பைந்தவாஸனாவாக - பிந்து ஸ்வரூபமாக அம்பாள் இருக்கிறாள் என்று பார்த்தோமே, அந்த பிந்து ஸ்வரூபமாக இருக்கும் அம்பாளுக்கு மனோன்மணி

சுதா சேஷய்யன்


ஸ்ரீ துங்க பாலஸ்தனாம்பிகை
கஞ்சா நகரம்
(மயிலாடுதுறை)

என்று ஒரு பெயர் உண்டு. மனங்களைச் சரியான வழியில் நடத்தக்கூடிய அம்பாளுக்கு மனோன்மணி என்று பெயர். மனோன்மணி திருவெம்பாவையிலே முதல் பாசுரத்திலேயே வருகிறாள். அப்பாசுரத்தில் மனோன்மணி எழுப்பப்படுகிறாள். அவளை எழுப்பி விட்டால், வரிசையாகப் பிறரை அவள் எழுப்பிக் கொண்டே வருவாள். மனஸ் தத்துவத்துக்குத் தலைவி மனோன்மணி என்பதால், திருவெம்பாவையில் வரும் மனோன்மணி ஓர் உயர்ந்த குறியீடு.

சிருஷ்டி தத்துவம் 25 என்று பார்த்தோமல்லவா...? அஹம் - அஹத்துக்குப் பிறகு மனஸ் தத்துவம் வந்தது. அந்த மனஸ் தத்துவத்தைச் சரிப்படுத்தக்கூடியவள் மனோன்மணி - ஆகவே, **மனோமயி** என்ற அம்பாளின் திருநாமம் இந்த இரு விஷயங்களையும் குறிக்கும் - அதாவது திரிகோணத்தில் உறைபவள், மனஸ் தத்துவத்தின் அதிபதி.

மனஸ் தத்துவம்தான் மற்ற அனைத்துத் தத்துவங்களுக்கும் ஆதாரம். அதுவே முதலில் தோன்றியதும்கூட என்பதைப் பார்த்தோம். இந்த மனசை முதலில் சரி செய்துவிட்டால், மற்ற எல்லாவற்றையும் சரிசெய்துவிடலாம். அதனால்தான் அம்பிகை மனோன்மணியாக, மனோமயியாக மனஸ் தத்துவத்துக்கு அதிபதி ஸ்தானத்தில் இருக்கிறாள்.

நடைமுறை வாழ்க்கையிலேயும் மனசைக் கட்டுப்படுத்தி விட்டால், மற்ற எதை வேண்டுமானாலும் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட முடிகிறது என்று பார்க்கிறோம்.

ஆனால், மனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனால் வேறு எதையும் கட்டுப்படுத்த நம்மால் முடியாது!

மஹேசுவரருடைய தர்மபத்னி மஹேசி. எல்

யார் அசுரர்?

அரக்கர்களுக்கும் தேவர்களுக்கும் இடையே வித்தியாசம் அதுதான். ராக்ஷஸர்கள் நிறையத் தவம் செய்தவர்கள்; நிறையப் படித்தவர்கள். ராவணன் படித்த மாதிரி வேறு யாரும் படிக்கவில்லை. அம்பிகையை ஸாம கானப்ரியா என்கிறோம். ராவணன் ஸாம கானம் பண்ணினானானால், கையிலயங்கிரியே உருகிப் போகும். அது மட்டுமல்ல, நிறையத் தவம், கடுமையான தவம் பண்ணியவன். சாப்பாட்டைக் கட்டுப்படுத்தி, தூக்கத்தைக் கட்டுப்படுத்தி எவ்வளவோ பண்ணவேண்டும், தவம் செய்வதானால். இதையெல்லாம் ராவணன் பண்ணினான். வேறு பல அசுரர்களும் பண்ணினார்கள். ஆனால், எதனால் அசுரர்கள் அசுரர்களாகவும், தேவர்கள் தேவர்களாகவும் இருந்தார்கள், என்றால்... ஒரே ஒரு வித்தியாசம்தான் இருவருக்குமிடையே:

தூக்கத்தைக் கட்டுப்படுத்தி, பசியைக் கட்டுப்படுத்தி, உடலைக் கட்டுப்படுத்த முடிந்த தேவர்களால், ஒற்றைக்காலில் நிற்க முடிந்தாலும், நிறையப் படிக்க முடிந்தாலும் மனசைக் கட்டுப்படுத்த முடியவில்லை! மனசைக் கட்டுப்படுத்த முடியாதபோது அவர்கள் அசுரர்கள். யார் மனத்தைக் கட்டுப்படுத்துகிறார்களோ, சரியாக வைத்திருக்கிறார்களோ அவர்கள் தேவர்கள்.

வ்யோமகேசீ - வானத்துக்குத் தலைவியாக இருக்கக்கூடியவள்.

விமானஸ்தா - ஆகாயத்தில் விமானம் போல் சஞ்சரிக்கக்கூடியவள் என்றும் எடுத்துக் கொள்ளலாம். அல்லது வி+மானஸ்தா என்று பிரித்து, நிறைய ஆதரவு தரக்கூடியவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

மானம் என்றால் ஆதரவு.

வியோமகேசியாக இருந்து கொண்டு, வானத்தில் சஞ்சரித்தபடி இந்த ஜகத்துக்கு ஆதரவு தரக்கூடியவள். அண்டத்தில், ஸ்ரீநகரம் என்ற ஸ்தானத்தில் ஸ்ரீமன்நகர நாயிகாவாக அம்பாள் வீற்றிருக்கிறாள் என்று பார்த்தோம். ஸ்ரீநகரம் என்பது எங்கெல்லாம் இருக்கிறது என்று பார்த்தால், பதினாறு ஸ்ரீபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்டன என்பது ஒரு கணக்கு. ஸ்ரீபுரம் என்பது மேரு மலையின் உச்சியில் இருக்கிறது என்பது மற்றொரு கணக்கு. தகராகாசத்தில் இருக்கிறது ஸ்ரீபுரம் என்றும் ஒரு கணக்கு.

கௌல மார்க்கத்தின் ரீதியாக, அண்ட பகிரண்டங்களுக்கு மேலே இருக்கிற இடம்தான் ஸ்ரீபுரம். அந்த ஸ்ரீபுர வாஸினி எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு ஆதரவு அளித்து வருகிறாள் **விமானஸ்தாவாக.** அண்டத்தில் ஆகாசமாக இருக்கக்கூடியவள்.

...ற்றுக்கும் தலைவி.

வஜ்ரிணீ - உறுதியோடு இருப்பவள்.

சிருஷ்டிகர்த்தாக்களின் தலைவி

வாமகேசுவரீ - அம்பாள் உபாஸனையில் வாமகேசுவரம் என்று ஓர் உபாஸனை முறை உண்டு. அந்த உபாஸனை விதியின் மூலம் அடையப்படக்கூடியவள் வாமகேசுவரீ. வாம மார்க்கத்துக்குத் தலைவி என்பதனாலும் வாமகேசுவரி.

பிரஜாபதிகளுக்கு வாமகேசர்கள் என்று ஒரு பெயர் உண்டு. அதனால் பிரஜாபதிகளுக்கெல்லாம் தலைவியாக இருக்கக் கூடியவள். பிரஜாபதிகளின் மூலம்தான் ஜகத் சிருஷ்டி நடக்க வேண்டும் என்பதால், அவர்களுக்கும் தலைவியாக இருந்து அவர்களுடைய காரியங்களை நிகழ்த்துபவள் **வாமகேசுவரீ.**

ஐந்தின் மகிமை

பஞ்சயக்ஞப்ரியா மனிதர்கள் எல்லோரும் ஐந்து யக்ஞங்கள் செய்ய வேண்டும் என்று கணக்கு. அவற்றால் ப்ரீதி அடையக்கூடியவள் - தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், மனித யக்ஞம், பூதயக்ஞம், பிரம்ம யக்ஞம் - இவை ஐந்தையும் செய்யும்போது அந்த



பஞ்ச யக்ஞங்களினால் ப்ரீதி அடையக் கூடியவள் ஸ்ரீ லலிதாம்பிகை.

பஞ்சப்ரேத மஞ்சாதிசாயினி பஞ்சபிரேதஸ்ஸில் அமர்ந்து கொண்டிருப்பவள். பஞ்சபிரம்மத்தில் அம்பிகை அமர்ந்திருக்கிறாள் என்பது கணக்கு. அந்த பஞ்ச பிரம்மம் சக்தி இல்லாமல் இருக்கும்போது பஞ்சபிரேதஸ்ஸாக மாறுகிறது. அதன் மீது அமர்ந்திருக்கக்கூடியவள். அதற்கு உயிர்ப்பும் தரக்கூடியவள்.

(வளரும்)

● கு.ராமசாமி, ஈரோடு

பரதன் அயோத்திக்குத்தான் மன்னனாக முடி சூட்டப்பட்டான். அயோத்தியில் கடல் கிடையாது. இந்நிலையில் 'ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள' எனக் கம்பர் கூறியது ஏற்புடையதுதானா?

அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு, 'ஆழி சூழ் பரத கண்டத்தைத்



க்ரேஸியைக் கேளுங்கள்!

மனம் ஒரு குரங்கா?

தன்மகன் பரதன் ஆள வேண்டும்' என்ற கைகேயியின் விருப்பத்தைக் கம்பர் கூறியுள்ளார்.

மேலும் 'ஆழி' என்றால் சக்கரம்.ரத சக்கரம் செல்லுமிடமெல்லாம் பரதன் சக்கரவர்த்தியாக வேண்டுமென்பதைக் கம்பர் சொல்லாமல் சொல்கிறார்.

இன்னும் ஒருபடி மேலே போனால், மகாவிஷ்ணு ராமராக வந்தது போல, அவருடைய 'சக்கரத்தாழ்வார்தான்' பரதனாக அவதரித்தார் என்ற விவரத்தையும் மறைபொருளாக வைத்திருக்கிறார் கம்பர். கம்பன் ஏமாற்றான்!

● பா.அசோக், திருவில்லிப்புத்தூர்

க்ரேஸியைக் கவர்ந்த 'சாமியார்' யார்?

பாக்கியம் ராம 'சாமியார்'. சிரித்திடு சிலேம் சொல்லி இவர் வீட்டு ''கதவைத் திற.காமெடி வரும்!''

● ரேவதிப்ரியன், ஈரோடு

காதலில் தோற்றால் 'தாடி வளர்ப்பது' என்பது எந்த நூற்றாண்டில் தோன்றியிருக்கும்?

BEARD தோன்றி BLADE தோன்றா காலத்தில், ரோமியோக்கள் எல்லா முகத்தில் 'ரோம'யோக்களாக இருந்திருப்பார்கள்!

● சரோஜா, சென்னை

'பெருசுகளை' ஜாம்பவான் என்று சொல்வது ஏன்?

தன் பலம் தெரியாது தம்மாத்தூண்டா இருந்த அனுமனை, உற்சாகப்படுத்தி விஸ்வரூப 'பெருசாக்கிய' ஜாம்பவான் பெருசுதானே.ஜாம்பவானால் பெருசாகி கடல் தாண்டிய அனுமான் JUMPபவான் ஆனார்!

● ஜி.மகாலிங்கம், திருச்சி

பெண்ணுக்கும், penக்கும் அழகு சேர்ப்பது எது?

இரண்டும் மூடி இருந்தால் அழகு!

● எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

'இடுக்கண் வருங்கால் நகுக' சொன்ன வள்ளுவருக்கு வாழ்க்கையில் துன்பமே வந்திருக்காதா?

துன்பத்துக்குக் காரணம் பகை.பகை வருவது கோபத்தால்.கோபத்தால் இழப்பது நகையும், உவகையும். 'நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - பகையும் உளவோ பிற' என்று குறளெழுப்பிய

வள்ளுவருக்கு துன்பம் எப்படி வரும். வள்ளுவன்னென்று குரலெழுப்புபவருக்குத்தான் துன்பம்!

● ம.காளிதாஸ், சிதம்பரம்

மனைவிக்குப் பயப்படும் கணவன்மார்களின் பயத்தை எப்படித் தெளிய வைப்பது?

தூங்குவது போல நடிப்பவர்களை எழுப்புவது கஷ்டம்!

● த.ஞானசெல்வன், தாராவி

மனம் ஒரு குரங்கு என்கிறார்களே. அப்படியென்றால் மூளை?

குரங்கு கையில் பூ-மூளை!

● அ.ராஜா ரஹ்மான், கம்பம்

திருவாசகம், திருமந்திரம் எது பிடிக்கும்?

ஈசான்ய இதயத்திற்கு வாசகம். ஈசான்ய மூளைக்கு மந்திரம். 'அன்பே சிவம்' திருவாசகம். 'அறிவே சிவம்' திருமந்திரம்!

● மகாலிங்கம், காவல்காரப் பாளையம்

பஞ்சமா பாதகங்கள் எவை?

அதெல்லாம், கொஞ்சமா பாதகங்கள் இருந்த அந்தக் காலம். இப்போது பஞ்சமா பாதகத்துக்கு?!

● ஆர்.அஜிதா, பெரிய பள்ளிவாசல்

கடவுள் மனிதனைக் காண எப்போது ஆசைப் படுகிறான்?

மனிதன் அறவே ஆசைப் படாத போது!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

''அட்வைஸ்'' விரும்பும் பேர்வழிகள் உண்டா?

இப்போதெல்லாம் 'அட்வர்டைஸ்' விரும்பும் 'பேர்'ஆசை வழிகள்தான் அதிகம்!



காவு வாங்கும் தடுப்பூசிகள்!

கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி போட்டதில், ஆந்திர மாநிலம் கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்த 10-14 வயதுக் குட்பட்ட நான்கு சிறுமிகள் இறந்து போயிருக்கிறார்கள். நூற்று இருபது பேர் பின்விளைவுகளால் பாதிக்கப்பட்டுள் ளனர். இதில் கொடுமை என்னவென் றால், இந்தத் தடுப்பூசிகள் பரிசோதனை அளவில் போடப்பட்டுள்ளன. ஆனால், தாங்கள் பரிசோதனைக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் விவரமே சிறுமிகளுக்குத் தெரியாது. அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ நிறுவனம் ஒன்று தொண்டு நிறுவனம் மூலமாக மாநில, மற்றும்



கவனிக்குமா கவர்ன்மெண்ட்?

மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, இந்தச் சோதனையைச் செயல் விளக்கத் திட்டமாக மேற்கொண்டது என்ற பகீர் தகவலும் வெளியாகியிருக்கிறது. இந்த நிலையில், ''மருந்துகளை சோதித்துப் பார்க்க இந்தியர்கள் என்ன கினியா பன்றிகளா?'' என்று மார்க்ஸிஸ்ட் கம் யூனிஸ்ட் உறுப்பினர்கள் கொந்தளித்து பிரச்னையை மாநிலங்களவையில் கிளப்ப, ''மரணங்களுக்கு அந்தத் தடுப் பூசி, காரணமல்ல'' என்று மறுத்திருக் கிறார் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம்நபி ஆசாத். இந்தத் தடுப்பூசிகள் பிரச்னை பற்றி இரண்டு அரசியல்வாதி, டாக்டர்களிடம் கேட்டோம்.

டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் (பா.ஜ.க. தமிழகத் துணைத் தலைவர்)

எந்த நோய்க்கும் ஒரு தடுப்பூசி என் பதை மருத்துவ உலகம் உட்பட எல்லோ ருமே வரவேற்பார்கள். ஆனால், கருப்பை வாய் புற்றுநோய்க்கான தடுப்பூசிகள் பொறுத்தமட்டில், இது முழுமையாய் நோயைத் தடுக்கும் என்பது இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை. உதாரணமாக, இந்தப் புற்றுநோய் சாதாரணமாக 35-45 வயதுக்குட்பட்ட பெண்களைத் தாக்கு கிறது.

ஆனால், அவ்வாறு தாக்காமல் இருக்
றதா என்பதைச் சோதிக்க, இந்தத் தடுப்
சியை 10-15 வயதுக்குட்பட்ட சிறுமி
ளுக்குப் போட்டுத்தான் சோதனை செய்ய
வண்டும். திருமணமான பெண்கள்
போட்டுக் கொள்வதில் எந்தப் பயனு
ல்லை. காரணம், அவர்கள் ஏற்கெனவே
ல்வாழ்வில் பாலியல் உறவு மூலம்
ச்.பி.வி. கிருமிகளை ஏற்கெனவே
பற்றிருக்க வாய்ப்பு உண்டு. இந்த
ச்.பி.வி. எனப்படும் ஹியூமன் பாபி
லோமா வைரஸ், கருப்பை வாய் திசுக்
ளில் போய்த் தங்குகிறது. அது புற்றாக
றுவதற்கு 15-20 வருடங்கள் கூட
கும். இன்று அந்நோய்க்கான தடுப்பூசி
லம் 'பாதுகாப்பு' அளிக்கப்படும் சிறுமி
ள் வளர்ந்து, மணமாகி, நாற்பத்தைந்து
ஐம்பது வயதை எட்டும் வரை தடுப்பூசி
ன் ஆற்றலுக்கு நிரூபணம் கிட்டாது.

அடுத்து, நமது நாட்டில் சிறுமிகள்
றுபது சதவிகிதம் ஊட்டச்சத்துக் குறை
ாணவர்களே. தடுப்பூசி மருந்தின் வீரி
த்தை ஊட்டச்சத்து குறைந்த சிறுமி
ளால் ஏற்க முடியாது கூடப் போகலாம்.




✱ தமிழிசை



✱ ராமன்

கருப்பை வாய் புற்று நோயிலிருந்து காக்க தடுப்பூசியைக் காட்டிலும் சிறந்த முறை பாப்ஸ்மியர் பரிசோதனை. 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வருடம் ஒருமுறை மிக எளிய இச் சோதனையைச் செய்து கொள்வது நல்லது. நோய் தாக்கியிருந்தால் உடனே தெரியும். தவிர, துவக்க நிலையில் உடனே குணமாக்கலாம். இந்தக் குறிப்பிட்ட நோய்க்கு, தடுப்பூசிகளை விட விழிப்புணர்வே மிகச் சிறந்தது.



டாக்டர் இ.எஸ்.எஸ். ராமன் (காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்)

நமது நாட்டுச் சிறுமிகளைப் பரிசோதனைக் களமாகப் பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது. தடுப்பூசிகள் எந்த அளவுக்குப் பயனளிக்கின்றன என்பது நிரூபிக்கப்படவில்லை. புற்றுநோய்க்குக் காரணம் பாப்பிலோமா வைரஸ்தான் என்பது உறுதியாக்கப்படவில்லை. இந்த நிலையை idiopathic என்பார்கள். அதாவது, இன்ன காரணத்தினால் உண்டாயிற்று என உறுதிப்படுத்த முடியாத நோய். எனவே, இந்த நோய்க்குத் தடுப்பூசி தயாரிப்பு எந்த அளவுக்குச் சரி என்பது விவாதத்துக்குரியது.

மேல்நாட்டு மருத்துவ நிறுவனங்கள் நமது நாட்டைப் பரிசோதனைக் களமாகத் தேர்ந்தெடுத்த காரணம், நமது நாடு மிகப் பெரிய வியாபாரச் சந்தையாக இருப்பதுதான். தவிர, வறுமையும் அவர்களுக்கு வசதியாகப் போய்விடுகிறது. மத்திய, மாநில அரசுகள் கருப்பை வாய் புற்று நோய் குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்வதுதான் உடனடி அவசரமும்; அவசியமுமாகும்.

- ஸ்ரீநி

''**ஏ**ன் இதைச் செய்தீர்கள்? பணத்துக்காகவா?'' என்ற விசாரணை அதிகாரியின் கேள்விக்கு அந்தப் பெண் அளித்த பதிலில், அதிகாரி ஆடிப்போனார். ''பணமும் கிடைத்தது. ஆனால், செய்தது என்னை மதிக்காத மேலதிகாரிகளின் திறமையின்மையை உலகுக்குக் காட்டத்தான்.''

''கடுமையான தண்டனைக்குள்ளாகும் தேசத்துரோகக் குற்றம் எனத் தெரிந்தே



✱ மாதுரி குப்தா

எப்படி உங்களால் செய்ய முடிந்தது? உங்கள் குடும்பத்தினரே மதிக்கமாட்டார்களே?''

''என்னிடம் எல்லா வேலைகளையும் வாங்கிக்கொண்டு, என்னைப் புழுவாக நடத்திய அதிகாரிகளுக்கும், அவர்களை அளவுக்கு மீறிக் கௌரவிக்கும் அரசுக்கும் பாடம் கற்பிப்பதுதான் என் நோக்கம்.''

இம்மாதிரி விசாரணைகளில் குற்றம் சாட்டப்பட்டவர் அனைத்தையும் மறுப்பதோ, அல்லது விசாரணைக்கு ஒத்துழைக்காமல் இருப்பதோதான் வழக்கம். மாறாக, இங்கு தைரியமாக, தம் செய்கையைப் பதிவுசெய்திருக்கிறார் இந்த ஐம்பத்து நான்கு வயதுப் பெண்மணி.

கிடைத்த செய்திகளை, தமது வீட
லிருந்து கம்ப்யூட்டரின் மூலம் பாகி
தான் அதிகாரிகளுக்குக் கொடுத்த
ஒப்புக்கொள்ளும் இவர், இஸ்லாமாப
தில் இந்தியத் தூதரகத்தில் மக்
தொடர்பு அதிகாரியாக இருந்தவர். சந்
கித்தது இந்திய அரசு. பிடிப்பதற்கு மு
விஷயம் தெரிந்தால், பாகிஸ்தான் அ
இவரைக் காப்பாற்றிவிடும் என்
தால், பூடானில் நடக்கவிருக்கு
சார்க் மாநாட்டுப் பணி என்
அழைத்து தில்லி வந்தவுடன் கை
செய்துவிட்டார்கள்.

உருதுமொழியில் நல்ல புலமை

இவர் இப்படி...

மிக வேகமாக மொழிமாற்றும் திற
தமது தொடர்ந்த நீண்ட நாள் சர்வீஸினா
ஐ.எஃப்.எஸ். அதிகாரியின் அந்தஸ்துக்
உயர்ந்து, தூதரகத்தில் இரண்டாம் நிலை
செயலர் பதவியிலிருக்கும் அந்தப் பெ
மணி: **மாதுரி குப்தா**.

● ● ● ● ●

சமீபத்தில் செய்தியில் அடிபட்ட இரண்டு அரசுப் பண



ஏ.கே.கங்குலி

இவர் அப்படி..!

தில்லியில் உயர்ந்த பதவியிலிருக்கும் அவர், தமது இருதய நோய்க்காகச் சிகிச்சை பெற, வேலூரிலுள்ள அந்தப் புகழ்பெற்ற ஆஸ்பத்திரிக்குக் கடந்த இரண்டு வருடங்களாகச் சில மாதங்களுக்கு ஒருமுறை வந்து போகிறார். ஆஸ்பத்திரிக்கு அருகிலிருக்கும் மிகச் சாதாரண லாட்ஜ் ஒன்றில் தங்கி (நாள் வாடகை ரூபாய் 125) நடந்தே சென்று ஆஸ்பத்திரியில் சிகிச்சை முடித்தபின், மாலையில் திரும்பும்போது, அருகிலுள்ள சிறிய ஓட்டலில் எளிய உணவைச் சாப்பிட்டுவிட்டு அறையில் ஓய்வெடுப்பார். பக்கத்து அறைக்காரர்களுடன் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருப்பார். தமிழகத்தில் அதிகம் அறிமுகமில்லாத முகமாதலால், அவர் யார் என்று யாருக்கும் தெரியாது.

இந்த மாதம் வந்திருந்த போது, அவரைத் தேடி வந்த மாவட்ட போலீஸ் அதிகாரி, உயர்தர ஹோட்டலும், இதர வசதிகளும் ஏற்பாடு செய்திருப்பது குறித்துச் சொல்லி அழைத்திருக்கிறார். 'வந்திருப்பது என் சொந்த விஷயம். அரசுக்குச் செலவு வைக்க விரும்பவில்லை. இந்த அறையே போதும்' என்று சொல்லிவிட்டார் அவர்! விஷயத்தை மோப்பம் பிடித்து வந்து விட்ட பத்திரிகைக்காரர்களையும் சந்திக்க மறுத்து விட்டார்.

"வந்திருப்பது என் சொந்த விஷயம். அரசுக்குச் செலவு வைக்க விரும்பவில்லை இந்த அறையே போதும்"

இந்தியாவின் எந்த ஐந்து நட்சத்திர ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்றுக்கொள்ளும் சலுகையும், சொந்த விஷயமாகப் பயணம் செய்தாலும், போகு மிடங்களில் அரசாங்கக் கார் பயன்படுத்தும் உரிமையும் படைத்த பதவியிலிருப்பவர் அந்த மனிதர்.

சில நாட்கள் சென்னை தலைமை நீதிபதியாக இருந்து, உச்சநீதிமன்ற நீதிபதியாக உயர்ந்த அந்த மாபெரும் மனிதர் **ஏ.கே.கங்குலி.**

- ரமணன்

முக்கியஸ்தர்கள் சிந்திக்கவைக்கிறார்கள் நம்மை...

வட்ட மேஜை

'**பி**ளாஸ்டிக்குக்குத் தடா' என்ற செய்தியைப் படித்தவுடன், இப்படி ஒரு கலெக்டர் மாவட்டத்துக்கு ஒருவர் வர வேண்டும் என்று ஆவல் மனத்தில் தோன்றியது.

- வி.சி.வெங்கடேஷ், திருச்சி

'**அ**ஞ்சாநெஞ்சனின் கார்ட்டூன்' அட்டகாசம்! யாருக்கும் வெட்கமில்லை என்றாகிவிட்ட பிறகு, அழகிரி பாராளுமன்றத்தை உருட்டி விளையாடுவதைக் கேள்வி கேட்க யார் இருக்கிறார்கள்?

-ஆர்.பிரகாஷ், பொன்மலை

'**இ**னி நித்தியானந்தா தப்ப முடியாது' என லெனின் கருப்பன் கூறுவது நல்ல உண்மைதான்.

- என்.காளிதாஸ், சிதம்பரம்

கிரிக்கெட்டின் கௌரவத்தையும், நம் வீரர்களின் சிறப்பையும் மிகச் சிறப்பாகச் சொல்லியிருந்த விதம் அருமை.

- ஆர்.நாகராஜன், பல்லாவர

பகவானுக்குப் பிடித்த ஏ.ச டிரிங்க்கை செய்து அருந்தினோம். கம்ப சொல்லக்கூடாது. உடலோடு மனமு குளிர்ந்தது. பானகத்தின் சுவைக்கு வான மும் ஈடாகாது!

- சி.விஜயா, கிருஷ்ணகி

வேதா வரைந்த கொம்மடி கோட்டை ஸ்ரீவாலாம்பிகை அம்ம திருவுருவப் படம் வெகு அற்புதம்.

-ஏ.பி.எஸ்.ரவீந்திரன், வள்ளியூ

சமகாலச் சிந்தனை இழையோடு 'வெயில் புராணம்' தலைப்பிலான கவிை வரிகள் வெகுநயம்! மீண்டும், மீண்டு வாசிக்கத் தூண்டியது.

-எஸ்.எம்.பாலசுப்ரமணியன், தேவ



மாறுவாரா பாலா?

மெலட்டூர் பாகவதமேளாவுக்கே நேரில் சென்று அனைத்து நாடகங்களை யும் கண்டுகளித்த மகிழ்ச்சி ஏற்பட்டது கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நமது பண் பாடுகளையும், கலாசாரத்தையும் பிரதி பலிப்பவைகளே!

கல்கி இணைய இதழில் சிறந்த கடிதம் எழுதி கிழக்கு பதிப்பகத்தின் ரூ.250/- மதிப்புள்ள நூல்களைப் பரிசாகப் பெறுபவர்

மணவை செந்தில், அறந்தாங்கி

கலைப் பயணம் மேற்கொள்ள ங்கே? எப்படி? எப்பொழுது? என்ன? ன்பவை பற்றிய முழு விவரங்களும் ன்அஞ்சல் விலாசமும் கொடுத்துள்ளது லா ரசிகர்களுக்கு மிகவும் பயனுள்ள கவல்.

- வை.கோபாலகிருஷ்ணன், திருச்சி

'பறவை முனியம்மாவை தோழியா ' பெற்ற பரந்த மனசுக்குச் சொந்தக்காரர் வேக்... சிரிப்பை அடக்க முடியலப்பா!

-ஜி.தாரணி, மதுரை

'பொய்யும் பயமும்' கூட்டணி வைப்பதால் விளையும் அபாயத்தை, பரியவர் தம் அருள்வாக்கால் அறி றுத்தியிருந்தது அற்புதம்!

-ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

வழக்கறிஞர்களின் விஷயத்தில் முதல் ரையே சிந்திக்க வைத்துச் செயலாற்ற வைத்த மிக அருமையான தலையங்கம்.

- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

நண்பர் ஜெ.பிஸ்மி சொன்ன ப்ளஸ், மைனஸ்களை, கண்டிப்பாகப் புரிந்து, ற்றே மாற்றங்களைக் கொண்டால் ாலாவின் கிராஃப் ஏறக்கூடும்! மாறு பாரா..?

-ஆர்.ஸ்ரீதேவி, திருவிடைமருதூர்

பரிசுக்கடிதம்

கிழக்கு பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்:

ஆண்டவனுக்கு அடுத்தபடியாக, மக்கள் அதிகம் நம்பிக்கை வைத்திருப்பது வக்கீல்களிடம்தாம். ஆனால், 'சமீபகாலமாகச் சில கறுப்பு ஆடுகள் கலவரச் சூழலை உருவாக்குவது உண்மைதான்' என்று சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவரே 'ஒப்புதல் வாக்குமூலம்' அளித்த பிறகு, வக்கீல்கள் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை 'வாய்தா' வாங்கத் தொடங்கி விட்டது. அந்தக் கறுப்பு ஆடுகளை இனம்கண்டு, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் வரையில், நீதிதேவதைக்கு நிம்மதியே இருக்காது என்பதுதான் ஒட்டு மொத்த பொதுமக்களின் 'ஜட்ஜ் மெண்ட் ஆர்டர்!' - வே.ந.கதிர்வேல், வேலூர்-6

'ஜூலியட்டின் அழகை ரசிக்க ரோமியோவின் கண்கள் வேண்டும்' என்பார்கள். அதைப் போல அழகான காட்சிகள் மேலும் அழகாகத் தெரிய வேண்டுமானால், ஒளிப்பதிவாளர் பார்வை வேண்டுமோ என நினைக்க வைத்து விட்டார் செழியன்.


- உமா மோகன்தாஸ், திண்டுக்கல்

அக்ஷய திருதியைக்குக் கூட்டுப் பிரார்த்தனை!



இன்றைய நாட்டு நிலவரம் மற்றும் விக்ருதி வருஷத்துக்கான கிரஹ நிலைகள் இவற்றை மனத்தில் கொண்டு, இயற்கைச் சீற்றம் மற்றும் தீவிரவாதம் ஆகியவற்றால் அதிக உயிர்ச் சேதங்கள் ஏற்படாமலிருக்கவும், மக்கள் மன அமைதியுடன் வாழவும் கூட்டுப் பிரார்த்தனை ஒன்றே உய்யும் வழி என்று கூறுகிறார் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமிகள். வரும் அக்ஷய திருதியை அன்று (16.5.2010, ஞாயிறு) விஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணத்தை பலர் சேர்ந்து கூட்டாகச் செய்யும்படி அறிவுறுத்தியுள்ளார். அதன்படி உலக அளவிய முயற்சியாக அன்றைய தினம் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் ஏற்பாடாகியுள்ளது. உலக நன்மையை விரும்புவோர் ஒன்று சேர்ந்து விஷ்ணு சஹஸ்ரநாமம் ஓதலாம்.

- கல்யாணபுரம் ஆர்.ஆராவமுதன்




காவியா



ஜெய்கிருஷ்ணா



ஜெயதீர்த்தன்



ரதீஷ்



ரோஷினி

தூரிகையில் நனையும் மனசு!

லர் மற்றும் பாறையின் குணங்களினால் ஆனது மனித மனசு. டுமானவரை மலர்களின் மென்மையால் மனசை சுகந்தமாக்க தன் முன்வர வேண்டும். அதற்குப் பல வழிகள் இருந்தாலும், ஓவியம் னதை மென்மையின் அருகே கொண்டு போகும்" என்கிறார் ானந்தம். இவர் கோவையின் பிரபல ஓவியர். சித்ரகலா அகாடமியின் லைவர்.

"நாற்பது சதவிகிதக் குழந்தைகள் மட்டுமே ஆர்வத்தினால் ஓவியம் றுக் கொள்ள வருகிறார்கள். மீதமுள்ளோர் பெற்றோரின் புறுத்தலால் வருபவர்கள். ஆர்வத்தோடு வருபவர்கள், படிப்பிலும் ச்சத்தக்க அளவில் இருக்கிறார்கள். ஓவியம் இவர்களது மனத்தை டுமல்லாது செயல்பாடுகளையும் அழகாக்குகிறது. ஓவியம் வரையக் றுக் கொடுப்பதற்கு முன்பாக, மனத்தை ஒருமுகப்படுத்தும் யோகா, னம் போன்றவற்றையும் பயிற்றுவிக்கிறோம்" என்கிறார் ானந்தம். இவர் கடந்த 14 வருடங்களாக கோவையில் ஓவியத்துக்கான மர் கேம்ப் நடத்தி வருகிறார்.

– கமலி



ஜீவானந்தம்



ஆயிரம் பிறைகள் ஆனந்த அலைகள்!

அமரர் கல்கியின் சகோதரி மகனும் கல்கி நிறுவன நிதி ஆலோசகருமான
திரு வி.கோபாலன் - திருமதி ஞானாம்பாள் கோபாலன்
தம்பதியின் **சதாபிஷேக வைபவம்**
இறையருளாலும் முன்னோர்கள் ஆசியினாலும் **ஏப்ரல் 27, 2010** அன்று சென்னை, அடையாறு, **அனந்தபத்மநாபஸ்வாமி** கோயிலைச் சார்ந்த **காஞ்சி மஹாஸ்வாமி** மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுற்றத்தாரும் நண்பர்களும் பிரமுகர்களும் பெருந்திரளாக வந்திருந்து வாழ்த்தி, ஆசி பெற்று மகிழ்ந்தனர்.

அரசு இணையதளங்கள் பலவும் இன்னும் தாம் (tam) அல்லது தாப் (tab) எழுத்துருக்களையே (fonts)கொண்டிருக்கின்றன. தாம் (tam) அல்லது தாப் (tab) எழுத்துருக்கள் பத்தாண்டுகளுக்கு முந்தைய கதை. இன்று தமிழ் இணைய உலகம் முழுவதும் யுனிகோட் (unicode) எழுத்துருவுக்கு மாறிவிட்டது. எல்லா வகை கணினிகளும் யுனிகோட் எழுத்துருக்களைத் தெளிவாகக் காட்டுகின்றன. மின்னஞ்சல் கள் அனுப்புவது தொடங்கி அனைத்துப் பயன்பாடுகளுக்கும் யுனிகோட் எழுத்துருக் கள் புழக்கத்துக்கு வந்துவிட்டன. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டோடு இணைந்து நடைபெறும் இணைய மாநாட்டில், யுனிகோட் எழுத்துருக்களைத் தரப்படுத்தி, அனைவர் பயன்பாட்டுக் குமே (அரசு பயன்பாடு உள்பட) சீராக அமைய தீர்மானம் நிறைவேற்றிச் செயல்படுத்தலாமே.

போடுங்கய்யா தீர்மானம்-3

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு



- ஆர்.வெங்கடேஷ் - எழுத்தாளர், பத்திரிகையாளர், சென்னை

அட்சய திருதியை முன்னிட்டு மாபெரும் தள்ளுபடி !



இச்சலுகை
01.05.10
முதல்
31.05.10



- வைர நகைகளுக்கு Perct 4000 தள்ளுபடி
- 7 கல் வைத்தோடு - 25000 முதல்
- வைர மூக்குத்தி 1700 முதல்
- பேன்சி வைரமோதிரம் + பேன்சி Ear + பேன்சி டாலர் 4500 முதல்
- அனைத்து வைரங்களும் VVSEF கலர்
- திருப்பி தரும்பொழுது வைரத்திற்கு மட்டும் 100% அன்றைய மார்கெட் விலை
- 500 முதல் 5000 வரை மாத சீட்டு + இரட்டிப்பு போனஸ்
- அட்சய திரிதியை அன்று வைரம் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நகை பெட்டி வழங்கப்படும்.

Sri Palsani Jewels

110, Dr. Radha Krishnan Road, (Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036 | www.sripalsanijewels.net

Shivaa

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka